கல்கி

KALKI 23-11-1975

75 காசு

சிறப்புப் பேட்டி :
ஜேசுதாஸ்





கல்கி


ராக்ஷஸ
கார்த்திகை 7

o

நவம்பர் 23
1975

o

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.




◀ இதில் மொத்தம் எத்தனை வட்டங்கள் உள்ளன எண்ணிப் பாருங்கள்.

(விடை : [illegible] 51)

இங்குள்ள ஆறு படங்களில் ஒன்றே ஒன்று மட்டும் மற்றவைகளிலிருந்து மாறுபட்டிருக்கிறது. அது எந்தப் படம் என்று கூற முடியுமா? ▶

(விடை : [illegible])



ஒவ்வொரு நாளும் உங்கள் சருமம் சிறிது ஈரப்பசை - யையும், சிறிது இளமையையும் இழக்கின்றது.



புதிய ஜான்ஸன்ஸ்* பேபி லோஷன் ஒவ்வொரு நாளும் ஏற்படுகின்ற அந்த இழப்பை ஈடுசெய்கின்றது.

ஒரு பெண்மணியின் விலையில்லாப் பொக்கிஷம் அவளது சருமம். எனினும், வயதாக ஆக, அதை அழகாகவே வைப்பது கடினமாகும். வருங்காலத்தில் உங்கள் சருமத்தை அழகாக வைக்கவேண்டுமானால், அதை இன்று முதலே நன்று பராமரிக்கவேண்டும். ஆகையால்தான் உங்களுக்குத் தேவை புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன். இந்த விசேஷ அழகு லோஷன் சருமத்திற்கு இன்றியமையாத ஈரப் பசையை நிலை நிறுத்துகிறது.

அதோடு, கடுமையான குளிர் மாதங்களில் உங்கள் சருமத்தை மிருதுவாகவும், இளமையுடனும், அழகொளி வீசும்படியும் வைக்கிறது— ஆண்டு முழுவதும் கூட. எனவே, ஒவ்வொரு காலையிலும் இரவிலும் புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன் உபயோகியுங்கள். உங்கள் முகம், கழுத்து மற்றும் கைகளில் உபயோகித்து, உங்கள் சருமத்திற்குப் பனிபோன்ற புதுமையை அளித்திடுங்கள்.



புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன்

உங்கள் சருமத்தை மிருதுவாக, இளமை தவழ, அழகொளி வீச வைக்கின்றது.

இந்திரா

சுப்ரீம் கோர்ட்டில் நடந்த வழக்கில் ஸ்ரீமதி இந்திராவின் சார்பில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

அவருக்கும் நாட்டுக்கும் சோதனையான ஒரு கால கட்டத்தில் அவர் காட்டிய தீரமும் உறுதியும் தன்னம்பிக்கையும் வியப்புக்கு உரியன.

வாழ்த்துகிறோம்.

அலகாபாத் தீர்ப்பை சுப்ரீம் கோர்ட் மாற்றி அமைத்தது என்று சொன்னால் மட்டும் போதாது. அந்தத் தீர்ப்பை மாற்றுவது சுப்ரீம் கோர்ட்டுக்கு எளிதாகுமாறு தேர்தல் சட்டங்களில் சில அலகாபாத் தீர்ப்புக்குப் பிறகு மாற்றியமைக்கப்பட்டன என்பதை யும் கூற வேண்டும்.

அலகாபாத் தீர்ப்புக்குப் பிறகு சில ஜனநாயக தார்மிக மரபுகள் புறக்கணிக்கப்பட்டன என்பதைவிட புதிய ஜனநாயக, தார்மிக மரபுகள் தோற்றுவிக்கப்பட்டன என்று சொல்வதே இன்றையச் சூழலுக்கு ஏற்றது.

சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பில் கவனத்துக்குரியது, அரசியல் சாசனத்துக்குக் கொண்டுவரப்பட்ட 39வது திருத்தத்தின் நாலாவது ஷரத்து செல்லாது என முடிவானதாகும்.

இத்திருத்தத்தின் மூலம், பிரதமர், ராஜ்ய சபை—லோக சபை சபாநாயகர்கள் ஆகியோர் மீது தேர்தல் வழக்குகள் ஏதும் தொடர முடியாதபடி பாதுகாப்புத்தர உத்தேசிக்கப்பட்டிருந்தது.

இது ஜனநாயக கோட்பாட்டுக்கும் அனைவருக்கும் சம நீதி என்ற அரசியல் சாசனத்தின் உறுதி மொழிக்கும் முரணானது என்ற அளவில் சுப்ரீம் கோர்ட் இந்தத் திருத்தத்தை நிராகரித்துவிட்டது.

இதன் மூலம் பாரதத்தின் மிக உயர்ந்த நீதி மன்றம் தனது சுதந்திரத் தன்மையை உலகுக்கு நிரூபித்துள்ளது.

தேர்தல் வழக்கு இந்திரா அவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப் பாகிவிட்டதால் இனி அவர் முன்னெப்போதையும்விட உறுதியாக வும் தன்னம்பிக்கையுடனும் நாட்டின் பல்வேறு பிரச்னைகளை அணுகி தீர்வு காண முயல்வார் என நம்பலாம்.

அத்துடன் விரைவில் சகஜ நிலை தேசத்தில் தோன்ற வழி வகுப்பார் என்றும் ஜனநாயகத்தின் எல்லா அங்கங்களும் சுதந் திரமாகவும் பொறுப்புணர்ச்சியுடனும் செயல்பட ஆவன செய்வார் என்றும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

கல்கி

மலர் 35

இதழ் 17

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்

பல்லவ எமன்!

சென்ட்ரல் ஸ்டேஷனில் புகுந்து மூவரைப் பலி வாங்கிப் பதினேந்து பேரைக் காயப்படுத்தியது பல்லவன் போக்குவரத்து எமன் ஒன்று.

மூவர் உயிர் விட்டதும் சுற்றத்தார் கண்ணீர் உகுத்ததும் வீண் போகாது, பல்லவன் போக்குவரத்துத் திருந்துமேயானால்.

ஆனால் அதற்குரிய அறிகுறி ஏதும் காணப்படாதது வருத்தத் தைப் பன்மடங்காக்குகிறது.

அமைச்சர் ராஜாராம் சட்ட சபையில் பேசுகையில், "திடீ ரென்று பிரேக் பழுதாகிவிட்டது. இதை எப்படி எதிர்பார்க்க முடியும் ?" என்று கேட்டிருக்கிறார்.

இந்த வாதம் ஏற்கத்தக்கது அல்ல. பிரேக் காலை வாரி விட்டு விட்டது என்றால் பேருந்தைப் பேணுபவர்கள் (*Maintenance Staff*) அதனை அதற்கு முன்பாகவே கைவிட்டு விட்டார்கள் என்று அர்த்தம்.

மடிந்தவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் நஷ்டஈட்டுத் தொகை உடனடியாகக் கிடைக்கச் செய்வதால் குடும்பத்தினரின்

துயர் துடைத்ததாகவும் ஆகாது, பேருந்துப் பயணிகளின் பயத்தைப் போக்கியதாகவும் ஆகாது.

பல்லவன் போக்குவரத்தில் விழிப்புணர்ச்சியும் சிரத்தையும் எல்லாப் பிரிவுகளிலும் எல்லா மட்டங்களிலும் தோன்றினாலே பயணிகளுக்கு ஆறுதல் கிடைக்கும். இதற்கு அமைச்சர் வழி காணட்டும்.

இயந்திரக் கோளாறு என்பதால் குறிப்பிட்ட இந்தப் பேருந்தின் ஓட்டுநர் பழி பாவத்திலிருந்து தப்பிவிடலாம். ஆனால் பழி பாவத்துக்குச் சற்றும் அஞ்சாது அலட்சியப் போக்குடன் நடந்து கொள்கிற வேறு பல ஓட்டுநர்கள் பல்லவன் போக்குவரத்தில் இருக்கிறார்கள்.

அரைகுறைப் பயிற்சியுடன் இவர்களுக்கு பேருந்தில் உயர்ந்த ஆசனத்தில் அமர்வதால் ஏற்படுகிற மனோதத்துவ ரீதியான ஆணவமும் சேர்ந்து கொள்கிறது. சாலை போக்குவரத்தின் சட்ட திட்டங்கள், பேருந்தைச் செலுத்துவதில் கவனிக்க வேண்டிய விதிமுறைகள் போன்ற எதுவும் இவர்களுக்குத் தெரிவதில்லை; தெரிந்தாலும் மதிப்பதில்லை.

இந்தச் சூழலில் இத்தனை குறைவான சாலை விபத்துக்கள் பேருந்துகளால் ஏற்படுகின்றனவே, அதுவே அதிசயம்தான், ஆண்டவன் அருள்தான்!

மனக் கசப்பை வளர்க்காதீர்கள்!

அண்மையில் பிரதமர், அகில இந்திய ரேடியோவில் ஹிந்தியில் நிகழ்த்திய உரைக்குப் பிறகு ஆங்கிலத்தில் அவரே பேசுவார் எனப் பலர் எதிர்பார்த்து ஏமாந்தார்கள். அது தான் போகட்டும் என்றால் ஹிந்தி உரையை அடுத்து அதன் ஆங்கில மொழிபெயர்ப்பை யாவது யாரேனும் படிப்பார்கள் எனக் காத்திருந்தோம், கைவிரித்து விட்டார்கள்.

இது நாள் வரையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஒரு நல்ல மரபு இன்று கைவிடப்பட்டுள்ளது. ஏராளமான மக்கள் ரேடியோவைத் திருப்பி வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்ததில் காலமும் மின்சாரமும் பணமும் நஷ்டமானதாக உணர்ந்தார்கள்.

ஹிந்தி வெறியர்களின் கை இன்று மத்திய அரசில் ஓங்கி இருப்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. தெரிந்தோ தெரியாமலோ இந்திரா அவர்களே இதற்கு இலக்காகியிருக்கிறார். ஹிந்தி திணிப்பாளர்கள் எதிர்பார்க்கிற தேசிய ஒருமைப்பாடு இதனால் வளரப் போவதில்லை, நிச்சயம். மனக் கசப்புதான் வளரும்.

ராஜாஜி சிந்தனை

கடவுளின் தன்மை


நான் குழந்தையாக இருந்த போது 1,2,3 என்று கற்றுக் கொடுத்தார்கள். அப்பொழுது அந்த இலக்கங்களு ்கு முடிவு இருக்கும் என்று எண்ணிவேன். ஆனால் அவற்றுக்கு முடிவு கிடையாது என்று இப்பொழுது அறிகிறேன். எந்த இலக்கமானாலும், அத்துடன் ஒன்றைச் சேர்க்கலாம். இதுதான் இறுதி இலக்கம் என்று கூற முடியாது. இப்படிக் கூட்டிக் கொண்டு போவதற்கு முடிவு கிடையாதது போலவே கழித்துக் கொண்டும் வகுத்துக் கொண்டும் போவதற்கும் முடிவு கிடையாது. எவ்வளவு பெரிய இலக்கத்தையும் பெருக்கச் சாத்தியமாவது போலவே எவ்வளவு சிறிய இலக்கத்தையும் பிரிப்பது சாத்தியமாகும். இதற்கு முடிவு ஏது? ஆகவே, கரும் பலகையும் பலப்பமும் கொண்டு கடவுளின் முடிவற்ற தன்மையை அறிந்து கொள்ளலாம்.

மேகமில்லாமல் உள்ள வானத்தை இரவில் பார்த்தால் எத்தனையோ நட்சத்திரங்கள் காணப்பெறுகின்றன. தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் பார்த்தால் வானத்தின் ஒரு சிறு பகுதியில் மட்டுமே சாதாரணமாகக் கண்ட அத்தனை நட்சத்திரங்களையும் பார்க்கலாம். அது போல் பிரபஞ்சம் எல்லையற்றது. எதையும் முற்றிலும் அறிய முடியாது என்று காண்பதே அறிவிலும் அறிவாகும். எதையும் முற்றிலும் அறிய முடியாது. ஏதோ அறைகுறையாகவே அறிய முடியும். ஆழ்ந்து ஆராய்ந்தால் மிகத் தெளிவான விஷயம்கூடப் பரம ரகசியமாகத் தோன்றும்.

—சமயம் என்ற கட்டுரையில்



முதல்வர் பதவி
'பல்'லவன்



ஒரு நாளைக்கு ஒரு ரூபாயை ஒதுக்கி உங்கள் கவலைகளைப் போக்குங்கள்

வெகு சீக்கிர மென்றோ, தாமதமாகி விட்ட தென்றோ எண்ண வேண்டாம். ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் என்று சிறிய அளவில் கூட நீங்கள் சேமிக்கத் தொடங்க காலம் கடக்கவில்லை. சீக்கிரத்தில் உங்கள் சேமிப்பு உங்களுக்கு பாதுகாப்புடன், மகிழ்ச்சிகரமான நிதியையும் அளிக்கிறது.

சேமிப்பதற்கு யூகோபாங்க் உங்கள் அருகாமையில் உள்ள வசதியான பாங்க்

விவரங்களுக்கு உங்கள் அருகில்
உள்ள யூகோ பாங்க் கிளையை
அணுகவும்

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

UCOC-52A TAM



புராண கைங்கர்யம்

ஜகத்குரு
ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசார்ய
ஸ்வாமிகள்

3

புராணங்களிலேயே ஒன்றுக்கொன்று வித்தியாசமாக சிவன்தான் உசத்தி என்றும், விஷ்ணுதான் உசத்தி என்றும் காட்டும்படியான கதைகள் வருகின்றனவே என்று கேட்கலாம். இதை எல்லாம் அந்தந்தக் குறிப்பிட்ட சமயத்தில் ஒன்றிடமே இதுதான் பரமாத்மா என்று நாம் ஆழமாக ஈடுபட்டு நிற்பதற்காகச் சொன்னது என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். இதை ''ந ஹி நிந்தா நியாயம்'' என்று சொல்வார்கள். அதாவது ஒன்றைத் தாழ்த்தியது போல் சொன்னது உண்மையில் அதை நிந்திப்பதற்காக இல்லை; இன்னொன்றை இதுவே சகலமும் என்று கெட்டியாகப் பிடித்துக் கொள்ளச் செய்வதுதான் இதன் உத்தேசம் என்று அர்த்தம்.

ஒரே பரமாத்மாதான் பல தேவதாமூர்த்திகளாகியிருக்கிறார். ஒவ்வொருத்தனுக்கு ஒவ்வொரு மூர்த்தியிடம் அலாதிப் பிடிமானம் உண்டாகிறது. அவனவனுக்கும் அந்தப் பிடிப்பையே உறுதிப்படுத்திக் கொடுப்பதற்காக பரமாத்மாவே தம் ஸ்வரூபத்தில் ஒன்றை இன்னொன்றிடம் ஒரு சமயத்தில் குறைத்துக் கொள்கிறார். தஞ்சாவூர் சீமையிலேயே எடுத்துக் கொண்டால்: திருக்கண்டியூரில் பரமசிவனை மகாவிஷ்ணுவுக்கு முன்னால் குறைத்துக் கொள்கிறார்; பிரம சிரசைக் கிள்ளியதால் பரமேசுவரனுக்கு ஏற்பட்ட சாபத்துக்கு மகாவிஷ்ணுவிடம் சாப விமோசனம் பெறுகிறார். அடுத்தாற்போல் திருவீழிமிழலையில் அந்த மகாவிஷ்ணு பரமசிவனுக்கு முன்னால் குறைந்தாற்போல் இருக்கிறார். அங்கே விஷ்ணுவே சிவனுக்குப் பூஜை பண்ணுகிறார். ஒவ்வொரு கமலமாக சிவ ஸஹஸ்ர நாமம் சொல்லி அர்ச்சனை செய்கிறார். கடைசியில் ஒரு கமலம் குறைகிறது. உடனே புண்டரீகாக்ஷனை (தாமரைக் கண்ணனை) பெருமான் தம் கண் ஒன்றையே பறித்து ஈசுவரனுக்கு அர்ச்சனை செய்கிறார். ஈசுவரன் பிரசன்னமாகி அவருக்குச் சக்கரம் வழங்குகிறார். இங்கே 'நேத்ரார்ப்பணேச்வரர்' என்றே ஈச்வரனுக்குப் பெயர். கண்டியூரில் பெருமானுக்கு 'ஹர சாப விமோசனர்' என்று பெயர். இந்தக் கதையைக் கேட்கிறபோது பெருமான் மகா பாபத்தையும் சாபத்தையும் போக்குகிற பரம கருணாமூர்த்தி என்ற பாவத்தை, சாரத்தைத்தான் நாம் கிரகிக்க வேண்டும். அப்படியே திருவீழிமிழலைப் புராணத்தில், தன் கண்ணைக்கூடத் தயங்காமல் கொடுக்கிறதுதான் பக்தி என்னும் சாரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

முன்பெல்லாம் லாந்தர் விளக்குகள்தாம் இருந்து வந்தன. அதில் நாலு பக்கம் கண்ணாடி போட்டதும் உண்டு; முப்பட்டை மாதிரி மூன்று பக்கமும் கண்ணாடி போட்டது மாதிரியும் உண்டு. நாம் இந்த முப்பட்டை லாந்தரைப் பார்ப்போம். கண்ணாடிக்குள்ளே விளக்கு ஏற்றி வைத்திருக்கும். அதன் ஒளி மூன்று பக்கத்தாலும், கண்ணாடி வழியாக வெளியே வரும். சில சமயங்களில் அலங்காரமாக, இந்தக் கண்ணாடி ஒவ்வொன்றுக்கும் ஒரு வர்ணம் பூசியிருப்பார்கள். உள்ளேயிருக்கிற ஒரே ஒளி அந்தந்தப் பக்கத்துக் கண்ணாடி வழியாக வருகிறபோது அதன் வர்ணமாகத் தெரியும். சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்று மூன்று காரியங்களை ஒரே மகாத்மா பண்ணுகிறது. ஒரே சைதன்யம் (அறிவொளி) தான் மூன்றுக்கும் காரணம். அந்த சைதன்யம் முப்பட்டை லாந்தருக்குள் இருக்கிற விளக்கு மாதிரி.

மூன்று பட்டையில் ஒன்று சிவப்பு. அது தான் சிருஷ்டி. ஸ்பெக்ட்ரோஸ்கோப்பில் சுத்த வெளிச்சத்திலிருந்து சிவப்பைப் பிரித்தால், பாக்கி ஆறு கலர்களும்கூடப் பிரிந்து வந்துவிடும். ஒன்று பலவாக ஆகிற சிருஷ்டி இதுதான். அதனால்தான் பிரம்மாவைச் சிவப்பு நிறமாகச் சொல்வது. முப்பட்டைக் கண்ணாடியில் இன்னொன்று நீலம். ஸயன்ஸ்படி நிற மாலையின் கடைசியில் உள்ள 'வயலெட்' அதுதான். ஆரம்பம் சிவப்பு (Infra Red). முடிவு வயலெட் (Ultra Violet) — சிருஷ்டிக்கப்பட்ட லோகத்தையெல்லாம் பரிபாலித்துக் கொண்டிருக்கும் போதே, 'இந்த லோகம் என்பது தன்னில் தானே நிறைந்த பூர்ண சத்தியம் இல்லை; இது பரமாத்மாவின் வேஷம்தான். அவருடைய லீலைதான்' என்று ஞானத்தினால் காட்டிக் கொண்டிருக்கிறவர் மகாவிஷ்ணு. அந்த ஞான அக்னியில் லோகமெல்லாம் கரியாகிறது. ஒரு வஸ்து அடியோடு நீற்றுப் போய் விடாமல், தன் ரூபத்தோடேயே, ஆனால் தன் வர்ணத்தை இழந்து, 'கரிக்கட்டையாக நிற்கிற நிலை இது. லோகம் என்று ஒன்று இருக்கவும் இருக்கிறது; ஆனால் அதன் தனி குணம் — மாயை — எரிந்து, கரிந்து அதுவும் விஷ்ணு மயமே என்று தெரிகிறது. 'சர்வம் விஷ்ணு மயம் ஜகத்'. கரியான், நீலமேனியான் என்றெல்லாம் விஷ்ணுவைச் சொல்கிறோம். நீலம், கறுப்பு, வயலெட் எல்லாம் கிட்டக் கிட்ட இருக்கிற வர்ணங்கள். பரமாத்மா முத்தொழிலுக்காக ஒரு முப்பட்டை லாந்தர் மாதிரி இருக்கிறபோது நீலப் பட்டை வழியாக உள்ளேயிருக்கிற ஒளி வருகிறபோது அதை விஷ்ணு என்கிறோம்.

(தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள் ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது.]

ஆல்போல் தழைத்து...

எஸ்.வி.எஸ்.



சென்னை, அடையாற்றிலுள்ள தியஸாபிகல் சொஸைட்டியின் நூற்றாண்டு விழா டிசம்பரில் கொண்டாடப்பட விருக்கிறது. உலகமெங்கிலுமிருந்து சுமார் 7000 அங்கத்தினர்கள் இங்கு கூடுகிறார்கள். பத்து நாள் அறவுரைகளும், விவாதங்களும் நடக்கும். இச்சங்கம் பாரதத்துக்குச் செய்திருக்கும் பணி மகத்தானது. டாக்டர் அருண்டேல், ருக்மிணி தேவி, ஸ்ரீராம், கஸின்ஸ் தம்பதியர் போன்றவர்கள் இச்சங்கத்தின் உறுப்பினர்களாக இருந்து ஆற்றிய பணி எவ்வளவோ. தத்துவத் துறையில், கல்வித் துறையில், கலைத் துறைகளில் இச்சங்கம் பணியாற்றியுள்ளது. இந்தியாவில் முதல் ஹரிஜனப் பள்ளி கர்னல் ஆல்காட் ஏற்படுத்தியதுதான். இத்தகையதோர் புகழ்பெற்ற சங்கத்தின் தோற்ற வரலாற்றையும், பணியையும் ஓரளவு இங்கே பார்க்கலாம்.

* * *

ஹிந்துவாகப் பிறந்தவனுக்குக் காசி எப்படியோ, முஸ்லீமாகப் பிறந்தவனுக்கு மெக்கா எப்படியோ அப்படி உலக பிரும்மஞானிகளுக்கு அடையாறு. தியாஸபிகல் சங்கம் உலகில் ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ளது. 1200 கிளைகள் உள்ளன. 42,000க்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் உள்ளார்கள். இவர்களுக்கெல்லாம் தமிழகம் எங்கிருக்கிறது என்று தெரியாமல் இருக்கலாம்; சென்னை எங்கிருக்கிறது என்பதுகூடத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் ''அடையாறு'' என்ற மாத்திரத்தில் அவர்கள் உள்ளங்களில் புனிதமானதொரு கிளுகிளுப்பை உணர்வார்கள். அங்குதான் பிரும்மஞான சங்கத்தின் உலகத் தலைமை அலுவலகம் உள்ளது! நியூயார்க் நகரில் சரியாக நூறாண்டுகளுக்கு முன்னர் 1875 நவம்பர் 17ம்





தேதி ஜனித்த தியாஸாபிகல் சங்கம், சென்னை அடையாற்றில் தழைத்து, பல்கி, பெருகி உலகமெங்கும் விழுதுகள் விட்டுப் பல புயல்களுக்கு ஈடுகொடுத்து நூற்றாண்டுகளை வெற்றிகரமாகக் கடந்து, அடுத்த நூறாண்டு களுக்கு என்ன பணி செய்யலாம் என்ற ஆவ லுடன் எதிர்நோக்கி நிற்கிறது.

தியஸாபிகல் சங்கம் அமெரிக்காவில் ஜனித்த வரலாறே மிக ருசிகரமான விஷயம். வெர்மாண்ட் மாநிலத்தில் சிட்டன் டன் என்ற ஊரில் வயல்புறத்தையொட்டிய ஒரு வீடு. இங்கே உருவெளித் தோற்றமாக இறந்தவர்கள் தங்களது இயல்பான உடையி லும் நடையிலும் வருகிறார்கள் என்றும் அவர் களை யாரும் பார்க்கலாம் என்றும் செய்தி வந்தது. அப்போது, நியூயார்க் நகரில் வழக் கறிஞராகப் பணியாற்றி வந்த கர்னல் எச். எஸ். ஆல்காட் என்பவருக்கு மேற் கூறிய செய்தி பெரும் ஆர்வத்தைக் கிளறி விட்டது. உடனே பல நூறு மைல்களுக்கு அப்பாலிருந்த அந்த வீட்டுக்கு விரைந்து சென்றார். பத்திரிகையில் வந்த செய்தியைத் தம் கண்களாலேயே கண்டார். பன்னிரண்டு வாரங்கள் பார்த்திருக்கிறார். தாம் கண்ட ஆவி உருவங்களைப் பற்றிய செய்திகளைப் படத் துடன் வாரத்துக்கு இரு முறை 'டெய்லி கிராஃபிக்' என்ற பத்திரிகையில் எழுதி வந் தார். இந்தக் கடிதங்கள் மாடம் ப்ளா வட்ஸ்கி என்ற ருஷ்ய மாதின் கவனத்தைக் கவர்ந்தன. அவரும் இந்த ஆவி உருவங்களைக் காண வந்திருந்தார். ஆல்காட், அந்த அம்மையாரிடம் பேச்சுக் கொடுக்கத் தொடங் கினார். அம்மையார், தம்முடன் பேச வந் திருப்பவர் கர்னல் ஆல்காட்தான் என்பதைத் தெரிந்து கொள்ளாமல், "நான் இங்கு வரவே தயங்கினேன். ஏனெனில், இங்கு ஆல்காட் இருந்து அவர் கண்ணில் பட்டு, அவர் என்னைப் பற்றி டெய்லி கிராஃபிக்கில் எழுதித் தொலைத்தாரானால்.....!" என்றார்.

"உங்கள் பெயர் பத்திரிகையில் அடிபடு வதை நீங்கள் விரும்பவில்லையானால், நிச்சய மாகக் கர்னல் ஆல்காட் உங்களைப் பற்றி எழுதமாட்டார்!"

"எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்லு கிறீர்கள்?"

"ஏனென்றால் நான்தான் கர்னல் ஆல் காட்!"

இப்படி அவர்களிடையே தொடங்கிய பரிச்சயம் வளர்ந்து அவர்களைத் தியஸாபிகல் சொஸைட்டியின் ஸ்தாபகர்களாகப் பெரும் பணியாற்ற வைத்தது.

ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு இச்சங்கத்தின் தலைமைச் செயலகம், அடையாற்றில் நிறுவப் பட்டது. இங்கிருந்து பாரத நாட்டின் வேத கால ஞானத்துடன் உலக சமய ஞானத்தை யும், ஆத்மீக அனுபவங்களையும் உலகம் முழு தும் பரப்பத் தொடங்கினர். அடையாற்றில் உள்ள பிரம்ம ஞான சங்கம், இந்திய பிரம்ம ஞான சங்கம் அல்ல; உலக நாடுகளில் உள்ள அத்தனை சங்கங்களின் தலைமைச் செயலக மாகும். இந்திய நாட்டின் பிரம்ம ஞான சங்கம் இருப்பது வாரணாசியில். அதன் இன்றையத் தலைவர் ஸ்ரீமதி ராதா ப்ருனியர். அகில உலகத் தலைவர் ஜான் கோட்ஸ்.

* * *

மேலே கொடுத்த விவரங்களைப் படித்து விட்டு, பிரம்ம ஞான சங்கம் ஆவி, பேய், பிசாசு என்பவற்றில் நம்பிக்கை கொண்ட அரைப் பைத்தியங்களின் கூட்டம் போலும் என்று யாரும் எண்ணிவிட வேண்டாம். அத்தனை பேரும் நன்கு படித்த பகுத்தறிவு வாதிகள்.





1. பிரும்மஞான சபையின் ஒரு கட்டிடம்.
2. இன்றைய தலைவர் ஜான் கோட்ஸ்.
3. உலகப் பிரசித்திபெற்ற ஆலமரம்.
4. ஸ்தாபகர்கள் : பிளவட்ஸ்கி, ஆல்காட்.
5. அன்னிபெஸண்ட் அம்மையார்.

அப்படிப்பட்டவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மேல் நாட்டில் எழுந்த இரண்டு வேகங்களைக் கண்டு பொறுக்காமல் எதிர்த்ததன் விளைவே இச்சங்கம். ஒன்று விஞ்ஞான சம்பந்தப்பட்டது. மற்றது கிறிஸ்து சமயம் பற்றியது. கட்டுக்கடங்காத விஞ்ஞான வளர்ச்சியும் ஆராய்ச்சியும் மக்களிடை லோகாயத உணர்ச்சியைத்தான் வளர்த்து வந்தது.

அதே சமயம் கீழ் நாடுகளின் புத்த சமய, இந்து சமய கோட்பாடுகள் பலப் பல பிரச்னைகளுக்கு மிகத் தெளிவான விளக்கங்களை எடுத்துரைப்பதைக் கண்டு வியந்து போயினர். முக்கியமாக ஹிந்து சமய மறு பிறவிக் கொள்கையும், கர்மவினைக் கோட்பாடும் அவர்களுக்குப் பெரும் ஒளிவிளக்காக இருந்தன. கிறிஸ்து சமயப் பிரசாரகர்கள் இம் மதத்தினரை, ''பாவிகள் என்றும் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தால்தான் விமோசனம் பெற முடியும்'' என்றும் பேசுவதும் மத மாற்றம் செய்வதும் பிரும்மஞான சங்கத்தாருக்கு அருவருப்பாக இருந்தது. அவர்களைக் கண்டித்தார்கள். இவற்றின் காரணமாக, மேற்கத்திய கிறிஸ்துவ மத அதிகாரிகளின் வெறுப்புக்கும் கண்டனத்துக்கும் ஆளாயினர். எனினும் தாம் கண்ட உண்மையில் உறுதியாக நின்றனர்.

கர்னல் ஆல்காட், ஹிந்து மதம் மட்டுமின்றி, புத்த மதம், சமணம், ஜோரா ஸ்திரியன் மதம், இஸ்லாம் கன்பூஷியஸ் ஆகிய அத்தனை கீழை நாட்டு மதங்களும் பலப் பல அரிய கருத்துக்களையும் உயரிய வாழ்க்கை முறைகளையும் கொண்டிருக்கையில் அவற்றை நிந்திப்பது தவறு என்று உணர்ந்தார். பல்வேறு சமயங்களை ஒப்பு நோக்கிக் கற்க முயல வேண்டும் என்று வற்புறுத்தினர். அதற்காக அடையாற்றில் பல்வேறு சமயங்களைச் சார்ந்த நூல்களைப் பாரதமெங்கும், கீழ் நாடுகள் எங்கும் சுற்றிச் சேகரித்தார். இன்று அடையாற்றில் உள்ள தியஸாபிகல் சொஸைட்டி நூலகம், சமயங்களை ஒப்பு நோக்கி ஆராய்ச்சி செய்வோருக்கு அரிய கருவூலமாக விளங்குவது என்று உலகப் புகழ் அடைந்துள்ளது.

ஆனால் அன்று கீழ் நாடுகளில் என்ன நிலைமை? காலனி ஆதிக்கம் உச்ச கட்டத்தில் இருந்தது. இந்தியா, இலங்கை, பர்மா முதலிய நாடுகளில், மக்கள் அடிமைப்பட்டு, தன்மானம் இழந்து, ஊமையர்களாய், குருடர்களாய், செவிடர்களாய் வாழ்ந்தனர். ஹிந்துக்கள் தாங்கள் பிறந்த சமயத்தின் உயர்வை அறியாமல் கிறிஸ்தவர்களைப் போல் உடை அணிவதும், கிராப் வைத்துக் கொள்வதும், மதம் மாறுவதுமாக இருந்து வந்தார்கள். இதே நிலவரம்தான் இலங்கையிலும். புத்த மதத்தைச் சேர்ந்த சிங்களவர்கள், கிறிஸ்தவ மதத்துக்கு ஓடிக் கொண்டிருந்தார்கள். இத்தகைய சூழ்நிலையில், தியஸாபிகல் சொஸைட்டி ஆற்றிய பணி மகத்தானது.

அச்சங்கத்தின் ஸ்தாபகரும் முதல் தலைவருமான கர்னல் ஆல்காட், இலங்கையில் புத்த சமயத்தின் தலைவர்களை யெல்லாம் ஒன்று கூட்டி, ஒற்றுமை வளர்த்து, புத்த மதக் கோட்பாட்டைக் கேள்வி – பதிலாக யாத்து அவர்களுக்கு அளித்தார். புத்த சமயத்தாருக்கு என்று பல பள்ளிக்கூடங்களைத் தொடங்கினர். இப்பணிகள் எல்லாம் புத்த சமயத்தாரிடையே புதிய எழுச்சியை உண்டாக்கி, தங்கள் மதத்திலே புதிய பற்றுதலை வளர்த்தன.

இப்படிப் புத்த மதத்தினருக்குக் கர்னல் ஆல்காட் ஆற்றிய தொண்டைப் போலவே நமது பாரதத்தில் ஹிந்துக்களுக்கு அவருக்குப் பின்வந்த அன்னிபெஸண்ட் அம்மையார் மகத்தான பணியாற்றினர்.

அவர் பாரத மக்களின் சுதந்திர உணர்ச்சியைத் தட்டி எழுப்புவதிலும், போராடுவதிலும் முன்னணியில் நின்றார். காங்கிரஸில் சேர்ந்து தலைமை வகித்தார். சிறைவாசம் அனுபவித்தார். பிறந்தது பிரிட்டனாயினும் இந்தியாவையே தமது தாயகமாகவும் ஹிந்து சமயமே தமது சமயமாகவும் ஏற்றுக் கொண்டார். காசியில் ஹிந்துக் கல்லூரி தொடங்கினர். அதுவே பின்னாளில் ஹிந்து சர்வகலா சாலையாகப் பரிணமித்தது.

ஹிந்து சமய தத்துவங்களையும், உபநிடதங்களையும் விளக்கி அவர் எழுதிய கட்டுரைகள் ஹிந்துக்களுக்கே புதியதோர் உலகத்தில் பிரவேசிப்பது போன்ற உணர்ச்சியை ஊட்டின. அவரது பகவத்கீதை ஆங்கில மொழிபெயர்ப்பு பல லட்சம் பிரதிகள் விற்றுவிட்டன. இன்றும் உலகெங்கிலுமுள்ள மக்கள் ஆர்வத்துடன் வாங்கிப் படிக்கின்றனர்.

* * *

தியஸாபிகல் சொஸைட்டியினர், பொதுவாக உள்நாட்டு அரசியலில் பங்குகொள்ளக் கூடாது என்பது மரபு. கர்னல் ஆல்காட் இலங்கையில் கல்வித் துறையில் செய்த மாற்றங்களும், அன்னிபெஸண்ட் அம்மையார் இந்திய அரசியலில் பங்கு கொண்டதும் தத்தமது சொந்த ஹோதாவில்தான். சொஸைட்டிக்கு எவ்வித தொடர்பும் பந்தமும் இடையாது. என்றாலும் அன்னிபெஸண்ட் அம்மையாரின் அரசியல் பிரவேசம், பாரத நாட்டின் மிகச் சிறந்த அறிவாளிகளைப் பிரும்ம ஞான சபையின்பால் இழுத்தது என்பதை மறுப்பதற்கில்லை. சொஸைட்டிக்கு அளவுகடந்த செல்வாக்கும் பிராபல்யமும் ஏற்பட்டது !

தியஸாபிகல் சொஸைட்டியின் லட்சியங்கள் :

1. சாதி, சமய, நிற, இன, பால் வேறுபாடின்றி உலக மக்கள் அனைவரும் சகோதரத்துவம் பாராட்டும் ஒரு கேந்திரத்தை நிறுவுதல்.

2. தத்துவம், சமயம், விஞ்ஞானம் ஆகியவற்றை ஒப்பிட்டு ஆராய ஊக்கம் அளிப்பது.

3. இயற்கையின் விளக்கப்படாத நியதிகளையும், மனிதனில் மறைந்து கிடக்கும் சக்திகளையும் வெளிக் கொணர்வது.

இக்குறிக்கோள்களைச் சென்ற நூறாண்டுகளாக, எத்தனையோ எதிர்ப்புக்களிடையில் வெற்றிகரமாகச் சாதித்து வருகிறார்கள்.

தியஸாபிகல் சொஸைட்டியின் ஆலமரம் போல் இந்தக் குறிக்கோள்களும் தழைத்துப் படர்ந்து பயன் தருகின்றன.



க்ளாக்ஸோ
ஸன்ஷைன்
குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கு
சுபோத்—உடலிலே சுத்தமான சிவப்பு இரத்தம்.
விவேக்—பாலருந்தும் வேளையை ஆவலுடன் நோக்குகிறான்.
SUNSHINE
Glaxo
BUILDS BONNIE BABIES
ENRICHED WITH VITAMINS
க்ளாக்ஸோ குழந்தை. கொழுகொழுவென்ற குழந்தை
Interpub/GL/2/75/Tam



Creative Unit-A 1981-Tam

ஒருபிடி அவல்!

"வம்பன்"



சென்னை கம்பர் கழகம், ஐம்பது ரூபாய் விலையில், கம்பராமாயணத்தை அத்தனை காண்டங்களையும் கொண்ட ஒரே புத்தகமாக மெல்லிய தாளில், வெளியிடத் திட்டமிட்டிருக்கிறது. இதற்குக் கிட்டத்தட்ட மூன்று லட்ச ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கிறார்கள். நிதி மிருந்தவர்களிடமிருந்து நிதி உதவி கோருகிறார்கள். பல செல்வந்தர்கள், அறக் கட்டளை நிறுவனங்கள் ஓரளவு முன்வந்துள்ளன. பல தெலுங்கர்களும் இம் முயற்சிக்கு நிதி உதவ முன்வந்திருக்கின்றனர். இப்புத்தகத்துக்கு இப்பொழுதே முன் பணம் செலுத்துபவர்களுக்கு விலை: ரூ. 50 தான். புத்தகம் வெளி வந்த பிறகு வாங்க விரும்புகிறவர்கள் எழுபத்தைந்து ரூபாய் செலுத்த வேண்டியதாகும்!

* * *

இப்புத்தக வெளியீட்டுப் பணியின் தொடக்க விழாவுக்குத் தலைமை வகித்த முதல்வர் திரு மு. கருணாநிதி அவர்கள், கம்பன் வகுத்த பாத்திரங்களுடன் தமக்கு உடன்பாடு இல்லையாயினும் கம்பர் தமிழைத் தாம் போற்றுவதாகக் கூறினார். விரைவில் கம்பன் புனைந்த பாத்திரங்களையும் அவர் உய்த்துப் போற்றும் காலம் வரும் என்று எதிர்பார்க்கிறோம். ஏனெனில், கம்பன் புனைந்த ராமனும் சீதையும், இராவணனும், கும்பகர்ணனும், குகனும் பரதனும்—யாவரும் தமிழர்களேயன்றி வேறல்ல. ''காவிரி நாடன்ன கழனி நாடொரீஇ'' என்று கோசலத்தைக் காவிரி பாயும் பொன்னி நாடாகத் தான் பார்த்தார் கம்பர் என்பார் ரஸிகமணி.

* * *

மேற்கண்ட விழாவில் பேசிய கவிஞர் கண்ணதாசன் உதிர்த்த சில ஹாஸ்ய வெடிகள் அவையோரை வயிறு குலுங்க சிரிக்க வைத்தன.

கவிஞர்கள் அதிகமாகப் பெண்களின் அழகையே வர்ணித்துப் பாடுகிறார்கள். கம்பர்கூட ராமரை வர்ணித்ததைவிட சீதையையே அதிகமாக வர்ணித்து எழுதியிருக்கிறார். இப்படிக் கவிஞர்கள் பெண்ணழகை அதிகமாக வர்ணித்து எழுதுவதின் காரணம் என்ன தெரியுமா? 'ஒரு கவிஞனுக்காவது அழகான மனைவி வாய்த்ததில்லை!' என்றார்.

* * *

எத்தனையோ உணவுப் பொருள்கள், நின்ற நிலையில் நிற்க, இந்த வெங்காயத்துக்கு அடித்த யோகத்தையும் பார்த்தீர்களோ — கிலோ நாலு ரூபாய்க்கு விற்கிறது!

இதற்குக் காரணம் வெங்காயம் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாவதுதான். ஐந்து கோடியே முப்பத்து நாலு லட்ச ரூபாய்க்கு அந்நியச் செலாவணி வாங்கித் தந்துள்ளது.

மலேசியா, சிங்கப்பூர், குவைத், துபாய், ஈரான், பஹ்ரீன் ஆகிய இடங்களுக்கு இந்திய வெங்காயம் பெருமளவுக்கு ஏற்றுமதியாகிறதாம்! இனி வெங்காய சாம்பார் கிராக்கியாகிவிடும்!

சில காலத்துக்கு முன் இப்படித்தான் வாழைப்பழ ஏற்றுமதி வர்த்தகம் அதிகரித்து இங்கே வாழைப் பழத்துக்குக் கிராக்கி ஏற்பட்டு விட்டது. அந்த விலை உயர்வு நமக்குப் பழக்கமாகிவிட்ட சமயத்தில் இப்போது வெங்காய விலை உயர்வு! இனி இதுவும் சில காலத்தில் பழகிப் போய்விடும்போலும்!

* * *

''பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?'' என்றார் கம்பர். ஆம், சிறிது காலம் பிரிந்திருந்த காதலர்கள் மீண்டும் சந்திக்க நேரிட்டால், பேச்சு எதற்கு? பேச்சே அநாவசியமாகிவிட்ட போது பரிசு அதைவிட அநாவசியம் என்பதை நிரூபித்துவிட்டார் எலிஸபெத் டெய்லர்.

சினிமா உலக தம்பதிகள் ரிச்சர்ட்பர்ட்டனும் எலிஸபெத் டெய்லரும் உலக மக்கள் வியப்புடன் நோக்கும் அதிசயக் காதலர்களாக விளங்கி வந்தனர். இவர்களிடை ஏதோ மனஸ்தாபம் ஏற்பட்டு விவாகரத்து செய்து கொண்டார்கள், சில மாதங்களுக்குமுன்பு. விவாகரத்து செய்து கொண்ட இக்காதலர்கள் அண்மையில் புனர் விவாகம் செய்து கொண்டார்கள். தமது ஆருக் காதலை ஸ்தூலமாக எடுத்தியம்ப, ரிச்சர்ட் பர்ட்டன் பல லட்சக் கணக்கான ரூபாய்மதிப்புள்ள வைர மோதிரத்தை எலிஸபெத்துக்குப் பரிசாக அளித்தார். தாங்கள் இரண்டாவது முறையாக விவாகம் செய்து கொண்ட இடமான போஸ்ட்வானா என்ற ஆப்பிரிக்க நாட்டுச் சிறிய ஊரில், ஏழை மக்களுக்காக ஓர் ஆஸ்பத்திரி நிறுவ அந்த மோதிரத்தைத் தானமாகக் கொடுத்து விட்டார் எலிஸபெத் டெய்லர்.



உம்மிடி சாரதி ஜுவல்லர்ஸ்

அளிக்கும்

நகை சேமிப்புத் திட்டம்

ரூ.3000, ரூ.1500 குருப்புகள்




பெரு மதிப்புக்குரிய ஆதரவாளர்களுக்கு உம்மிடி சாரதி ஜுவல்லர்ஸ் மிகப் பெருமையுடன் அளிக்கும் புதிய நகை சேமிப்புத் திட்டம். இரு வகை குருப்புகள்: ரூ. 3000, ரூ 1500. மாதத் தவணை ரூ. 200, ரூ. 100. இது 15 மாதத் திட்டம், ஒவ்வொரு குருப்புக்கும் மொத்த அங்கத்தினர்கள் 100 மட்டுமே. பிரதி மாதமும் 15 தேதி அளவில் அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்கள் மேற்கொண்டு மாதத் தவணைகளுக்கு பணம் செலுத்த வேண்டியதில்லை. வெற்றி பெற்றவர்கள் தங்கள் பணத்திற்குரிய தேவையான தங்க நகைகளையோ, வெள்ளிப் பொருட்களையோ தேர்ந்தெடுக்கலாம்.

அரிய பரிசு!

சேரும் மெம்பர்களுக்கு முதல் தவணை செலுத்திய உடனேயே ஒரு அழகிய வெள்ளி குத்துவிளக்கு பரிசாகக் கொடுக்கிறோம்.

ADWAVE-VSJ-303



மேற்கொண்டு விபரங்களுக்கு:

உம்மிடி சாரதி ஜுவல்லர்ஸ்

40. பாண்டி பஜார், மாம்பலம்.
சென்னை-600 017. போன்: 442500

- ஞாயிற்றுக்கிழமை கடை திறந்திருக்கும்.
- செவ்வாய்க்கிழமை விடுமுறை

நாற்பத்துமூன்றாம் அத்தியாயம்

புத்தர் சந்நிதி

சேனாதிபதி பரஞ்சோதி தம்முடன் வந்திருந்த வீரர்களுக்கு அதி விரைவாகச் சில கட்டளைகளை இட்டார். அவர்களில் நாலு பேரை மட்டும் தம்மைத் தொடர்ந்து வரும்படி ஆக்ஞாபித்து விட்டு அந்த வீட்டின் கொல்லை முற்றத்தை நோக்கி விரைந்து சென்றார். முற்றத்தின் மத்தியில் பவள மல்லிகை மரத்தின் அருகில் இருந்த கிணற்றண்டை சென்று உட்புறம் எட்டிப் பார்த்தார். கிணற்றின் சுற்றுச் சுவர் கொஞ்ச தூரம் வரையில் செங்கல்லால் கட்டப்பட்டிருந்தது. அதற்குக் கீழே பாறையைப் பெயர்த்துத் தோண்டியிருந்தது. தண்ணீர் மிக ஆழத்தில் இருந்தது.

நெஞ்சு திக்கு திக்கு என்று அடித்துக் கொள்ள, பரஞ்சோதி அந்தக் கிணற்றுக்குள்ளே கைப்பிடிச் சுவரைப் பிடித்துக்கொண்டு இறங்கினார். அவருடன் மற்ற நால்வரும் இறங்கினார்கள். செங்கல் சுவரைத் தாண்டிப் பாறைச் சுவரை அவர்கள் எட்டிய பிறகு மேடும் பள்ளமும் பொக்கையும் போழையுமாக இருந்தபடியால் இறங்குவது சுலபமாயிருந்தது. கிணற்றின் முக்கால் பங்கு ஆழம் இறங்கியதும் பரஞ்சோதி 'ஆ'! என்று ஆச்சரிய சப்தம் இட்டார். அங்கே பாறைச் சுவரில் ஒரு பெரிய போழை இருந்தது. அது உள்ளே ஆழமாகச் சென்றதோடு சிறிது தூரத்துக் கப்பால் ஒரே இருட்டாகவும் காணப்பட்டது. பரஞ்சோதி தம்முடன்

அமரர் கல்கி

சிவகாமியின் சபதம்



வந்த வீரர்களுக்குச் சமிக்ஞை செய்துவிட்டு அந்தப் போழைக்குள் புகுந்தார். ஓர் ஆள் படுத்து ஊர்ந்து செல்லும் அளவிலேதான் அந்தத் துவாரம் இருந்தது. ஆனால், சிறிது தூரம் அவ்விதம் ஊர்ந்து சென்றதும் துவாரம் பெரிதாயிற்று. இன்னும் சிறிது தூரம் உட்கார்ந்தபடி நகர்ந்து சென்ற பிறகு காலில் படிக்கட்டுகள் தென்பட்டன. நாலைந்து படிக்கட்டுகளில், இறங்கியதும் சமதளத்துக்கு வந்திருப்பதாகத் தோன்றியது. முதலில் சிறிது நேரம் ஒரே இருட்டாக இருந்தது. கண்கள் இருளுக்குப் பழக்கமானதும் கொஞ்சம் சுற்றுப்புறத் தோற்றத்தைப் பார்க்க முடிந்தது. பூமிக்கு அடியிலே பாறையைக் குடைந்து அமைத்த விஸ்தாரமான மண்டபத்தின் ஓரத்தில் தாம் நிற்பதைப் பரஞ்சோதி அறிந்தார். அவர் நின்ற இடத்துக்கு நேர் எதிரே ஒரு பெரிய புத்தர் சிலை காட்சியளித்தது. புத்தர் சிலையின் மேலே அழகிய வேலைப்பாடுள்ள விமானம் காணப்பட்டது. எதிரே இரண்டு வரிசைகளாகப் பெரிய பெரிய பாறைத் தூண்கள் – நன்கு செதுக்கிச் செப்பனிடாத பெருந்தூண்கள் – நின்றன. பரஞ்சோதியும் மற்ற இரண்டு வீரர்களும் அந்த மண்டபத்தில் அங்குமிங்கும் சுற்றியலைந்து, தூண் மறைவுகளிலும் மூலை முடுக்குகளிலும் தேடினார்கள். அங்கு மனிதர்கள் யாரும் தென்படவில்லை. ஆனால் ஒரு தூண் மறைவில் சில உடைகளும் ஆபரணங்களும் கிடந்தன. அவை சக்கரவர்த்திக்குரியவை என்று கண்டதும் பரஞ்சோதி அவ்விடத்தில் நாகநந்தி இராஜரீக உடைகளைக் களைந்து சந்நியாசி உடை தரித்திருக்க வேண்டும் என்று தீர்மானித்தார். ஆனால், நாகநந்தியும் அவருடன் சென்ற சிவகாமியும் எங்கே? அங்கிருந்து அவர்கள் மாயமாய் மறைந்திருப்பார்களா?

பரஞ்சோதியின் பார்வை தற்செயலாகப் புத்த பகவானுடைய சிலை மீது விழுந்தது. சட்டென்று அவருடைய மூளையில் ஓர் எண்ணம் உதித்தது. காஞ்சி இராஜ விஹாரத்தில் புத்தர் சிலைக்குப் பின்னால் இருந்த இரகசிய வழி ஞாபகத்துக்கு வந்தது. உடனே பரஞ்சோதி புத்தர் சிலையை நோக்கிப் பாய்ந்து சென்றார். ஆனால், இந்தச் சிலை பாறையின் பின் சுவரோடு ஒட்டியிருந்தது. சிலைக்குப் பின்னால் துவாரமோ இரகசிய வழியோ இருப்பதற்கு இடமே இல்லை.

பரஞ்சோதி பெரும் ஏமாற்றத்துக்குள்ளானார். ஆயினும் தாம் தேடும் வழியின் இரகசியம் இந்தச் சிலையிலேதான் இருக்கவேண்டும் என்ற எண்ணம் அவர் மனத்தை விட்டு அகலவில்லை.



'பிரபு! புத்த பகவானே! மகா விஷ்ணுவின் மாயாவதாரம் தாங்கள் என்று நான் கேள்விப்பட்டது உண்மையானால் இச்சமயம் எனக்கு வழிகாட்ட வேண்டும். தங்களுடைய பாதார விந்தமே கதி!' என்று நினைத்த வண்ணம் சேனாதிபதி புத்தர் சிலையின் பாதங்களைத் தொட்டார். தொட்டதுதான் தாமதம்; உடனே ஓர் அற்புதம் நிகழ்ந்தது. அதாவது புத்தர் சிலை தன் இடம் விட்டுப் பெயர்ந்து ஒரு பக்கமாகச் சிறிது நகர்ந்தது. பின்புறத்துப் பாறைச் சுவரிலே எதிர்பார்த்தபடி சுரங்க வழியும் காணப்பட்டது. 'ஆகா! புத்த பகவான் வழிவிட்டார்!' என்ற குதூகலமான எண்ணத்துடன் மற்ற வீரர்களுக்குச் சமிக்ஞை செய்துவிட்டுப் பரஞ்சோதி சுரங்க வழியில் பிரவேசித்து ஓர் அடி எடுத்து வைத்தார். அப்போது தம் எதிரிலே அந்தச் சுரங்க வழியிலே அவர் சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான காட்சி ஒன்றைக் கண்டார்.

ஒன்றன் பின் ஒன்றாகப் பல தீவர்த்திகள் அந்தக் குறுகிய சுரங்க வழியில் வந்து கொண்டிருந்தன. அவற்றை எடுத்துக் கொண்டு வந்த மனிதர்கள் கன்னங் கரிய கொள்ளிவாய்ப் பிசாசுகள் போலத் தோன்றினார்கள். அந்தப்



பயங்கர ஊர்வலத்துக்கு முன்னால் சிறிது தூரத்தில் தலை மொட்டையடித்த பிக்ஷு உருவம் ஒன்று தோளிலே ஒரு பெண்ணைத் தூக்கிப் போட்டுக்கொண்டு அதிவிரைவாக ஓட்டம் ஓட்டமாக வந்து கொண்டிருந்தது.

பரஞ்சோதிக்கு அப்படி வருகிறவர்கள் யார் என்ற விவரம் ஒரு நொடியில் விளங்கி விட்டது. புத்த பிக்ஷு சுரங்க வழியில் பாதி தூரம் போவதற்குள்ளே சத்ருக்னன் தன் ஆட்களுடன் மற்றொரு பக்கத்தில் புகுந்து வந்திருக்கிறான். அவனிடம் அகப்பட்டுக்கொள்ளாமல் தப்பிக்கப் புத்த பிக்ஷு திரும்பி ஓடி வருகிறார்.

பரஞ்சோதி மறு விநாடியே புத்த பகவான் காண்பித்த வழியிலிருந்து வெளியே வந்தார். அவரும் மற்ற



வீரர்களும் பாய்ந்தோடிப் பாறைத் தூண்களின் பின்னால் மறைந்து நின்றார்கள்.

அவ்விதம் அவர்கள் மறைந்து கொண்ட சிறிது நேரத்துக்கெல்லாம் நாகநந்தி பிக்ஷு புத்த பகவானுடைய சிலைக்குப் பின்புறமிருந்து வெளிப்பட்டார். தோள்மீது சிவகாமியைச் சுமந்து கொண்டு வந்தார். பரஞ்சோதியும் அவருடைய வீரர்களும் மூச்சுக்கூடக் கெட்டியாக விடாமல் அவர் என்ன செய்யப் போகிறார் என்று ஆவலுடன் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

நாகநந்தி புத்தர் சிலைக்கு எதிரில் சற்றுத் தூரத்தில் சிவகாமியைத் தரையிலே கிடத்திவிட்டு எழுந்தார். புத்தர் சிலையண்டை சென்று நின்றார். ஒரு கண நேரம் அவர் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்ததாகத் தோன்றியது. ஒரு தடவை சுற்று முற்றும் பார்த்தார். பிறகு, சிவகாமியின் அருகில் சென்று உட்கார்ந்தார்.

சுரங்க வழியை அடைத்து விடுவதுதான் அவருடைய நோக்கம் என்பது பரஞ்சோதிக்குப் புலப்பட்டு விட்டது. தம் அருகில் நின்ற வீரர்களுக்குச் சமிக்ஞை செய்துவிட்டு ஓரே பாய்ச்சலில் பிக்ஷுவின் அருகில் சென்றார். மற்ற வீரர்களும் வந்து சேர்ந்தார்கள். பிக்ஷுவின் இரு கரங்களையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். பிக்ஷு திரும்பி அவர்களை ஏறிட்டுப் பார்த்தார். இருட்டில் அவருடைய முகபாவம் ஒன்றும் தெரியவில்லை. ஆயினும், உடனே அவர் கூறிய வார்த்தைகள் அவர் மனநிலையை வெளிப்படுத்தின.

''அப்பா! பரஞ்சோதி! நீதானா? உன்னை எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். நான் தோற்றால் உன்னிடந்தான் தோற்க வேண்டுமென்பது என் மனோரதம். அது நிறைவேறி விட்டது!'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து நின்றார். எல்லோரும் மண்டபத்தின் நடு மத்திக்கு வந்தார்கள். நாகநந்தி பரஞ்சோதியை இரக்கம் ததும்பிய கண்களுடனே பார்த்து, ''அப்பனே! இன்னும் எதற்காக இவர்கள் என்னைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்? இனி எங்கே நான் தப்பி ஓட முடியும்? அந்தப் பக்கத்திலும் உன் ஆட்கள் வருகிறார்கள். இந்தப் பக்கமும் உன் ஆட்கள் நிற்கிறார்கள். என் ஆட்டம் பாட்டமெல்லாம் முடிந்துவிட்டது. இனிமேல் நீ சொன்னபடி நான் கேட்க வேண்டியதுதான். உன்னையும் ஆயனரையும் எப்படியாவது அஜந்தாவுக்கு வரச் செய்ய வேண்டும் என்று பார்த்தேன். அது முடியாமற் போயிற்று. அப்பனே! என்னை விட்டுவிடச்சொல்லு. நீ சொல்லுகிறதைக் கேட்டு அந்தப்படியே நடக்கச் சித்தமாயிருக்கிறேன்'' என்றார்.

இவ்விதம் நாகநந்தி கெஞ்சியது, பரஞ்சோதியின் மனத்தில் சிறிது இரக்கத்தை உண்டாக்கியது.

''பிக்ஷுவை விட்டுவிடுங்கள்!'' என்று தம் வீரர்களுக்குக் கட்டளையிட்டார். வீரர்கள் நாகநந்தியை விட்டு விட்டுச் சற்று அப்பால் சென்றார்கள்.

''பரஞ்சோதி! அந்தப் பழைய காலமெல்லாம் உனக்கு ஞாபகம் இருக்கிறதா? காஞ்சி நகரத்தில் நீ பிரவேசித்த அன்று உன்னைப் பாம்பு தீண்டாமல் காப்பாற்றினேனே? அன்று இரவே உன்னைச் சிறைச்சாலையிலிருந்து தப்புவித்தேனே? அதெல்லாம் உனக்கு ஞாபகம் இருக்கிறதா?''

இவ்விதம் பேசிக் கொண்டே கண் மூடித் திறக்கும் நேரத்தில் நாகநந்தி தமது இடுப்பு ஆடையில் செருகியிருந்த கத்தியை எடுத்தார்.

குழந்தைச் செல்வங்கள் எப்பொழுதும் முன்னணியில் நின்றிட அதிக சக்தியின் தேவையை நிறைவு செய்யுங்கள்

வகுப்பிலே இவள் படுசுட்டி
ஐஸ்க்ரீமை விட கணித
பாடமே அவளுக்கு
இனிப்பூட்டுகிறது.
அவளின் ரகசியம்;
போர்ன்விடா என்றாலே
இரட்டிப்பு சக்தி.



ஓட்டப் பந்தயத்தில்
புலி
ஓட்டமே
அவனுக்கு
நடை—பள்ளி
செல்லும் போது
கூட!



நீங்களும் உங்கள் குழந்தைக்கு நாள்தோறும் போர்ன்விடா கொடுங்கள்

உங்கள் குழந்தை முன்னணியில் நின்றிட
அதிக சக்தியின் தேவையை பூர்த்தி
செய்ய வல்லது மால்ட், பால்,சர்க்கரை,
கோகோ அடங்கியுள்ள போர்ன்விடா
வேயாகும். ஒவ்வொரு டம்ளரிலும்,
ஊட்டத்திற்கு அதி தேவையான புரதம்,
கார்போஹைட்ரேட்கள், கலோரிகள்
அடங்கியுள்ளது.
அதனாலேயே உங்கள் குழந்தைக்கும்
பிரதி தினமும் போர்ன்விடா கொடுங்கள்—
இரண்டு வேளைகளிலும். உங்களுக்கும்
அது உகந்தது. போர்ன்விடா குடும்பத்தில்
எல்லோரும் விரும்பும் ஒரு பானம்.

கேட்பரிஸ்

போர்ன்விடா

சக்திக்கும் வலிமைக்கும்
மற்றும் தீஞ்சுவைக்கும்



OBM-4024 R TM

புத்த பிக்ஷு கையில் கத்தி எடுத்ததைப் பார்த்ததும் பரஞ்சோதி விரைவாகப் பின்னால் இரண்டு அடி எடுத்து வைத்துத் தமது உறையிலிருந்த வாளை உருவினார். அந்த க்ஷண நேரத்தில் அவருடைய மனத்தில், 'ஆ! நமது உயிர் போயிற்றே! எவ்வளவோ முயற்சிகள் செய்து கடைசியில் காரியம் சித்தியாகும் தருணத்தில் இந்தப் பெரும் தவறு செய்து விட்டோமே?' என்ற எண்ணம் மின்னல் போலத் தோன்றியது.

ஆ! இது என்ன? இந்த வஞ்சக நாகநந்தி ஏன் அந்தப் பக்கம் திரும்புகிறார்? யார் மேல் எறிவதற்காகக் கத்தியை ஓங்குகிறார்? ஆஹா! சிவகாமி தேவியின் மேல் எறிவதற்காகல்லவா கத்தியைக் குறி பார்க்கிறார்? படுபாவி! பாதகா!

யார் செய்த அதிர்ஷ்டத்தினாலோ நாகநந்தி ஓங்கிய கையுடன் அரை விநாடி தயங்கி நின்றார். அந்த அரை விநாடியில் பரஞ்சோதி தமது வாளை ஓங்கிக் கத்தி பிடித்த புத்த பிக்ஷுவின் தோளை வெட்டினார். பிக்ஷுவின் கத்தி குறி தவறி எங்கேயோ தூரப் போய் விழுந்தது. நாகநந்தியும் அடியற்ற மரம் போல் தரையில் விழுந்தார்.

(தொடரும்)

வட்ட மேஜை

இந்த வாரக் கல்கியில் அசோகமித்திரனின் சிறுகதைத் தொகுதிக்கு வெளியாகியிருக்கும் விமரிசனம் கண்டேன். அதிர்ச்சியடைந்தேன்.

அசோகமித்திரன் ஒரு ''பார்முலா'' எழுத்தாளர் அல்ல. வாழ்க்கையில் தினமும் காணும் நிகழ்ச்சிகளை நுட்பமாகக் கவனித்து இலக்கிய நயம் ததும்ப எழுதும் அற்புதமான எழுத்தாளர்.

அசோகமித்திரனுடைய சிறுகதைகள் சில புரியாமல் இருக்கலாம்; என்ன சொல்ல முயல்கிறார் என்று தெரியாமல் இருக்கலாம். ஆனால் அதை வைத்துக் கொண்டு, யாரோ ஒரு 'சாராரை'த் தாக்க அசோகமித்திரனை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டது சரியல்ல. ''தம்மையும் அறியாமல் நல்ல கதை எழுதிவிடுகிறார்'' என்று கூறியிருப்பது மிகக் குரூரமான குற்றச்சாட்டு! அவருடைய 'பிரயாணம்', 'வெறி', 'ஒரு ஞாயிற்றுக்கிழமை', 'விரிந்த வயல்வெளிகளுக்கு அப்பால்', 'அம்மாவுக்காக ஒரு நாள்' — போன்ற கதைகளை உங்கள் விமரிசகரைப் படிக்கச் சொல்லுங்கள்; அல்லது படித்து அநுபவித்தவரிடம் கேட்கச் சொல்லுங்கள்.

சென்னை—90
23—10—75 வாதூலன்

உங்கள் பத்திரிகையில் அசோகமித்திரனைத் தாக்கி எழுதியுள்ள கட்டுரையைப் படித்தேன். நான் பல சமயங்களில் அசோகமித்திரன் கதைகளைப் படித்து மன ஆறுதலும் தெளிவும் பெற்றிருக்கிறேன்.

'காந்தி' என்ற கதையைப் பற்றி: கதாசிரியருக்குத் தன் நண்பன் தன்னைப் பற்றி அவதூறாகப் பேசுவதும் நினைப்பதும் ஆச்சரியமாகவும் வருத்தமாகவும் இருக்கிறது. நண்பனைப் பற்றி அலட்சியமாகவும் நினைக்க முடியவில்லை. ஏனென்றால், அவன் நுண்ணிய உணர்வுகளை உடைய புத்திசாலி என்று அவருக்குத் தெரியும். அப்பொழுது அவருக்கு ஞாபகம் வருகிறது, அந்த நண்பன் காந்தியைப் பற்றிப் பேசியது. காந்தியினுடைய வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். அவருக்கு உள்நோக்கங்கள் கற்பிப்பது மிகவும் சிரமம். அப்படியிருக்க, அவரையே பழித்துப் பேசக் கூடியவர்கள், நம்போன்ற சாதாரண மனிதர்களைப் பற்றி என்னதான் சொல்ல மாட்டார்கள்? இது மனித இயல்பில் இருக்கும் ஒரு வக்கரிப்பு. அதைத்தான் அசோகமித்திரன் எடுத்துக் காட்டுகிறார். மற்றப்படி நல்ல மனிதர்களாகவே இருக்கும் சில மனிதர்கள் சில நேரங்களில் நடந்துகொள்வதை நம்மால் புரிந்துகொள்ள முடிவதில்லையல்லவா? இதுதான் அந்தக் கதை. காந்தியைப் பற்றி அப்படிப் பேசுபவர்கள் இருக்கிறார்களா என்று நீங்கள் சந்தேகப்படலாம். ஆனால் நான் கேட்டிருக்கிறேன், நிறையப் பேர் காந்தி, நேரு, ராஜாஜி போன்றவர்களைத் தாறுமாறாக வர்ணிப்பதை.

அசோகமித்திரன் மிக மிக நல்ல எழுத்தாளர். அவர் அர்த்தமில்லாமல் எழுதுவது இல்லை. அவரை இவ்வளவு தீவிரமாகத் தாக்கியதற்கும் அந்த 'காந்தி' கதையிலேயே ஒரு விளக்கத்தை நாம் காண முடியலாம்!

சென்னை
23—10—75 பத்மினி கோபாலன்


[அசோகமித்திரன் அதிர்ஷ்டக்காரர். அவர் எழுத்துக்கு ஒன்றுக்கு மூன்றாக அல்லவா விமர்சனங்கள் கல்கியில் இடம் பெற்றுவிட்டன! - ஆர்]

கல்கி 26—10—75 தேதி இதழில் திரு எஸ். ராஜன் அவர்கள் (ஈரோடு) 'இன்பத் தென்றல்' தொடர் கதையில் வரும் ஹாஸ்டல் வார்டன் தெரஸாவுக்குக் குங்குமப் பொட்டு வைத்தது தவறு என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்.

கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் பொட்டு வைத்துக் கொள்வார்கள் என்பது அவருக்குத் தெரியாது போலும்!

இப்போதெல்லாம் சில கிறிஸ்தவப் பெண்மணிகள் தலைக்குப் பூகூட வைத்துக்கொள்கிறார்கள். அப்படியிருக்க விஜயா அவர்கள் வரைந்த அப்படத்தில் எவ்விதக் குறையும் இல்லை என்று நான் அடித்துக் கூறுவேன்!

சென்னை—14
5—11—75 ஸ்ரீராம்


கண்ணதாசன் எழுதும்
- மகோன்னத சரித்திர நவீனம் -
சேரமான் காதலி
கல்கி
டிசம்பர் 7உ இதழில் ஆரம்பம்

டாக்டர் சிவா

சினி பாரத்தின் தயாரிப்பான இந்த வண்ணப் படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் முற்றிலும் புதிய பாத்திரத்தில் நடித்திருக்கிறார். அழுத்தமான கதை அம்சம் அவருக்கு நடிக்க நல்ல வாய்ப்பு அளித்திருக்கிறது. டாக்டர் சிவா, யாருடனும் பழகாமல் தனித்து வாழ்ந்து கொண்டிருப்பதற்கு அவர் குடும்பத்தில், பல ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்துவிட்ட ஒரு கோர நிகழ்ச்சிதான் காரணம். ஆனால் வாழ்க்கை அவரை விட்டுவிடவில்லை. கீதா, முதல் சந்திப்பிலேயே அவர் மீது காதல் கொண்டு விடுகிறாள். இந்தக் காதல் மணத்துக்கு அவளது மூத்த அண்ணன் சிறிதும் சம்மதிக்கவில்லை. கீதா வீட்டை விட்டு வெளியேறி ஓர் ஆலயத்தில் தீபத்தின் சாட்சியாக டாக்டர் சிவாவை மணந்து கொள்கிறாள்... அப்புறம்தான் பல விபரீதங்கள் !



டாக்டர் சிவாவின் உடன் பிறவாத ஊமைத் தங்கையைக் 'காதலி'த்த கயவன் அவளைக் கெடுத்து விட்டு ஓடி விடுகிறான் ; அந்தப் பெண் தற்கொலை செய்து கொண்டு விடுகிறாள். டாக்டர் சிவா துடித்துப் போகிறார். கீதாவின் சந்தேகக் கண்கள் அவரை வெருட்டுகின்றன .... அவள் பிறந்த வீட்டுக்கு வந்து விடுகிறாள். அண்ணன் ஆத்திரத்தில் விவாகரத்துக்கு ஏற்பாடு செய்கிறார். விவாகரத்துக்குப் பிறகுதான் கீதாவுக்குத் தன் ஆதரவற்ற நிலைமை விளங்குகிறது. கீதாவுக்குக் கருச்சிதைவு, கடைசியில் அன்பு உள்ளங்கள் ஒன்று சேருகின்றன.

சிவாஜியின் நடிப்பில் நவரஸங்களையும் காண முடிகிறது. தொடக் கூடாத தொழு நோயாளிகளிடம் காட்டும் பரிவும் பாசமும், உடன் பிறவாத ஊமைத் தங்கையிடம் காட்டும் கனிவும், கசிவும், தன் குடும்பத்தில் விதியின் கொடுமையினால் ஏற்பட்டுவிட்ட கொடூரம் காரணமாகக் கோபமும், சிவாஜியின் நடிப்பாற்றலுக்கு உரை கற்களாக விளங்குகின்றன.


மஞ்சுளா கவர்ச்சிக் கன்னியாக, 'நியூலேவ்' உடைகளில் தோன்றினாலும் நெகிழ்ச்சியிலும், மகிழ்ச்சியிலும் பாத்திரத்துக்கு ஏற்பச் சிறப்பாக நடித்திருக்கிறார். விவாகரத்துக்குப்பிறகு 'சீரியஸாக' மாறி, சிந்தனையும் துயரமும் கலந்த தோற்றத்துடன் இருக்கிறார். முடிவாக மீண்டும் கணவனை நாடிச் சென்ற கீதாவை மஞ்சுளா நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார். டாக்டர் சிவா கீதாவைக் கண்களில் நீர் மல்க மௌனமாக ஏற்றுக் கொள்ளும் காட்சி அனைவரையும் நெகிழவைக்கிறது.

மிரட்டல் உருட்டல்களுக்கு மேஜர் சுந்தர ராஜன் இருக்கவே இருக்கிறார். கீதாவின் அண்ணனாக வந்து திரைக் கதையை விவாகரத்து வரையில் கொண்டு போய்ப் படத்தின் சஸ்பென்ஸுக்குப் பெரிதும் உதவியாக இருக்கிறார். பரிவும், பாசமும், பண்பும் கொண்ட குடும்பத்தின் மூத்த அண்ணியாக வந்து அனைவரையும் நெகிழ வைக்கிறார், பண்டரிபாய்.

இவ்வண்ணப் படத்தின் சிறப்புக்கு ஒளிப்பதிவு டைரக்டர் எம். விசுவநாதராய் பாராட்டுக்குரியவர். கதை, திரைக் கதை, டைரக்ஷன் ஆகிய மூன்று துறைகளிலும் வெற்றிக் கொடி நாட்டியிருப்பவர் ஏ.சி. திருலோகசந்தர். பொருத்தமான வசனம் எழுதியிருக்கும் ஏ. எல். நாராயணன் மிகவும் பாராட்டுக்குரியவர்.

ஆறு பாடல்களில் ஜேசுதாஸ், எஸ். ஜானகி பாடியிருக்கும், ''மலரே குறிஞ்சி மலரே'' என்ற பாட்டு மிகவும் இனிமையாயிருக்கிறது.

சோகம் கலந்த இப்படத்தில் நாகேஷ் இருப்பது ஒரு வரப் பிரசாதம் ! — காந்தன்



இன்பத் தென்றல்

9

அநூப் அவ்வளவு இலேசில் விடுவதாயில்லை. ''அப்படியானால் நான் இங்கு வந்தது வீண் என்று கூறுங்கள்!'' என்று பேச்சை வளர்க்க முயன்றான்.

''அப்படியேவைத்துக்கொள்ளுங்களேன்!''

அநூப்பின் முகத்தில் ஏமாற்றம் எதிரொளி வீசியது. எழுந்து புறப்பட்டவன் சட்டென்று ஏதோ நினைவு வந்தவன் போல், ''அடடா! வந்த காரியத்தை மறந்து விட்டேனே!'' என்றான்.

''என்ன?'' என்று கேட்டாள் ஸிஸ்டர் தெரெஸா.

''அக்கா இந்தக் கல்லூரிக்கு ஒரு சிறு தொகை நன்கொடையாகத் தரச் சொன்னாள்.''

''எதற்காக?''

''அது அவளுக்குத்தான் தெரியும். ஒவ்வோர் ஆண்டும் எதற்காவது நன்கொடை அளிப்பது அவள் வழக்கம். இந்த ஆண்டு உங்கள் கல்லூரி நினைவுக்கு வந்துவிட்டாற்போலிருக்கிறது!''


'நன்கொடை' என்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்திலே ஸிஸ்டர் தெரெஸாவின் முகம் நிறம் பிடிப்பதைக் கண்ணுற்றான் அநூப். ரூபாவும் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறாள் என்பதையும் உணர்ந்தான். இருவருமே ஆவலோடு அவனைப் பார்க்கலாயினர்.

அநூப் பையிலிருந்து செக் புத்தகத்தை எடுத்து ஐயாயிரம் ரூபாய்க்கு ஒரு செக்கை எழுதி ஸிஸ்டர் தெரெஸாவிடம் நீட்டினான். இத்தனை பெரும் தொகைக்குச் செக்கைக் கண்டதும் ஸிஸ்டர் தெரெஸா உள்ளூற மகிழ்ந்து போனாள்.

''ஐயாயிரம்!'' அவள் உதடுகள் அவளை அறியாமலே குறுகுறுத்தன. விழிகள் வியப்புடன் அநூப்பை நோக்கின.

''பயப்படாதீர்கள். காசோலை காசாகக் கூடியதுதான்!'' அநூப் முறுவலித்தவாறே கூறினான்.

''இல்லை, அதற்கு இல்லை. இத்தனை பெருந் தொகை....'' ஸிஸ்டர் தெரெஸாவுக்கு அதற்குமேல் நாப் புரளவில்லை.



''நான்தான் சொன்னேனே, உங்களுக்கு! என் அக்காவுக்குத் தாராளமான மனசு. குறைவு நிறைவு என்றெல்லாம் பார்ப்பதில்லை!''

''நிற்கிறீர்களே, உட்காருங்கள்'' தெரெஸா அவனை உட்காரச் சொன்னாள்.

''தாங்க் யூ!'' என்று நன்றி கூறி அமர்ந்தான் அநூப்.

''உங்கள் தமக்கையின் பெயர் என்ன?'' குரலில் பரிவு இழையோடக் கேட்டாள் தெரெஸா.

அவன் கைக்கு மாறிய காசோலை செய்த அற்புதம், அவள் போக்கே அடியோடு மாறி விட்டது. அவள் இளநகையில் இனிமை கரைந்து கலக்கவே, ரூபாவுக்குச் சொல்ல வொண்ணாத மகிழ்ச்சி!

''ஷோபா!'' என்றான் அநூப்.

''அவள் இங்கே எப்பொழுது இருந்தாளாம்?''

''ஐம்பத்தேழு, ஐம்பத்தெட்டில்!''

''ஓகோ! இப்பொழுதுதான் நினைவு வருகிறது. நீங்கள் அவள் பெயரைச் சொன்ன பிறகுதான் அவள் முகமுமே கண்களில் நிழலாடுகிறது. உங்கள் தமக்கை பெயருக்கேற்ப இந்தக் கல்லூரிக்கே சோபை அளித்தவள்!''

''அப்படியானால் புகைப்படப் பிரதி கிடைத்துவிடும் அல்லவா?''

''லெட் அஸ் ட்ரை!''

''தாங்க் யூ!''

''இட் இஸ் அவர் ட்யூட்டி!''

''அதனால்தான் உங்களால் சிரமத்தையும் சுலபமாக்க முடியும் என்று சொன்னேன்!''

''ஒய் நாட், ஒய் நாட்?''

''எக்ஸ்க்யூஸ் மீ!'' அநூப் ரூபாவைப் பார்த்து, ''குடிக்கத் தண்ணீர்கிடைக்குமா?'' என்று கேட்டான்.

''இந்தக் குளிரில் தண்ணீர் எதற்கு? தேநீரே வரவழைக்கிறேனே!''

''நோ, தாங்க்ஸ்! நான் அதிகம் தேநீர் அருந்துவதில்லை.'' அநூப் ரூபாவை முன்பின் தெரியாதவன் போலப் பார்த்தான்.

ரூபா தண்ணீர் எடுத்து வர உடனே வெளியே சென்றாள். அநூப் அவள் வெளியேறும்வரையில் பேசாமல் இருந்தவன், ''இவள் உங்கள் மகளா?'' என்று ஸிஸ்டர் தெரெஸாவைக் கேட்டான்.

''யார், ரூபாவா? மகள் என்றே வைத்துக் கொள்ளுங்களேன். சொல்லப் போனால் என் மாணவி. ரொம்பக் கெட்டிக்காரி!''

''நீங்கள் இப்பொழுதெல்லாம் கல்லூரி விடுமுறை என்று சொன்னீர்களே!''

''ஆமாம், கல்லூரி மூடியாகிவிட்டது.. ஆனால் இந்தப் பெண் விடுமுறையை விடுதியில்தான் கழிக்கிறாள்!''

இதற்குள் ரூபா தண்ணீர் எடுத்து வந்து விட்டாள். அந்தக் குளிரிலும் அநூப் தண்ணீரைக் கடகடவென்று குடித்துவிட்டு வெறும் கிளாஸை மேஜையின்மீது வைத்தவாறே ரூபாவைப் பார்த்தான். ரூபாவும் விழிகள் இழிய அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்துக்குள்ளாகவே, ஸிஸ்டர் தெரெஸா ரூபாவின் உதவியோடு பழைய ரிக்கார்டுகள் அத்தனையையும் புரட்டிப் பார்த்து விட்டாள். ஆனால் ஷோபாவைப் பற்றி எதுவுமே தெரியவில்லை. அநூப் கம்பீரமாக அவர்களது தவிப்பை ரசித்துக் கொண்டிருந்தான். ஐயாயிரம் ரூபாய்க் காசோலை அவர்களை அப்படிப் பிரச்னையில் ஆழ்த்தி விட்டது.

வெகு நேரம் வரை அவர்களுக்குத் தடையம் எதுவும் கிடைக்காமல் போகவே, ''உங்களிடம் புகைப்படங்களுக்

குல்ஷன் நந்தா

தமிழாக்கம்: ரா. வீழிநாதன்

கென்று ஒரு ரிக்கார்டு கிடையாதா?'' என்று அநூப் கேட்டான்.

''ஓ எஸ்! அதை 'டிரை' பண்ணிப் பார்க்கலாமே!'' என்றாள் ஸிஸ்டர் தெரெஸா.

''எதை?'' என்று ரூபா கேட்டாள்.

''இரு, சொல்கிறேன்!'' என்ற ஸிஸ்டர் தெரெஸா மேஜையில் டிராயரை இழுத்துச் சாவிக் கொத்தை எடுத்தாள். அதை ரூபாவிடம் கொடுத்து, ''லைபரரிக்குப் போ. அங்கே சுவரில் எல்லாக் குரூப் போட்டோக்களும் மாட்டியிருக்கின்றன. இவருக்குக் காட்டு. இவர் தம் சகோதரியை அடையாளம் காட்டட்டும்!'' என்றாள்.

ரூபாவுக்குத் தர்ம சங்கடமாகி விட்டது. அநூப்புக்கோ ஒரே சந்தோஷம். ஸிஸ்டர் தெரெஸாவுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, ரூபவுடன் புறப்படத் தயாரானான்.

''எக்ஸ்க்யூஸ் மீ! நானே கூட வருவேன். ஆனால் டாக்டர் மாடி ஏறக்கூடாது என்று தடுத்துவிட்டார்!'' ஸிஸ்டர் தெரெஸா தனது இயலாமையைத் தெரிவித்தாள்.

''பரவாயில்லே. படம்தானே பார்க்கணும்!''

''அங்கே 'காலரி'யில் நடந்த முப்பதாண்டு ரிக்கார்டு முழுவதுமே இருக்கிறது. படங்களைப் பார்த்து நீங்கள் ஷோபாவை அடையாளம் கண்டுகொள்ள முடியும் அல்லவா?'' என்று கேட்டாள் தெரஸா.

''என்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள்? என் சகோதரியை என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியாதா?'' என்று கேட்ட அநூப் ரூபாவைப் பார்த்து, ''வாருங்கள்!'' என்றான்.

வேறு வழியின்றி ரூபா சாவிக் கொத்தை எடுத்துக் கொண்டு அவனோடு புறப்பட்டாள். ரூபா முன் செல்ல அநூப் பின்தொடர்ந்தான்.

ஹாஸ்டல் வராந்தாவைத் தாண்டி இருவரும் லைப்ரரியை நோக்கி நடந்தனர். ரூபா பேசவேயில்லை. அவள் மௌனம் அவனுக்கு உறுத்தியது. அவளது இனிய குரலைக் கேட்க அவன் துடித்தான். அந்தச் சந்தர்ப்பத்தில் ரூபா ஒரு திருப்பத்தில் தடுமாறினாள்.

''ஸ்லோ... ப்ளீஸ்!'' என்றான் தாழ்ந்த குரலில்.

''எனக்கு மெதுவாக நடந்து பழக்கம் இல்லே!'' ரூபா சுள்ளென்று விழுந்தாள்.

''எனக்கு வேகமாக நடக்க வராதே!''

''அதற்கு நான் என்ன செய்வது?''

''கற்றுக் கொள்ளுங்கள். கடைசி வரையில் துணை வந்தாக வேண்டுமே!'' இரு பொருள் படப் பேசினான் அநூப்.

ரூபா நின்று அநூப்பைப் பார்த்தாள். அவன் இதழ்களில் குறும்பு தாண்டவமாடியது.

''ஒன்று கேட்கிறேன்!'' ரூபா அதே எரிச்சலோடு கேட்டாள்.

''தாராளமாகக் கேளுங்கள்; ஒன்றென்ன, வேண்டியது கேளுங்கள்!''

''உங்களுக்கு உண்மையிலேயே உங்கள் சகோதரியின் புகைப்படம்தான் வேண்டுமா?''

''இல்லாவிட்டால் உங்களுடைய இந்தக் கோபத்துக்கு ஆளாக எனக்கு என்ன பைத்தியமா?''

''சரி, வாருங்கள்!'' கடுங் குரலில் கூறிய வண்ணம் ரூபா படபடவென்று படியேறினாள். அநூப்பும் அவளுக்கு ஈடு கொடுத்து நடந்தான்.

லைப்ரரியின் கதவைத் திறந்த ரூபா ஒரு தூணுக்கு அருகில் நின்று கொண்டாள். பிறகு ''போங்கள்; உங்கள் தமக்கையை அடையாளம் காட்டுங்கள்!'' என்றாள்.

''எங்கே?''

''அதோ சுவரில் முப்பது ஆண்டுப் படங்களும் மாட்டியிருக்கின்றன!'' என்று கூறிய ரூபா படங்கள் மாட்டியிருக்கும் சுவரைச் சுட்டிக் காட்டினாள்.

''இவற்றில் உங்கள் குரூப்பும் இருக்கும் அல்லவா?''

''இருக்கும். ஆனால் அதற்கு இன்னும் மூன்று மாதங்கள் போக வேண்டும்!''

''வாங்கும்பொழுது இரண்டு பிரதிகளாக வாங்குங்கள்!''

''இரண்டு எதற்கு?''

''ஒன்று உங்களுக்கு!'' அநூப் முறுவலோடு கூறினான்: ''இன்னொன்று எனக்கு!''

ரூபா அதற்குப் பதில் ஒன்றும் கூறவில்லை.

அநூப் சுவரில் மாட்டியிருந்த படங்களை வெகு கவனமாகப் பார்க்கலானான். ரூபா தொலைவில் நின்று அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். இதற்குள் அவள் பதற்றமெல்லாம் விடைபெற்றுக் கொண்டிருந்தது. அநூப்போடு தனித்து இருப்பது அவளுக்குப் பிடித்துப் போய்விட்டது. அநூப் படங்களைப் பார்த்தவாறே அவள் அருகில் வந்தான்.

''பெண்களின் இந்தப் பெருங் கூட்டத்தில் உங்கள் சகோதரியை உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடியுமா?''

''முடியாது'' என்ற அநூப், ''முனைந்தால் முடியாதது ஒன்றும் இல்லே. ஆனால் எதற்கு முனையணும்என்பதுதான் கேள்வி!'' என்றான்.

''என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?''

''உண்மையைச் சொல்லட்டுமா?''

''உம்.''

''எனக்கு அந்த மாதிரி சகோதரியே இல்லே!''

''என்ன?'' ரூபா உரக்கக் கூவியேவிட்டாள். ''அப்படியானால் நீங்கள் சொன்னது பொய்யா?''

''ஆமாம்!''

''அந்த ஐயாயிரம் ரூபாய் செக்?''

''நான் கொடுத்தது. காசாகிவிடும்!''

''எதற்காகக் கொடுத்தீர்கள்?''

''நான் இங்கே வருவது பிறருக்குத் தவறாகப் படக் கூடாது என்பதற்காக.''

''நீங்கள் இங்கே எதற்காக வரவேண்டும்?''

''உங்களைப் பார்க்க... அந்த இரவு...அந்தச் சந்திப்பு... நிஜமாக நீங்கள் என்னை மந்திரத்தால் கட்டிவிட்டீர்கள்!''

''என்னை 'பிளாக் மெயில்' செய்யப் பார்க்கிறீர்களா?''

''இல்லே, காதலிக்க விரும்புகிறேன்!''

''ஆனால்நான் உங்களைக் காதலிக்கவில்லே.''

''நீங்கள் உங்கள் பிரின்ஸின் நினைவில் எப்படிப் பைத்தியமாயிருக்கிறீர்கள் என்பதை அஞ்சு சொல்லிவிட்டாள்!''

''அஞ்சுவா?'' ரூபா வியப்போடு அநூப்பைப் பார்த்தாள்.


ஓல்ட் ஸ்பைஸ்
ஆணின் வெற்றிக்கு
அடிகோலுகிறது.
எழில்துள்ளும் பெருங்கடல்.
அழகுப் பொக்கிஷமாக
அவள் அருகிலிருக்க—
ஆம் அவன் ரசனைக்கு
சுருதி கூட்டுகிறது.
வழவழவென ஷேவ்.
குளுகுளுவென குளியல்,
எண்ணத்தைக் கிளர்ந்திடும்
எண்ணற்ற அலுவல்கள்.
இவற்றிற்கெல்லாம்
வேண்டிய உற்சாகம்
பொங்கும் புத்துணர்ச்சியை
அள்ளித்தரும்
ஓல்ட் ஸ்பைஸ்.
ஆண்களின் அழகுக்காக
ஓல்ட் ஸ்பைஸ் அளிக்கும்
அணிவரிசை:
• ஆஃப்டர் ஷேவ் லோஷன்*
• கொலோன்*
• லாதர் ஷேவிங் க்ரீம்*
• பிரஷ்லெஸ் ஷேவிங் க்ரீம்
• பாடி டால்க்*
• ஹேர் க்ரீம்
• பிரிலியண்டைன்.
ஓல்ட் ஸ்பைஸ்
ஆண்மையின் சின்னம்
Old Spice
the mark of a man
Old Spice
AFTER SHAVE LOTION
Old Spice
COLOGNE FOR MEN
* எலுமிச்சை மணத்திலும் கிடைக்கின்றன.
இந்தியாவெங்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட கடைகளில் கிடைக்கின்றன. தயாரிப்பவர்கள்: கோல்ஃபாக்ஸ் லாபரட்டரீஸ் (இந்தியா) லிமிடெட்., மெனரிஸ்-ஷுல்டன் எண்டர்ப்ரைஸ்.
OS 2/TAM



வின்டாஸ்-PZ.VI.3-140 TM (R)

''ஆம். உங்கள் காதல் கடிதங்கள், உங்கள் வண்ணக் கனவுகள் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் உங்கள் அறைத் தோழி என்னிடம் சொல்லிவிட்டாள்!''

''அவளுக்கு உங்களை எப்படித் தெரியும்?''

''அவளுக்காகச் சில பொருள்கள் நான் கொண்டு வந்தேன். அவற்றை வாங்கிப் போக என்னைக் காண வந்தாள்!''

''உங்கள் இருவருக்கும் முன்பே அறிமுகம் கிடையாதா?''

''கிடையாது. அன்றிரவு கிளார்க்ஸ் ஹோட்டலில் பார்த்ததுதான் எங்கள் முதல் சந்திப்பு!''

''உங்களைப் பற்றி அவள் சொன்னது...''

''உண்மைதான். எங்களைச் சேர்ந்தவர்கள் எங்கள் இருவரையும் இணைத்து முடி போட எடுத்த முடிவு அது. அதற்காக அவள் தன் பொருள்களைப் பெற்றுப் போகும் சாக்கில் என்னைப் பார்த்து ஒரு முடிவு எடுக்க வந்திருந்தாள்!''

''முடிவு என்ன ஆயிற்று?''

''நாங்கள் இருவரும் முடிவை மாற்றிக் கொண்டு விட்டோம்!''

''ஏன்?''

''உண்மை தெரிந்ததனால்!''

''எந்த உண்மை?''

''நான்தான் உங்கள் பிரின்ஸ் என்பதை அவள் புரிந்து கொண்டு விட்டாள்!''

''அது வெறும் நாடகமல்லவா? பகற் கனவு எங்கேயாவது நிஜமாகுமா?''

''நிஜமாகுமோ, ஆகாதோ? நான் அதை நிஜமாக்குவதுஎன்று முடிவு கட்டிவிட்டேன்!''

ரூபா நடுங்கும் பார்வையோடு அநூப்பின் கண்களை ஊடுருவிப் பார்த்தாள். இனம் புரியாத கற்பனையில் அவளுடைய இதயம் படபடத்தது. அவள் அங்கிருந்து விலகி யோட நினைத்தாள். ஆனால் அவள் கால்கள் எழ மறுத்து விட்டன. அங்கேயே அப்படியே நின்ற வண்ணம் சிந்தனையில் ஆழ்ந்தாள்.

அநூப்பைப் பார்த்து வந்தபின் அஞ்சு அவளோடு நடந்து கொண்ட முறை அவள் கண்ணெதிரே காட்சிப் படலமாக விரிந்தது. அவள் கன்னத்தில் அப்பொழுது அஞ்சு கொடுத்த அறை மீண்டும் ஒருமுறை உறைத்தது. அவள் தன்னையும் மீறிக் கன்னத்தைத் தடவி விட்டுக் கொண்டாள். 'பாவம் அஞ்சு!' அஞ்சுவின் அவல நிலையைக் கற்பனைக் கண்களால் கண்டபொழுது, ரூபாவின் கண்களில் நீர் நிறைந்தது. ''இது ரொம்பத் தவறு பிரின்ஸ்!'' என்று அங்கலாய்த்தாள்.


''ஆனால் எனக்கு வேறு வழி இல்லையே!''

''அவள் மனம் உடைந்து போயிருக்குமே!''

''அதற்காக உன் மனத்தை நான் எப்படி முறிப்பேன்?'' அநூப் ரூபாவின் முகத்தை மெதுவாகத் தூக்கி அவள் கண்களோடு தன் கண்களைப் பொருத்தினான்.

ரூபா ஒரு கணம் ஈரம் சொட்டும் கண்களால் அவனைப் பார்த்தாள். அப்புறம் ஏதோ முடிவுக்கு வந்தவள் போல், ''எனக்கு யாரிடமும் காதல் இல்லை!'' என்றாள்.

''ரூபா! நீ சொல்வது நிஜம் அல்ல. உனக்கு அன்பு இல்லை யென்றால், என்னை ஒருநாளும் 'பிரின்ஸ்' என்று அழைக்க மாட்டாய். அநூப் என்றே கூறியிருப்பாய்!'' என்றான் அநூப்.



ரூபா அநூப்பை ஏறிட்டு நோக்கினாள். அவன் விழிகளில் இனிமையான காதல் எல்லையற்ற கடலைப் போல் பொங்கிக் கொண்டிருந்தது.

"சொல்லு, ரூபா! இனி என்னை வாட்டி வதைக்க மாட்டாயே!" என்று கேட்ட அநூப் அவள் கையைத் தன் கைகளில் ஏந்திக் கொண்டான்.

ரூபா வெகு சிரமப்பட்டுத் தலையசைத்தாள். அடுத்த கணம் தன் கையை விடுவித்துக் கொண்டு ஓடலானாள். 'காலரி'யில் நின்ற அநூப் அவள் உடலின் வனப்பையும் நடையின் ஒய்யாரத்தையும் கண்டு மயங்கி நின்றான். சிறிது நேரத்துக்குள் ரூபா அவன் பார்வையிலிருந்து மறைந்து போனாள். வாசற்படியில் நின்று அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த அநூப் தன் பார்வையைத் திருப்பியபோது, அது சுவரில் மாட்டப்பட்டிருந்த படங்களில் மோதியது. அப்பா! எத்தனை பெண்கள் அவர்கள் இருவருடைய காதலுக்கும் சாட்சியாக நின்று விழி அசைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்!

பொதுவாகவே மலைப் பகுதிகள் இளவேனிற் காலத்தில் இளமைச் செழுமை படர்ந்தனவாகக் காட்சி தரும். சிம்லாவைப் பற்றியோ கேட்கவே வேண்டாம். அதன் கவர்ச்சியே அலாதி. பனி மரங்கள், பனிச் செடிகள், பனிக் கூரைகள், பனிப் பாதைகள், பனிக் குன்றுகள், 'ஸர்வம் பனி மயம் ஜகத்'. கண்களுக்கெட்டிய தூரம் பனி, பனி, பனிதான். ஆண்டுதோறும் நாட்டின் மூலைமுடுக்குகளிலிருந்தெல்லாம் இளம் பிராயத்து ஆண்களும் பெண்களும் இயற்கையின் இந்த மனத்துக்கினிய காட்சியைக் காணத் தேர்த் திருவிழாக் கூட்டம் போலக் கூடிவிடுவர்.

இந்த ஆண்டு நன்றாகப் பனி பெய்திருந்ததனால், கண் கவர் இளமை எழிற்கூட்டமாகக் கூடிவிட்டது. இதனால் வாழ்க்கையின் அன்றாடச் செயல் முறைகள் தடைப்பட்டன வென்றாலும், இளம் உள்ளங்களின் ஆவல் கொடி கட்டிப் பறந்ததை என்னவென்று சொல்ல ? இளமை புரியும் விந்தைகளுக்கு ஈடு இணையுண்டா ? அதன் கொண்டாட்டத்துக்கும்தான் ஓர் எல்லை உண்டா ?

குஃப்ரி மலைத் தொடரில் அன்று ஏகக் கூட்டம்; 'ஜே, ஜே' என்றிருந்தது. ஏதோ ஒரு படத்தின் ஷூட்டிங்கைக் காணத்தான் மக்கள் அப்படிக் கூடியிருந்தனர். அந்தப் படத்தின் முக்கிய கதாபாத்திரங்களாக இளம் உள்ளங்களுக்கு மிகவும் பிடித்த ராஜேஷ் கன்னாவும் ஷர்மீலா டாகுரும் நடித்தனர்.

ரூபாகூடத் தன் தோழிகளுடன் படப்பிடிப்பைக் காண வந்திருந்தாள். ஹீரோவும் ஹீரோயினும் 'டூயட்' பாடி மகிழும் காட்சியைப் படமாக்கிக் கொண்டிருந்தார்கள். தொலைவில் நின்ற மக்கள் கூட்டம் அவர்களையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தது.

ஆனால் ரூபாவின் கவனம் அங்கு இல்லை; வேறு எங்கோ இருந்தது. திரும்பித் திரும்பிச் சிம்லாவிலிருந்து வரும் பாதையைப் பார்ப்பாள். அல்லது படப் பிடிப்பைப் பார்க்க வந்திருந்த கூட்டத்தில் பார்வையைத் துழாவ விட்டு யாரையோ தேடுவாள். அந்த 'யாரையோ' வேறு யாரும் இல்லை; அநூப்பைத்தான். அவனுடைய அழைப்பின்பேரில் தான் அவள் ரோஸ்லினையும் நிஷியையும் குஃப்ரிக்கு அழைத்து வந்திருந்தாள். அநூப் தனக்கு இந்த யூனிட்டைத் தெரியும் என்றும், படப்பிடிப்பைப் பார்க்கும் சாக்கில் அங்கு வந்தால் ராஜேஷையும் ஷர்மீலாவையும் அறிமுகம் செய்து வைப்பதாகவும் கூறியிருந்தான். பெண்களைப் பொறுத்தவரை பெரும் கவர்ச்சிதானே ? சொன்னால் சொன்னபடி அநூப் வராமற் போகவே, ரூபாவுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. தோழிகளுக்கெதிரில் அவளை அவன் அவமானப்பட அல்லவா வைத்துவிட்டான்? (தொடரும்)



பூவிதழ் புதுமைபோல் ஜெய் தரும் வனப்பு
மலர்ந்த மல்லிகை என மங்கைக்கு பூரிப்பு!



வனப்பின் வசந்தம் வீசுவது ஜெய்

மல்லிகை மணம் கமழும் அழகுசாதன சோப்

TATA தயாரிப்பு

OBM 2067 TM

பொன்னியின் புதல்வர்



சுந்தா

8. கலை காணிக்கைகள்

ஆக்குவதும் ஆனந்தம் : அளிப்பதும் ஆனந்தம்

திருப்பாவை உருவில் பல தலைமுறைகளாய் ஆண்டாள் உலவிக் கொண்டிருந்த தமிழ் நாட்டில் அவளைப் போலவே கண்ணனைக் காந்தனாய்க் கொண்டிருந்த வட நாட்டு மீரா பக்த விஜயம் செய்து, அவளுடன் கதை உருவில் உலவலானாள் - எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால். பின்னர், இந்த நூற்றாண்டின் மத்தியில் அந்தக் கதை உருவம் கண்ணெதிரே காணக் கூடிய ஒரு வண்ணப் பாவையாக மாறியது: அந்த ராஜஸ்தானத்துப் பக்த மணிப் பாவை தமிழிலே பேசிப் பாடினாள்.


இவ்வாறு வியப்பு மொழியில் சொல்வது, 1945 இறுதியில் வெளியான மீரா திரைப் படத்தைப் பற்றி. இப்படிச் சொல்வது முற்றிலும் தகும் என்பதை அந்தப் படத்தைப் பார்த்தவர்கள் ஒப்புக்கொள்வார்கள். பார்க்காதவர்கள் இனி வரும் விவரங்களிலிருந்து இந்தத் தகுதியைக் கணித்துக் கொள்ளலாம்.

கல்கியின் இலக்கிய ஆலோசனையும், துணையும் கொண்டு, மிக்க ஆர்வத்துடனும், ஆற்றலுடனும் சதாசிவம் எடுத்த படம் அது. எம். எஸ். சுப்புலக்ஷ்மி மீராவாகவும், அவருடைய குமாரி ராதா பால மீராவாகவும் தோன்றிய அந்தத் திரைச் சித்திரம் இதுவரை தமிழ் நாட்டில் வெளியாகி இருந்த பக்திப் படங்களில் ஈடு இணையற்றதாய் விளங்கிற்று.

அந்தப் படத்தின் தூய்மையை முதலில் குறிப்பிட வேண்டும். ஏனெனில், அக்காலத்தில் பக்திப் படங்களிலும் தூய்மைக் கேடுகள் புகுந்திருந்தன; அவற்றைக் கல்கி கண்டித்து எழுதியது ஏற்கனவே நமக்குத் தெரியும். ஆனால் தூய்மை மட்டுமே மீரா படத்தின் சிறப்பல்ல. திரைப்படத் தயாரிப்பில் அடைந்திருந்த அனுபவத்தைக் கொண்டு சதாசிவம் சொன்ன வக்கணைப்படி கல்கி உருவாக்கிய கதை, வரைந்த உரையாடல்கள் — கல்கியும் பாபநாசம் சிவனும் இயற்றிய பாடல்கள் — ஓவியர் கனு தேசாயின் கலை ஜோடனைகள் — ஹாலிவுட் டைரக்டர் எல்லிஸ் ஆர். டங்கனின் நேர்த்தியான திறமைப் பொலிவு — இவை எல்லாவற்றின் அடிப்படையிலும் பின்னணியிலும் ஒளிர்ந்த நடிப்பு, ஒலித்த இசை — இந்தச் சிறப்புக்கள் யாவும் ஒருமித்ததின் பலனே, மீரா என்ற உயரிய கலைக் காணிக்கை.

கல்கியின் மீரா கதை, பக்த விஜயத்திலும், வேறு சில ஹிந்தி ஆங்கில நூல்களிலும் உள்ள வரலாறுகளைத் தழுவியதுதான். ஆனாலும் அவர் அதைத் திரைப்படத்தின் தேவைகளுக்குத் தக்கபடியும் நவீன கால ரசனைக்கு ஏற்றபடியும் சீர்ப்படுத்தி எழுதினார்; அத்துடன், உணர்ச்சி செறிந்த கட்டங்கள், நாடகக் கூறுகள் வாய்ந்த காட்சிகள், பாடல்களுக்கு வாய்ப்பான சந்தர்ப்பங்கள் என மாறி மாறி வரும்படியாகவும் அதை அமைத்திட்டார். பின்னர் அதையே படிப்பதற்கு ஏற்றபடி உரையாடல்களைக் குறைத்தும் வர்ணனைகளைக் கூட்டியும் திருத்தி எழுதி, தீபாவளி வெளியீடாகத் திரைப் படம் காட்சிக்கு வருவதற்கு முன்னால், 28—10—45 தேதிய கல்கி இதழில் வெளியிட்டார். பழைய கதை ஒன்றைப் புதிய பாணியில் திரும்பச் சொல்லும் கலைக்கு அது சிறந்ததோர் எடுத்துக் காட்டாய் அமைந்தது.

மீரா கதை திரைப்படத்துக்கு ஏற்றது என்பதுடன், எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் தோற்றத்துக்கும் திறமைகளுக்கும் உளப்பாங்குக்கும் ஏற்றது. நாலைந்து கதைகளிலிருந்து எம். எஸ்ஸே அந்தக் கதையைத் தேர்ந்தெடுத்தாராம். இந்தத் தகவலை, ''மீரா யாத்திரை'' என்ற கட்டுரையில் கல்கி தெரிவித்து மேலும் சொல்கிறார்:



"மீராவாகத்தான் நடிப்பேன்" என்று அவர் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். அதன் பயனாக மீரா அனுபவித்த கஷ்டங்களையெல்லாம் ஸ்ரீமதி எம். எஸ்ஸும் ஏறக்குறைய அனுபவிக்க வேண்டி நேர்ந்த போதிலும் அவற்றுக்கெல்லாம் அவருடைய சொந்த விருப்பமும் பிடிவாதமுமே காரணங்கள் ஆயின.

மீராவாக நடிப்பதென்றால் அது எளிதான காரியமா? மூர் மார்க்கெட்டைப் பிருந்தாவனமாகவும் கூவம் நதியை யமுனையாகவும் நினைத்துக் கொண்டு பக்தி பரவசத்துடன் நடித்துவிட முடியுமா?

"மாயக் கண்ணனைத் தேடி மீரா அலைந்த இடங்களுக்கெல்லாம் நானும் போவேன்; மீரா தரிசித்த திருக் கோயில்களையெல்லாம் நானும் தரிசிப்பேன்; அப்போதுதான் உண்மையான மீரா இருதயத்துடன் என்னால் நடிக்க முடியும்" என்று படத்தின் பிரதான நடிகை சொன்னால் அதற்கு மாறாக எப்படிப் படம் எடுப்பது சாத்தியமாகும்?

அப்படியே மீராவின் வாழ்க்கைச் சம்பவங்கள் அசலாய் நிகழ்ந்ததான ராஜஸ்தானிலும், பிருந்தாவனம், துவாரகை முதலிய திருத்தலங்களிலும் படக் காட்சிகளை எடுப்பதற்குச் சதாசிவம் திட்டம் இட்டார். அவருடைய தலைமையில் சுமார் இருபது பேர் கொண்ட குழுவினர் அங்கெல்லாம் படப் பிடிப்புக்காகச் சென்றார்கள். கல்கியும் உடன் சென்று, அந்தப் பயணத்தின் அனுபவங்களை முன் குறிப்பிட்ட "மீரா யாத்திரை" கட்டுரையில் எழுதினார். 1944 கல்கி தீபாவளிமலரில் வெளியான அந்தக் கட்டுரையிலிருந்து மூன்று பகுதிகள் இங்கே கவனிப்பதற்கு உரியன:

○ நந்தகுமாரன் வளர்ந்து விந்தை பல புரிந்த பிருந்தாவனத்துக்கு முதன் முதலில் மீரா கோஷ்டி போய்ச் சேர்ந்தது. முதல் நாளன்று பிருந்தாவனத்தின் வீதிகளில், "பிருந்தாவனவி மங்கள லீலா" என்று ஆரம்பிக்கும் பிருந்தாவன கீதத்தைப் பாடிக் கொண்டு ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி பஜனை ஊர்வலம் வந்ததின் பயனாக, பிறகு நான்கு தினங்களிலும் பிருந்தாவனத்தின் மூலை.முடுக்கு, சந்து பொந்துகளில் எல்லாம் "பிருந்தாவனவி மங்கள லீலா" ஒலி செய்ய ஆரம்பித்தது. அந்தக் கீதம் அவ்வளவு தூரம் பிருந்தாவன வாசிகளின் மனத்தைக் கவர்ந்து விட்டது...

○ (சித்தூரில், மீராவின் வேண்டுகோளின் பேரில் ராணா கட்டிக் கொடுத்த) அழகிய கோயிலில், கிரிதாரியின் சந்நிதியில் அமர்ந்து, ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி மீராவின் கீதங்களைப் பாடியபோது, "இதே இடத்தில் தேவி மீரா அமர்ந்து, இதே பாடல்களைப் பக்திப் பரவசமாய்ப் பாடியிருக்கலாம் அல்லவா?" என்ற எண்ணமே எல்லோருடைய மனத்திலும் குடிகொண்டிருந்தது. எனவே, பாடும்போது, எம். எஸ்ஸும் கண்ணீர் விட்டுவிட்டார். மற்றவர்களின் கண்களிலும்





1. ஆனந்தி - ராதா நடன நிகழ்ச்சிகள் மூலம் பரவிய கலை ஆர்வ அலைகள் கொஞ்ச நஞ்சமல்ல, மையத்தில் குரு வழுவூர் ராமையா பிள்ளை.

2. "மீராவாகத்தான் நடிப்பேன்" . என்று அவர் தம் விருப்பத்தைத் தெரிவித்தார்...

3. மீரா திரைப் படத்தைப் பார்த்து விட்டுப் பாராட்டும் கவியரசியின் பெருமிதமும் ஆகிய ஜோதியின் மகிழ்ச்சியும்.

ஐயோ, ஐம்பது சதம்!



வளம்மிக்க குட்டி நாடு என்று கருதப்படும் ஸ்வி... லாந்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்... போன வருடம் அங்கு 34 பேர் வேலையின்றி இருந்தார்... இந்த வருடம் 51 பேருக்கு வேலை இல்லை! போன... டத்தைவிட இந்த வருடம் ஐம்பது சதவிகிதம் அதி... துள்ளது — வேலையில்லாத் திண்டாட்டம்!

'நியுஸ் வீக்' — எம். எஸ்.

நீர் துளித்தது. இதையெல்லாம் விட, அந்தக் கோயிலின் பூசாரி — கண் பார்வை மங்கிய கிழவர் — திடீரென்று ஆவேசம் வந்தவர் போல் கரதாளம் போட்டுக் கொண்டு மீரா கீதத்தை அநுபவிக்க ஆரம்பித்த காட்சி அபூர்வமாய் இருந்தது....

○ தேவி மீரா தன் உள்ளம் கவர்ந்த கள்வனை நாடெல்லாம் தேடி அலைந்தபிறகு, கடைசியாகத் துவாரகைக்கு வந்து கண்ணனுடைய பூரண அருளைப் பெற்று அவனுடைய பாத கமலங்களில் ஐக்கியமாகிறாள்.

மீரா கோஷ்டியின் யாத்திரையும் துவாரகையிலேதான் முடிவடைந்தது. துவாரகையின் வீதிகளில் "மீரா" கண்ணன் திருநாமத்தைப் பாடிக் கொண்டு சென்றபோது, பிருந்தாவனத்திலே கண்ட காட்சிகள் இங்கு இன்னும் அதிகமாய்த் தென்பட்டன. ஜனங்கள் திரள் திரளாகக் கூடி, "மீரா"வைத் தொடர்ந்து சென்றார்கள். அநேகம் பேர் உண்மையாகவே மீரா புனர் ஜன்மம் எடுத்து வந்து விட்டதாக எண்ணி மீராவுக்குரிய வழிபாடுகளைச் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்! அப்படிச் செய்ய வேண்டாம் என்று அவர்களைத் தடை செய்வது பிரம்மப் பிரயத்தனமாகி விட்டது.

துவாரகையின் கோயில் படிகளின் மீது மீரா ஏறி, கண்ணன் சந்நிதியில் கதறிக் கொண்டு நுழைந்து, உணர்வற்று விழுகிற காட்சியில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி உண்மையாகவே உணர்விழந்து விழுந்து விட்டார்.

மீராவின் கதை இந்தியாவின் கதையாகும். இந்தியாவின் பக்தி மகிமை ஆத்ம சமர்ப்பணத்தின் பெருமை — இவற்றின் கதையாகும். மன்னர் குலத்தில் உதித்த கவியரசி மீராவுக்கு உலக சரித்திரத்தில் உவமை சொல்லக் கூடியவர் யாருமில்லை. தெரிஸா, ஸிஸிலியா முதலிய கிறிஸ்தவ பக்த சிரோமணிகள் ஏக கிறிஸ்துவின் பூரண அருளைப் பெற்றவர்கள். ஆனால் மீராவோ தாம் பிரேமை கொண்ட கண்ணனோடு இரண்டறக் கலந்து ஐக்கியமாகி விட்டவள். சுப்புலக்ஷ்மி இந்தப் படத்தில் மீராவாக நடித்திருக்கிறார் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமில்லை. மீரா கீதங்களை அவர் பாடும்போது, மீராவே, புத்துயிர் பெற்று வந்து நம்முன்னால் பாடுகிறார், என்றே நம்பத் தோன்றுகிறது. சுப்புலக்ஷ்மியின் அற்புதான கானத்தைக் கேட்பவர்கள் யாரானாலும், இந்தத் தலைசிறந்த கலைவாணியின் உணர்ச்சியூட்டும் முகபாவங்களைப் பார்ப்பவர் யாரானாலும் அவர்கள் தங்கள் உள்ளத்தைப் பறி கொடுத்து மெய் மறந்துவிடுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. சுப்புலக்ஷ்மி மீராவாக நடிக்கிறார் என்ற எண்ணமே யாருக்கும் தோன்றாது. அவரே மீரா என்றுதான் எண்ணத் தோன்றும்.

(கல்கி இதழ் 1-6-47)

இவற்றைக் கல்கி ஒரு கதாசிரியராய் அல்லாமல் ஒரு கட்டுரை ஆசிரியராக எழுதியிருக்கிறார். அல்லது நிகழ்ந்ததை அப்படியே வர்ணிக்கும் ஒரு செய்தி நிருபராக எழுதியிருக்கிறார் எனலாம். உண்மையிலேயே எம். எஸ். உளம் விட்டு உளம் மாறி நடித்திருந்தார் என்பதை வெள்ளித்திரையில் மீரா படத்தைப் பார்த்தோர் அனைவரும் உணர முடிந்தது.

அந்தப் படத்தில் பரிமளித்த எம். எஸ்ஸின் அபூர்வ நடிப்பைப் பற்றி, உள்ளத்து உணர்ச்சிகளை நயமாகச் சொற்களிலே பொழிந்து காட்டுவதில் வல்லவரான ஒருவர், ஆங்கிலத்தில் சொன்னதைத் தமிழிலே கல்கி ஆக்கித் தந்துள்ளார்:

இவ்வாறு பாராட்டியவர், ஆங்கிலத்தில் கவிதைகள் பாடி, இந்தியாவின் "நைட்டிங்கேல்" என்றும், கவியரசி என்றும் புகழ் சூடிய சரோஜினி தேவி.

முதலில் தமிழில் எடுத்த மீரா படத்தைச் சுமார் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, சதாசிவம் ஹிந்தியில் ஒலி மாற்றிப் பதிப்பித்து வெளியிட்டபோது அதற்கு ஒரு முன்னிலைப்பாக சரோஜினி தேவி முகவுரை பேசினார். அந்த முகவுரையின் ஒரு பகுதியைத்தான் முன்னே பார்த்தோம். (ஹிந்தி மீரா படத்தில் சுப்புலக்ஷ்மியும் ராதாவும் தத்தம் குரலிலேயே பேசிப் பாடினார்கள்.)

மீராவாக நடித்தபிறகு வேறு யாராகவும் எம். எஸ். நடிக்காதது நல்லதாய்ப் போயிற்று. அந்தப் பக்தையின் உருவிலேயே தேசம் முழுவதிலும் மக்கள் மனத்தில் அவர் நிலைப்பதற்கு இதனால் வகை உண்டாயிற்று. தமிழிலும்

வாழ்க மணமக்கள்

ஸ்ரீ L. G. நாராயணஸ்வாமி, (Chief Engineer (Operation) Tamil Nadu Electricity Board) அவர்களின் குமாரத்தி டாக்டர் ராதாவுக்கும், ஸ்ரீ V. S. நடராஜன் அவர்கள் குமாரன் டாக்டர் N. சங்கருக்கும் (Medical officer, Naval Base Cochin) சமீபத்தில் சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்துக்கும் அன்று மாலை நடைபெற்ற வரவேற்புக்கும் ஏராளமான உறவினர்களும், நண்பர்களும், நகரப் பிரமுகர்கள் பலரும் வருகை வந்து மணமக்களை வாழ்த்தினர். வரவேற்பு வைபவத்தில் சங்கீத கலாநிதி ஸ்ரீமதி M. S. சுப்புலக்ஷ்மி அவர்களது இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

*




ஸ்ரீ விஷ்ணு துர்காம்பிகை ஆலய மஹா கும்பாபிஷேகம்

புனித பாரதத்தின் புதிய நதிகளில் ஒன்றும், தமிழ் முனிவராகிய அகஸ்தியரின் கமண்டலத்திலிருந்து பொங்கி எழுந்ததுமான காவேரி நதியின் வடக்குக் கரையில் எழுந்தருளியிருக்கும் மகாராஜபுரம் ஸ்ரீ விஷ்ணு துர்காம்பிகையின் ஆலயத்தில் ஜீரணோத்தாரணத் திருப்பணி பூர்த்தியாகி, வரும் 22–1–76 அன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. ஸ்ரீ விஷ்ணு துர்காம்பிகையின் சக்தி மகத்தானது; கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்குவது; அனைத்துலக நாயகியான அன்னை பராசக்தியின் தெய்வீக வடிவமே ஸ்ரீ விஷ்ணு துர்காம்பிகையாக இத் திவ்விய க்ஷேத்திரத்தில் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை. இப்புராதன ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக மஹோற்சவத்தை மிகச் சிறப்பாக நடத்த தேவி பக்தர்கள் தங்களால் இயன்ற பொருளுதவியைச் செய்து, தேவியின் அநுக்கிரகத்துக்குப் பாத்திரராகுமாறு கோருகிறோம்.

நிதி அனுப்பவேண்டிய விலாசம்:

ஸ்ரீ G. ராமச்சந்திரன், பொக்கிஷதார்,
திருப்பணிக் கமிட்டி, பாஸ்கரராஜபுரம்,
வழி மாயூரம் R.M.S. Pin Code 609810
தஞ்சை மாவட்டம்.





வாழ்க்கையில் அதிர்ஷ்டமுள்ள ஆடவர் ஒருவரை மீண்டும் சந்திக்கும்போது...
...அவர் அணிந்துள்ள ஆடைகளின் அழகையும் பாருங்கள்!
நிச்சயமாக, மபத்லால் க்ரூப் அளிப்பவை நேர்த்தியான துணிமணிகள்தான்!

ஹிந்தியிலும் அவர் பாடிய மீரா பாடல்கள் பின்னர் அவர் மேலும் பல இந்திய மொழிகளில் பாடிய கீதங்களுக்கு முன்னோடிகளாய் அமைந்து, அவற்றின் மூலம் அவர் தேசிய ஒருமைப்பாட்டையும், பக்தி உணர்ச்சியையும் பேணி வளர்ப்பதற்கு வகை செய்தன.

தமிழ் மீரா படத்தில், கல்கி இயற்றி எம். எஸ். பாடிய பாடல்கள் ஐந்து. அவை எல்லாமே சிறந்தவைதாம் என்றாலும், ''காற்றினிலே வரும் கீதம்'' எனத் தொடங்கும் பாடல் தனிச் சிறப்பு வாய்ந்தது. அந்த எடுப்பே, கண்ணனின் குழலோசை கேட்டு உருகி நின்ற மீராவை மனக் கண்ணால் காணச் செய்யும் ஒரு மந்திர வரியாகி விட்டது.

மீரா படத்தின் காட்சிகளையும் பாடல்களையும் நிலையான கலை அனுபவங்களாகவும் பக்தி அனுபவங்களாகவும் கொண்டவர் பலர் உண்டு. அவர்களில் ஒருவர் சமய இலக்கிய அறிஞரும் எழுத்தாளருமான ரா. கணபதி. தமிழ் மீரா படத்தைப் பால பருவத்தில் கண்டு, அதன் கதையிலும் பாடல்களிலும் லயிப்புற்ற அவர், பின்னர் 1966ல் விரிவான ஆராய்ச்சியின் அடிப்படையிலும் தமது தனிப் பாணியிலும் அந்தப் பக்தையின் வரலாற்றை எழுதினார். கலைஞர் வினுவின் ராஜஸ்தான் பாணிச் சித்திரங்களுடன் கல்கிப் பத்திரிகையில் ஒரு தொடராக வெளியான அந்த வரலாற்றுக்குக் ''காற்றினிலே வரும் கீதம்'' என்பதே மகுடம்.

இந்தக் கீதம் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் அவ்வப்போது எங்கிருந்தெல்லாமோ காற்றினிலே தவழ்ந்து வந்து கண்களைப் பனித்திடச் செய்கிறது. ''பட்ட மரங்கள் தளிர்க்கும் கீதம், பண்ணொலி கொஞ்சிடும் கீதம்.''

மீரா படத்தின் இனிய காட்சிகளில் ஒன்று பால மீரா — பால கோபாலன் நடனம் — சிறுமி ராதாவும் பேபி கமலாவும் (பின்னர் பெரும் புகழ் சூடிய கமலாதான்) இணைந்து ஆடியது. அதை அமைத்து இயக்கியவர் பிரபல நடன ஆசிரியர் வழுவூர் ராமையாப் பிள்ளை.

அந்தப் படத்தின் நடனக் காட்சிக்காக மட்டுமின்றி, முறையாகவே ராமையாப் பிள்ளையிடம் ராதாவுக்குப் பரதப் பயிற்சி நடந்து கொண்டிருந்தது. ஏற்கனவே அடையாறு கலாக்ஷேத்திரத்தில் நடனம் பயின்று கொண்டிருந்த தமது மகள் ஆனந்தியை, ராதாவுடன் சேர்ந்து ஒரே ஆசிரியரிடம் பயில்வதற்குக் கல்கி ஏற்பாடு செய்தார்.

ஆனந்திக்குப் பன்னிரண்டு வயதும் ராதாவுக்குப் பத்து வயதும் ஆகியிருந்தபோது, அவர்கள் அடைந்து விட்ட கலைத் தேர்ச்சியைக் கண்ட சதாசிவமும் கல்கியும், அவர்களுடைய நடனத்தை அரங்கேற்றத் தீர்மானித்தார்கள். சம்பிரதாயத்தை மீறாமல் நவீன காலத்துக்கு ஏற்ற மாறுதல்களை நாட்டியக் கலையில் சேர்த்துக் கொண்டிருந்த ராமையாப் பிள்ளை, கல்கியும் சதாசிவமும் தெரிவித்த சில சீர்திருத்தங்களையும் ஏற்று, அதன்படி அவர்களுடைய குமாரிகளுக்குக் கற்றுக் கொடுத்து ஒத்திகை நடத்தினார். வர்ணத்தின் கால அளவைக் குறைத்தது ஒரு முக்கியமான சீர்திருத்தம். பாரதியார் பாடல்கள் சிலவற்றைத் தேர்ந்து, அவற்றில் வாய்ப்பான கண்ணிகளைக் கோவைப்படுத்தி, அவைகளுக்கு நடன ரூபம் கொடுத்தது, காலத்துக்கேற்ற ஒரு புதுமை. கல்கியின் பாடல் ஒன்றும் அபிநயத்துக்குப் பொருத்தப்பட்டது.

வேறு யாருக்கும் கிடைக்காத, கிடைக்க முடியாத அதிர்ஷ்டமும் அனுகூலமும், பெருமையுமாய், எம். எஸ். பதம் பாடும் வாய்ப்பினைக் குழந்தைகள் அடைந்தார்கள்.

ஆனந்தி — ராதா நடன அரங்கேற்றம், 13—4—45, தமிழ்ப் புத்தாண்டு தினத்தில், மயிலை சங்கீத சபையின் முதலாண்டு நிறைவு விழாவில் நடைபெற்றது. அப்போது திருவாங்கூர் சமஸ்தானத்தில் பிரதம நீதிபதியாய் இருந்த திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசுவாமி ஐயர் தலைமை வகித்தார்.

சென்னைப் பத்திரிகைகள் எல்லாமே அந்த அரங்கேற்றக் கச்சேரி பற்றிப் படங்களுடன் பெரிதாக விமரிசனங்கள் வெளியிட்டன. ''இணையில்லா நடன ஜோடி'' ''நாட்டிய வானிலே இரு ஜோதிகள்'' என்பவை, அவை கொடுத்த தலைப்புகளுக்கு மாதிரிகள்.



''நம்ம கல்யாணத்தின் போது உங்க அம்மா எனக்குத் தந்த கூரைப் பட்டுப்புடவை மகா தண்டம்!''

''ஏன்? ஒரு வருஷத்துக்குள் கிழிந்து விட்டதா?''

''அதைப் போட்டதில் இத்தனூண்டு பிளாஸ்டிக் பக்கெட்தான் கிடைத்தது!''

எல்லாவற்றையும் விட விரிவான, முழுப் பக்க விமர்சனம் ஒன்றை, பரதக் கலையை விமரிசிப்பதற்கு எல்லா விதத்திலும் தகுதி வாய்ந்தவரான ஈ. கிருஷ்ணய்யர் எழுதியிருந்தார். அப்போது அவர் ஆசிரியராய் இருந்த ''ப்ரீ பிரஸ்'' பத்திரிகையில் அம்மாதம் 19ம் தேதி வெளியான அந்த விமரிசனத்தைச் சுருக்கமாகப் பொழிப்புரை வடிவில் பார்த்தால் போதும்:

நமது பரதக் கலை அதன் பழைமைச் சிறப்பையும் தூய்மையையும் மீண்டும் அடைந்து, பலரும் ரசித்துக் கொண்டாடும் நிலைக்கு வரவேண்டும் என்பது எனது நெடுங்காலக் கனவு. புத்தாண்டு நன்னாளில் மயிலையில் நடந்த அரங்கேற்றுப்படியில் அந்தக் கனவு பலித்தது. அரங்கில் ஆடிய சிறுமிகள் இருவரும் இக்கலையின் புத்துயிர்க் காலத்து நறுமலர்கள் — ஒரு பெண், ''கல்கி'' ஆசிரியர் திரு ஆர். கிருஷ்ணமூர்த்தியின் மகள் ஆனந்தி; மற்றவள் அப்பத்திரிகையின் நிர்வாகி திரு சதாசிவத்தின் மகள் ராதா. இவ்வளவு கௌரவம் அடைந்து விட்டது இக்கலை. அசாதாரண ஆவலுடன் பெருந்திரளாக ரசிகர்கள் அரங்கேற்றத்தைக் காண வந்ததற்கு, புகழ் மிக்க ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி சிறுமியரின் அபிநயத்துக்குப் பதங்கள் பாடுகிறார் என்பது மற்றொரு காரணம்.

நந்தி உருவம் பொறித்த திரையும் அரங்கு ஜோடனையும் — சதங்கை மணிகள் கட்டிய வர்ண நாடாவில் கோத்த நிகழ்ச்சி இதழ்— பின்னணி இசையின் தரம் — பெண்களின் ஆடை அலங்காரங்கள் — இவை யாவும் சம்பந்தப்பட்டோரின் கலை ஆர்வத்துக்கும் அழகு உணர்ச்சிக்கும் நேர்த்தியான ருசிக்கும் சான்றாக விளங்கின; எவ்வளவு அக்கறையுடன் அவர்கள் ஆயத்தங்கள் செய்து ஒத்திகை நடத்தியிருக்க வேண்டும் என்பதற்கு அவை எடுத்துக்காட்டாய் இருந்தன.

சபையோர் அனைவரும் அரங்கு நிகழ்ச்சிகளில் மூன்றரை மணி நேரம் ஒரே லயிப்பாய் இருந்து, பரதக் கலையின் வண்ணங்களை வியந்தும் மகிழ்ந்தும் ரசித்தார்கள். அப்படி அவர்கள் ரசித்தது, பெண்களின் வயது காரணமான பரிவினாலோ, அவர்களுடைய குடும்பங்களின் அந்தஸ்து, புகழ் காரணமான மதிப்பினாலோ மட்டும் அல்ல; அப்பெண்களின் கலைத் தேர்ச்சி உண்மையில் நேர்த்தியாய் இருந்ததினாலும்தான். திறனாய்வுக் கண்களுடன் பார்த்தாலும் நன்கு தேறக் கூடியதே அப்பெண்களின் கலை.

வழக்கப்படியான பந்தாவில்தான் அலாரிப்பு, ஜதிஸ்வரம், வர்ணம், பதங்கள், தில்லானா' ஆகியவை அமைந்திருந்தன. ஆனாலும் அவற்றை அவர்கள் தனியாகவும், இணைப்பாகவும் மாறி மாறி ஆடியது ஒரு புதுமை. சில நிகழ்ச்சிகளும் நிகழ்ச்சிப் பகுதிகளும், சிறு சிறு நாட்டிய நாடகங்கள் போலவே இருந்தன.

அவர்களுடைய லய சுத்தமான அடைவு ஜதிகள், கச்சிதமான தீர்மானங்கள், நளினமான நிலைகள், அழகான அசைவுகள் — இவை யாவும் பாராட்டுக்கு உரியன என்றாலும், இவற்றை யெல்லாம் மிஞ்சுவதாயிருந்தன அவர்கள் காட்டிய ரச—பாவங்கள்.

தோற்றத்திலும் மனப் பாங்கிலும் சிறுமிகள் இருவரும் வெவ்வேறு விதம். இந்த வேறுபாடே வித விதச் சுவைகளும் வண்ணங்களும் மிளிர்வதற்கு உதவிற்று. ''பதறி வருகுது'' பதத்துக்கு ஆனந்தியும், ''தாயே யசோதா'' பதத்துக்கு ராதாவும் தனித் தனியே அபிநயம் பிடித்தார்கள். ''நடனம் ஆடினார்'' என்ற தாண்டவ வர்ணனைப் பாட்டுக்கு இருவரும் சேர்ந்தே விளக்கம் கொடுத்தார்கள். ''ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே'' என்ற பாரதி பாடலுக்குக் களித்துக் குதித்தும், சிலிர்த்துச் சுழன்றும், அவர்கள் ஆடியதையும், குறிப்பாக ''வெற்றி கொண்டே சங்கு ஊதுவோமே'' என்ற எக்களிப்புக்கு அபிநய பாவனை செய்ததையும் உற்சாக எதிரொலியுடன் சபையோர் அனுபவித்து, ஆனந்த ஆரவாரம் செய்தனர். கல்கி இயற்றிய ''மாலைப் பொழுதினிலே'' என்ற பாடலுக்கான அபிநய வண்ணங்களையும் வெகுவாகச் சபையோர் ரசித்தனர். (கல்கியின் பாடல் அது என்பதாக நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டிருக்கவில்லை.)

எம். எஸ். அரங்கில் அமர்ந்து, தமது அற்புத இசையினால் குழந்தைகளின் அபிநயத்துக்கு அளித்த ஆதரவு அதன் அழகையும் கலை மதிப்பையும் பெருக்கிற்று.


சிறுமியரின் நாட்டியம் இவ்வளவு நேர்த்தியாய் இருந்ததற்கு அவர்களுடைய இயற்கையான திறமைகள் மட்டும் காரணம் அல்ல; அவர்களுடைய ஆசிரியரின் வித்தகமும் காரணமாகும். கலாவதிகளின் ஒவ்வொரு ஜதியிலும் சைகையிலும் மிகுந்த அக்கறையுடன் அவர் அளித்துள்ள பயிற்சியின் பலனைக் காண முடிந்தது.

கச்சேரியை மொத்தமாய் மதிப்பிடுகையில் அதன் ஒவ்வொரு அம்சத்திலும் எம். எஸ்ஸின் கலைப் பண்பும் நிறைவுப் பக்குவமும் பதிந்திருக்கக் கண்டேன் என்று சொன்னால் அது வெறும் ஊகமும் அல்ல; உபசாரமும் அல்ல. அவருடைய கவனிப்புடனும் ஈடுபாட்டுடனும், சதாசிவம் கல்கி ஆகிய இருவரின் கற்பனை செறிந்த கருத்துக்களும் திருத்தமான செயலாற்றலும் சேர்ந்து, இத்தகைய வெற்றிக்கு வகை செய்துள்ளன. கடினமான இந்தக் கலையை அதன் முழு அழகுடன் சிறக்கச் செய்வதற்கு, அதன் உத்திகளில் அடையும் தேர்ச்சி மட்டும் போதாது என்பதை இச் செல்வியரின் பெற்றோர்கள் நன்கு உணர்ந்து, எல்லாக் கலை அம்சங்களையும் நிதானத்துடனும் சீருடனும் இணைத்து, அரியதொரு காணிக்கை அளித்திருக்கிறார்கள்.

கல்கி பத்திரிகையிலும் அந்த அரங்கேற்றம் பற்றி ஒரு விமரிசனம் வந்தது— அம்மாதம் 29ந் தேதிய இதழில். அதை

பிரார்த்தனை என்பது காலையில் திறவு கோல் —
மாலையில் தாழ்ப்பாள். — மகாத்மா காந்தி

'மிர்ரர்' — பாலி



எழுதியவர் கல்கியாக இருந்திருக்க முடியாது என்று சொல்ல வேண்டியதே இல்லை. நெடு நாட்களாய் அவருடன் சேர்ந்து பரதக் கலையின் மறுமலர்ச்சிக்கு ஊக்கம் கொடுத்து வந்த ரசிகமணி தான் அதை எழுதியவர். டி.கே.சி.க்காகத் தமக்கே ஏகபோகமான ''ஆடல் பாடல்'' பகுதியை விட்டுக்கொடுத்தார் கல்கி. விரிவான அந்த விமரிசனத்தில் செல்வியரின் ஆடலைக் காண்கையில், தாமும் தம்முடன் ரசிகர்கள் யாவரும் ஓர் ஆனந்த உலகில் உலவியதாக, தமக்கே உரிய மொழியில் டி. கே.சி. வர்ணித்தார்.

தமது நண்பர்களின் குழந்தைகள் நடனப் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கையிலேயே, அவ்வப்போது டி. கே. சி. உடனிருந்து அவர்களுக்கு உற்சாகத்தை ஊட்டிக் கொண்டிருந்தார். அந்த நாட்களில் தமது சீடர் ஒருவருக்கு எழுதிய கடிதம் ஒன்றில், தமிழ்க் கவிதையின் நடைத் தாளத்தை நாட்டியத்திலும், அக்கலையின் தாள நடையைக் கவிதையிலும் தாம் கண்டு அனுபவித்து வருவதாகச் சொன்னார்.

அரங்கேற்றத்தைத் தொடர்ந்து சுமார் நாலாண்டு காலம், ஆனந்தி–ராதா நடனக் கச்சேரிகள், தமிழ் நாட்டிலும், வட நாட்டிலும் நடந்த வண்ணம் இருந்தன. அவற்றில் தமிழிசை விழா, கம்பன் விழா, பாரதி மண்டபத் திறப்பு விழா ஆகியவற்றில் நடந்தவை சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன. ஒவ்வொன்றிலும் புதுப் புது நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. உதாரணமாய், 1948ல் சென்னையில் டி.கே.சி.யின் தலைமையில் நடைபெற்ற கம்பர் விழாவிலே, ''மானினம் வருவ போன்றும்''; ''தோள் கண்டார் தோளே கண்டார்'' என்ற இராமாயண விருத்தங்களுக்கான அபிநய நிகழ்ச்சிகள்.

நாட்டிய ஜதிகளே கதையின் கதியுடனும், கதை மாந்தரின் விதியுடனும் ஊடாடுவதான ''சிவகாமியின் சபதம்'' நாவலில், ''வாழி நீ மயிலே'' என்பது பரதக் கலையின் சிறப்பைப் போற்றும் அத்தியாயங்களில் ஒன்று. அதிலிருந்து அந்தக் கலையின் அக்கால நிலை பற்றிய சில பொதுவான வரிகளை இங்கே நினைத்துப் பார்க்கத் தோன்றுகிறது:

அந்த நாளில் தென்னாட்டில் பரதநாட்டியம் பயின்றவர்கள் எத்தனையோ பேர் இருந்தார்கள். அன்றைக்குப் பல நூற்றாண்டு காலத்துக்கு முன்னாலிருந்து தென்னாட்டில் நடனக் கலை ஓங்கி வளர்ந்திருந்தது. பரத சாஸ்திரமும் அதற்கு வெகு காலத்துக்கு முன்பே எழுதப்பட்டிருந்தது. பரத நாட்டியக் கலையின் நுட்பங்களை உணர்ந்து அநுபவிக்கக் கூடியவர்களான ரஸிகர்கள் எவ்வளவோ பேர் நாட்டில் இருந்தார்கள்.

நெடிய இடைக்காலத்துக்குப் பிறகு, பண்டையக் காலத்தைப் போல் இந்த நவீன காலத்திலும் பரதக் கலையைப் பயில்வோர் தொகையும், அதன் நுட்பங்களை உணர்ந்து ரசிப்போர் தொகையும் பெருகுவதற்குத் தமது எழுத்துக் கலையினால் வெகுவாக உதவியவர் கல்கி. கர்நாடக சங்கீதப் பயிற்சியைப் போல் பரத நாட்டியப் பயிற்சியும், நாகரிகக் குடும்பப் பண்பாட்டுக்கும் பெண்களின் உண்மையான கலைக் கல்விக்கும் உகந்தவை என்பதைச் சொல் அளவில் அல்லாமல், செயல் அளவிலும் காட்டியவர். ஆனந்தி – ராதா நடன நிகழ்ச்சிகளின் மூலம் பரவிய கலையார்வ அலைகள் கொஞ்ச நஞ்சம் அல்ல.

பரதக் கலையின் மறுமலர்ச்சிக் காலத்தில் எல்லாவற்றையும் விட, மிகச் சிறப்பானதாய்க் கல்கி அளித்தது — ஏற்கனவே சொன்னதுதான் என்றாலும் மீண்டும் மீண்டும் சொல்லத் தக்கதான— ''சிவகாமியின் சபதம்'' என்ற இலக்கியக் காணிக்கை! (தொடரும்)



ஓடிப்போனவள்

தபால்காரர் கதவிடுக்கில் ஒரு கடிதத்தைப் போட்டு விட்டுப் போனார். கங்கா ஆர்வம் ததும்பும் நெஞ்சுடன் கடிதத்தைப் பிரித்தாள். படித்ததும், வந்த வேகத்தில் அவள் ஆர்வம் அடங்கி இதயத்தின் மூலையில் முடங்கிக்கொண்டது. விழிநீரைச் சுண்டி எறிந்து விட்டு, ஈஸிச்சேரில் சாய்ந்திருந்த தந்தையிடம் மௌனமாகக் கடிதத்தை நீட்டினாள்.



கடிதத்தைப் படித்த சிவராமனின் முகம் வெளிறியது. அதைக் கிழித்து, சுக்கல் சுக்கலாக்கியும் அவர் வெறுப்புத் தணியவில்லை.

''அப்பா! இந்தக் கடிதத்தைத் தூக்கி எறிந்தது போல், அதை எழுதியவர்களின் சம்பந்தத்தையும் மனத்திலிருந்து தூக்கி எறிந்து விடுங்கள்!''

தழுதழுத்த குரலுடன் சமாதானப்படுத்திய கங்காவை நீண்ட பெருமூச்சுடன் உற்றுப் பார்த்தார் சிவராமன். அம் முதியவரின் விழிகளிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் சிந்தியது.

''கங்கா! இந்த ஜென்மத்தில், உனக்குக் கல்யாணம், கார்த்திகை என்று எதுவுமே செய்து பார்க்க முடியப் போறதில்லை. அந்தப் பாவி இந்தக் குடும்பத்தில் பிறந்த தோஷத்துக்காக இக்குடும்பம் முழுக்க வேதனைப்பட்டுத்தான் தீரணும். அவளைப் பெற்ற பாவத்துக்காக உன்னைக் கன்னியாகவே பார்த்துப் பார்த்து நாங்க சித்திரவதைப் படவேண்டியதுதான். என் வயிற்றெரிச்சல் அவளை வாழ விடாது அம்மா...'' அவர் வார்த்தையை ஜீரணிக்கத் திராணியற்று உள்ளே ஓடினாள் கங்கா.

அவள் நெஞ்சு வெடித்து விடும்போலிருந்தது. மாலதியை அப்பா திட்டியதில் விளைந்த வருத்தம் ஒரு பக்கம், ரவியின் மேல் அவள் நம்பிக்கை சரிந்ததால் வாட்டம் ஒரு பக்கம்... அந்தச் சின்ன நெஞ்சுக்கு இத்தனை வேதனையா?

மாலதியின் மார்பிலும் தோளிலுமாக வளர்ந்தவள் கங்கா. கங்காவுக்காக எதையும் விட்டுக் கொடுக்கும் சுபாவம் மாலதிக்கு உண்டு. கங்காவின் காலில் சிறு முள் குத்தினாலும் அந்த முள் 'தன் நெஞ்சில் ஏறினாற் போல்' துடிப்பாள் மாலதி.

அப்படிப் பழகிய அக்கா இன்று தான் இருக்கும் இடத்தைக் கூடத் தெரிவிக்காமல் எங்கே, எப்படி இருக்கிறாளோ? அப்பா, அம்மா உயிருடன் இருந்தும், ஓர் அநாதையைப் போல் உன் திருமணத்தை முடித்துக் கொண்டாயே! நீ சௌக்கியமாக இருக்கிறாயா, அக்கா!

மாலதி படிப்பில் மிகவும் சூட்டிகையானவள். பள்ளி இறுதி வகுப்பில் தேறியதும் அவளைச் சமையல் அறைக்கு அனுப்புவதில் சிவராமன் முனைந்து நின்றார். படிப்பில் அவளது அபாரத் திறமையைக் கண்டு பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியரும், அப்பாவின் அத்யந்த நண்பருமான சங்கரலிங்கம் அவளைக் கல்லூரிக்கு அனுப்பும்படி சிவராமனைக் கட்டாயப்படுத்தினார்.

'அதெல்லாம் நமக்குக் கட்டாது. ஏழைக்குத் தக்க எள்ளுருண்டை; விரலுக்குத் தக்க வீக்கம்!' என்றெல்லாம் சிவராமன் ஆட்சேபித்தபோது, சங்கரலிங்கம், விடாப்பிடியாக முயற்சி செய்து மாலதியைக் கல்லூரியில் சேர்த்து விட்டார். அவ்வப்போது பணத்தட்டுப்பாடு ஏற்படும்போது தாமாகவே வலிய வந்து உதவி செய்தார். விளையாட்டுப் போல் நான்கு வருடங்கள் கடந்தன. மாலதி

பி.ஏ. தேறினாள். சங்கரலிங்கம் கைகொள்ளாமல் சாக்லெட்டுகளை அள்ளி வந்தார்.

மாலதியைத் தமக்குத் தெரிந்த கம்பெனி ஒன்றில் வேலைக்கு அனுப்பலாம் என்று பிரஸ்தாபித்தார். மாலதி வழக்கமான புன்னகையுடன் அங்கிருந்து நழுவி விட்டாள்.

மாலதி வேலைக்குப் போய் வரத் தொடங்கினாள். மாலதியைப் போல் கங்கா அவ்வளவு சூட்டிகையில்லையென்றாலும், இரு பெண்களையும் பாரபட்சமில்லாமல் ஒன்று போல் உருவாக்கும் நினைப்பில், சங்கரலிங்கத்தின் தலையீடு இல்லாமலே கங்காவைக் கல்லூரிக்கும் அனுப்பி வைத்தார் சிவராமன்.

அளவுக்கு அதிகமாகவே கிடைக்கும் அக்காவின் பராமரிப்பில், தன் மலர்ச்சியைப் பூரணமாகப் புரிந்து கொள்ளாத குழந்தைத்தனம் கங்காவிடம் நிறைந்திருந்தது.

அமைதியான நீரோடையாகச் சென்று கொண்டிருந்த வாழ்வில் அப்படியொரு குழப்பம் ஏற்படுவானேன் ?

அன்று ஞாயிற்றுக்கிழமை. ஈரக் கூந்தலை உலர்த்தியவாறு ரேடியோவைத் திருகிக் கொண்டிருந்தாள் கங்கா. சன்னமான குரலில் ஒரு கீர்த்தனையைப் பாடியவாறு, ஈரத் துணிகளைக் கொடியில் உலர்த்திக்கொண்டிருந்தாள் மாலதி. சிவராமன் தினசரியை மேப்பாயின் மேல் போட்டுவிட்டு மாலதியின் அருகில் வந்தார். ''மாலதி, நாளைக்கு உன்னைப் பெண் பார்க்க வரப் போறா, ஆபீசுக்கு லீவு போட்டுவிடு.''— தம் பெண் தம் வார்த்தையை மீறி எதுவும் சொல்ல மாட்டாள், செய்ய மாட்டாள் என்ற ஆழ்ந்த நம்பிக்கையில் செய்தியை மட்டும் சொல்லிவிட்டு அவளது அபிப்பிராயத்தை எதிர்பாராமல் திரும்பினார் அவர். உச்சஸ்தாயியில் அலறிக் கொண்டிருந்த ரேடியோவை மூடிவிட்டுச் சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள் மாலதி. இமைகளின் கீழ் அரும்பு கட்டிவிட்ட கண்ணீர். விநாடிப் பொழுதில் அந்த அழுகையைச் சிரிப்பாக மாற்றிவிட்ட திறமை. கங்கா அதைக் கண்டு விட்டாள்.

மாலதியா அழுகிறாள் ? எந்தச் சந்தர்ப்பத்திலும், எதையும் வெளிப்படுத்தாத மாலதி இந்த நல்ல விஷயத்துக்கு அழுவானேன் ?

கிணற்றடியில் துவைக்கும் கல்லின் மீது அமர்ந்திருந்தாள் மாலதி. அவள் நெஞ்சின் கசிவைக் கங்காவால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

''இந்தக் கல்யாணத்தில் உனக்கு விருப்பமில்லை என்று நினைக்கிறேன். இப்படி எல்லா விஷயத்திலும், உன் மனத்தை மூடி வைத்து உனக்கு என்ன லாபம் ? வெளிப்படையாக அப்பாவிடம் சொல்ல வேண்டியதுதானே !''

மாலதி வறண்ட புன்னகையுடன் கங்காவின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

மாலதியின் அலுவலகத்தில் வேலை செய்யும் ஒருவரை மாலதி விரும்புகிறாள். குலம், கோத்திரம், படிப்பு, பண்பு எல்லா விதத்திலும் மாலதிக்குப் பொருத்தமானவரே. ஆனால் அதை வெளிப்படுத்தப் போதிய தைரியம் அவளிடம் இல்லை.

ஒருநாள் விஷயம் வெளிப்பட்டவுடன் அப்பா இரைந்தார்: ''அவள் அடக்க ஒடுக்கமாக, நான் பார்த்து முடிவு செய்யும் பையனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சம்மதிப்பாள் என்றால் இந்த வீட்டில் இருக்கட்டும். இல்லையென்றால் இந்த நிமிடமே வெளியே நடக்கச் சொல் .... யாரை வேண்டுமானா

போட்டிக் கதை-12

வி.கௌரி



சுவாமியின் தலை முடியா.....?

''ஸ்ரீ வேங்கடேஸ்வர 'சுவாமிகளின் தலை முடி' செலுத்துவதை தேவஸ்தானம் சம்பந்தமான கல்யாண கட்டத்தில்தான் செலுத்த வேண்டும். இதர இடங்களில் முடிகள் செலுத்தினால் ஸ்ரீ சுவாமிகளுக்குச் சேராது. தேவஸ்தானம் 'பாட்ஜ்' இருக்கும் ஆட்கள் சொன்னாலே தவிர மற்ற 'தல்லானி' பேச்சுகள் நம்பி, நஷ்ட கஷ்டங்களுக்கு சுடாகாதீர்கள் என்று யாத்ரீகர்களை இதன் மூலமாக எச்சரிக்கை செய்யப்படுகிறது.''

திருப்பதி தேவஸ்தானம் ஆதரவில் இயங்கும் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பாலாஜி பவனம் தைநதராபாதத்தில் உள்ளது. அங்கே காணப்படும் பலகை அறிவிப்பு தான் மேலே உள்ளது.

ஒரு பல்கலைக் கழகமே நடத்தும் ஸ்ரீ வேங்கடேசுவர சுவாமிக்கு நல்ல தமிழில் ஓர் அறிவிப்பும் பலகை எழுதக்கூடியவர் கிடைக்காதது தமிழின் துரதிருஷ்டமே.

-சு.ரா.

லும் இழுத்துக் கொண்டு ஓடட்டும்...எக்கேடு கெட்டுத் தொலையட்டும்.....''

நெற்றி நரம்புகள் புடைத்து விட்டன அவருக்கு. கோவைப் பழமாகச் சிவந்திருந்த விழிகளைக் கொண்டு அவர் நெஞ்சின் சிலத்திலை அளக்க முடிந்தது.

வெவ்வேறு கோணங்களிலிருந்து, வேறுபட்ட மன நிலைகளில் தந்தையும் தாயும் கங்காவும் மாலதியைப் பார்த்தனர்.

மாலதி சிவராமனை நோக்கி நடந்தாள். தாயார் சிவகாமி திகிலுடன் தன் கணவரின் அருகில் வந்து நின்று கொண்டாள். மாலதி அவர் கால்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டபோது, அவர் வெறுப்புடன் கால்களைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டார். தாயை நமஸ்கரித்த போது, ''பெரியவர்களுக்குச் சம்மதமில்லாத ஒரு காரியத்தில் இறங்காதே, ஊர் சிரிக்க வழி பண்ணி விடாதே !'' என்று அவள் அரற்றினாள்.

வெறுக்கத் தக்க காரியத்தையே செய்தாலும், தாய் உள்ளத்தால் தன் குழந்தையை வெறுக்க இயலுவதில்லை. ஆனால் பிடிவாதம், முன் கோபம் இவற்றின் மொத்த உருவமான சிவராமனின் எதிரில் தன் பாசப் பிரவாகத்தை வெளிப்படுத்த இயலாமல் அந்தத் தாய் துடித்தாள்.

கங்காவின் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டாள் மாலதி. அந்த அழுத்தமான அணைப்பில், நெஞ்சை ஊடுருவிச் செல்லும் பார்வையில், எத்தனையோ யுகங்களுக்கான செய்திகளை அவளிடம் நிறைத்துவிட்டு, ''எல்லோரும் என்னை மன்னித்து விடுங்கள்'' என்ற ஒரே வார்த்தையுடன் அவள் வெளியேறி விட்டாள்.

அடுத்த நாளே தம் வேலையை ராஜிநாமா செய்துவிட்டுத் தூரத்திலிருந்த ஒரு குக் கிராமத்தில் குடியேறிவிட்டார் சிவராமன். சொந்தக் கிராமத்தில் நிலபுலன்கள், வீடு எல்லாம் இருந்தும், நடக்கக் கூடாத ஒரு தவறு நடந்துவிட்டாற் போலவும், அதனால் தெரிந்தவர்கள் முகத்தில் தம்மால் விழிக்க முடியாது என்றும் கற்பனை செய்து கொண்டு பூர்விக சொத்துக்களை யெல்லாம் விற்க ஏற்பாடு செய்துவிட்டு, முன்பின் தெரியாத இந்தக் கிராமத்தில் குடியேறினார்.

கங்காவின் படிப்பு தடைப்பட்டது. ஒரு பெண் படித்துக் குட்டிச்சுவரானது போதும் என்பது அவர் நினைப்பு.

ஊரைப் பொறுத்தவரையிலும், ஏன் சிவராமன், சிவகாமி இவர்களைப் பொறுத்த வரையிலும்கூட மாலதி, 'ஓடிப் போனவள்' ஆகிவிட்டாள். அடுத்த பெண்ணும், காதல், கீதல் என்று ஆரம்பித்துவிடப் போகிறாளே என்ற பயத்தில் உடனடியாக வரன் தேட ஆரம்பித்தார். ஆனால் என்ன காரணத்தாலோ ஒன்றும் கூடி வராமல் தட்டிப் போய்க் கொண்டே யிருந்தது. அப்போதெல்லாம் சிவராமன் மாலதியை முழு மூச்சுடன் திட்டுவார்.

இறுதியாக ரவி கங்காவைப் பெண் பார்க்க வந்த போதுதான், இவருக்காகவே தான் காத்திருக்கிறோமோ என்ற பிரமை கங்காவுக்கு ஏற்பட்டது. சில நொடிகளில் நெஞ்சில் முழுமையாகப் படிந்துவிட்ட அவன் உருவம்..... வறண்டு கிடந்த அவள் மனத்திலும் சில நீர்த் துளிகள்....

அவள் அவனுக்காகச் சில கற்பனைகளுடன் காத்திருந்தாள். அப்போதுதான் அந்தக் கடிதம் வந்தது. முன்பின் தெரியாதவனுடன் ஓடிப் போனவளின் தங்கையாம், கங்கா. இவர்கள் குடும்பத்தில் சம்பந்தம் செய்து கொள்ள அவர்களுக்கு விருப்பமில்லையாம்.

பிறர் வாழப் பொறுக்காத எந்தப் பாவியோ கங்காவை ஓடிப் போனவளின் தங்கை என்று அறிமுகப்படுத்தி யிருக்கிறான். தனக்கு ஒரு கண் போனாலும், எதிரிக்கு இரு கண்களும் போக வேண்டும் என்ற கொள்கை எல்லா இடங்களிலும் பரவிக் கிடக்கும்போது, கிராமத்தில் செய்தி ஒன்றுக்குப் பத்தாக, காட்டுத் தீயாகக் கிளம்பக் கேட்கவா வேண்டும்?

சிவராமன் குன்றிப் போய்விட்டார். அவர் முன்கோபக்காரர்தான். ஆனால் சொல் பொறுக்காத மானி. மூடி வைக்கப்பட்ட நெருப்பாக அவர் தமக்குள்ளேயே குமைந்து, அணைந்து கொண்டிருந்தார். கால ஓட்டத்தில் எந்தநெருப்பும் அணையத்தான் வேண்டும்.

அன்று வெள்ளிக்கிழமை..., சுவாமிக்கு விளக்கேற்றி வைத்துவிட்டு வாசலுக்கு வந்தாள் கங்கா. தெருக் கோடியில் அம்மா கோவிலிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தாள். ஓட்டமும், நடையுமாக – ஓர் அவசரம், பரபரப்பு தெரிந்தது. உள்ளே நுழைந்ததும் கங்காவின் கைகளை இரகசியமாக அமுக்கிவிட்டுச் சென்றாள். இவள் ஏதோ சொல்ல நினைக்கிறாள் என்று புரிந்து கொண்ட கங்கா அம்மாவைத் தொடர்ந்து கொல்லைப்புறம் சென்றாள்.

''கங்கா! கோயிலில் நம்ப மாலதியையும், அவள் அகத்துக்காரரையும் பார்த்தேன். பிராகாரத்தைச் சுற்றி வந்து கொண்டிருந்த போது கண்ணில் பட்டாள். நம்ம மாலதி மாதிரி இருக்கேன்னு கிட்டப் போனேன். நாம் இந்த ஊரில் இருக்கும் விஷயம் அவளுக்குத் தெரியாதாம். திருச்சியில்தான் அவளுடைய மைத்துனன், மாமனார் எல்லோரும்

முகஸ்துதி செய்யத் தெரிந்தவனுக்குப் பழிசுமத்தவும் தெரியும்.

- நெப்போலியன்

—மிர்ரர் – பாலி

தலைமுறைத் தலைமுறையாக தாய்மார்கள் நம்பிக்கையுடன் தேர்ந்தெடுப்பது...



ஜம்மியின் லிவர்க்யூர்

நம்பகமான குடும்ப நிவாரணி

ஆம். ஜம்மியின் லிவர்க்யூர் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக குடும்பத்-தலைவிகளால் போற்றி பாதுகாக்கப்படும் ஓர் நம்பகமான குடும்ப நிவாரணி. பாட்டிமார்களின் காலங்களிலிருந்து பயன்படுத்தப்பட்டு வரும் கைகண்ட மருந்து.

பரிசோதனைக்குட்பட்ட ஜம்மியின் லிவர்க்யூர்-ஈரல் குலைக்கட்டி மற்றும் பலவித காரணங்களால் ஏற்படும் ஈரல் சம்பந்தப்பட்ட எல்லாவிதமான வியாதிகளுக்கும் உடனடி நிவாரணமளிக்கும்.




தயாரிப்பாளர்கள்:

ஜம்மி பார்மஸூட்டிகல்ஸ்
சென்னை-600026.

ஜம்மியின் லிவர்க்யூர்-ஓர் ஒப்பற்ற குடும்ப நிவாரணி.

நகைச்சுவை ஜீரண சக்திக்கு உதவுகிறது. இதனால்தான் அந்தக் காலத்தில் மன்னர்கள் சாப்பிடும் போது, விதூஷகர்களை அருகில் வைத்துக் கொண்டு அவர்களைப் பேசச் சொல்லிச் சிரித்துக் கொண்டே சாப்பிடுவார்கள். -மீரச் – பாலி



இருக்கிறார்களாம். மைத்துனன் கல்யாண விஷயமாகத்தான் திருச்சிக்கு வந்தார்களாம். நம்ம ஊர் அம்பாள் அவர்களுக்குக் குல தெய்வமாம். இரண்டு பேர்களும் வந்திருக்கிறார்கள். மாலதியோட அகத்துக்காரர் ரொம்ப நல்ல சுபாவம். அவர்தான் இத்தனை விஷயத்தையும் எங்கிட்டே சொன்னார். நம்ப மாலதி என் கையைப் பிடிச்சுண்டு விக்கி விக்கி அழறாள். அவளுக்குப் பேச்சே வரலை. வீட்டுக்கு வாடீன்னு கூப்பிட்டேன். 'இன்னும் நான் நினைத்த காரியம் முடியல்லை, அம்மா, என்னால் நாளைக்குத்தான் பார்க்க முடியும்' என்கிறாள். இன்னும் புதிர் போட்டுப் பேசற வழக்கம் அவளை விட்டுப் போகலை... எனக்கு ஒண்ணும் புரியலை..... அவா நாளைக்கு வந்தால் உங்க அப்பா எப்படி நடந்துப்பாரோன்னு நினைச்சாலே பயமாயிருக்கு....." படபடவெனப் பேசிக் கொண்டே போனாள் சிவகாமி.

கங்காவின் மனத்தில் இனம் புரியாத ஒரு விசித்திரமான சூழ்நிலை கப்பியது. பூரணமான நிலவொளியில், முற்றத்தில் பூத்துக் குலுங்கும் மல்லிகை, முல்லை மலர்களின் மணத்தில் அவள் மயங்கிப் போய் அமர்ந்திருந்தாள். நாளைக்கு அக்காவைப் பார்க்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சி. அவள் சௌக்கியமாயிருக்கிறாள் என்றறிந்ததில் நிம்மதி..

மறு நாள் மாலை.... மூன்று மணி சுமாருக்கு..... சமையல் அறை அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. இரண்டு, மூன்று வகை ஸ்வீட்டுகள், முறுக்கு, பஜ்ஜி. சிவகாமி எத்தனையோ கற்பனைகளுடன் தயாரித்துக்கொண்டிருந்தாள். ஆனால் சிவராமனிடம் எதையும் தெரிவிக்கவில்லையே என்ற பயம்....

ஒரு தட்டில் எல்லா ஸ்வீட்டுகளையும் வைத்துச் சிவராமனிடம் கொண்டுவைத்தாள் கங்கா......

"இன்று என்னம்மா விசேஷம் ?"

கங்காவுக்குத் தொண்டை எழும்பவில்லை. மௌனமாக நின்றாள். "இந்த நேந்திரம் பழம் பஜ்ஜி மாலதிக்குத்தான் ரொம்பப் பிடிக்கும். தனியாக எடுத்து வையம்மா.... மற்ற ஸ்வீட்டுகளை இப்படிக் கொண்டா..." சிவராமன் கை நீட்டியபோது கங்காவின் கைகள் நடுங்கின. 'இவருக்கு எப்படித் தெரிய வந்தது ? எப்படி இவ்வளவு சாதாரணமாக இருக்கிறார் ?'

அவள் பெயரை இவர் உச்சரித்து எத்தனை வருடங்கள் ஆகியிருந்தன..... பிரளயத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தவளுக்குச் சற்றே ஆறுதல்.....

மணி நான்கு, ஐந்து என்று ஓடிக் கொண்டேயிருந்தது. பவழமல்லி மரத்தடியில் நாற்காலியில் சாய்ந்து அந்தி அழகை ரசித்துக் கொண்டிருந்தார் சிவராமன். நேரம் செல்லச் செல்லக் கங்காவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அப்பாவை எதிர்நோக்கும் திராணியில்லாமல் மாலதி வராமலே போய்விடுவாளோ ? அவளைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டாமலே போய்விடுமோ ?

இந்தக் கற்பாறை இளகிவிட்ட செய்தி அவளுக்குத் தெரிய நியாயமில்லைதான்.... சுவாமி அறை மனத்துக்குப் பிடித்திருந்தது... கங்கா அங்கே சரண் புகுந்தாள்.

திடீரெனக் கூடத்தில் பேச்சுச் சத்தம். ஊஞ்சலில் அப்பாவும், மாலதியின் அகத்துக்காரரும் ! கதவருகில் மாலதி தயங்கி நிற்கிறாள். கங்கா அணையை உடைத்துக்கொண்டு தேங்கிக் கிடந்த வெள்ளமாக வெளியே பாய்கிறாள். அவளது அணைப்பில் மாலதிக்கு மூச்சுத் திணறுகிறது.

" கங்கா! வெளியில் யார் நிற்கிறது, பாரு !" என்கிறாள். கங்கா எட்டிப் பார்க்கிறாள். ரவியும், அவன் தந்தையும். திடீரென்று வெட்கம் அவளைக் கவ்வுகிறது. உள்ளே ஓடுகிறாள்.

அப்பா வாசலுக்கு வந்து அவர்களை வரவேற்கிறார். கதவருகில் நிற்கும் மாலதியைப் பார்த்ததும், பார்வையாலேயே அவளிடம் சொல்ல வேண்டியவைகளைச் சொல்லிவிட்டு, "உள்ளே வாம்மா மாலதி! கடந்ததெல்லாம் நினைப்பிலே வைச்சுக்காதே" என்று தழுதழுத்த குரலில் கெஞ்சுகிறார். இன்னும் ஒரு வார்த்தை பேசினால் அழுதுவிடுவார் போல் தோன்றியது.

மாலதி சட்டென்று அவரை நமஸ்கரித்துவிட்டு உள்ளே கங்காவைத் தேடிச் சென்றாள்.

ரவியின் அப்பா விவரமாகச் சொல்கிறார். முரளி அவர் மூத்த பிள்ளைதானாம். இந்தக் கல்யாணப் பேச்சு நின்று போனதும், ரவி, அப்பா அம்மாவுக்குத் தெரியாமல் அண்ணாவுக்குக் கடிதம் போட்டிருக்கிறான். கங்கா களங்கமற்றவள் என்று அவன் உள் மனத்தில் பட்டிருப்பதால், கங்காவைத் தவிர யாரையுமே கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்று உறுதியாகக் கூறிவிட்டானாம். போட்டோவைப் பார்த்ததும் மாலதிக்கு விதிர் விதிர்த்துப் போயிருக்கிறது.


கங்கா தன் தங்கை என்று சொல்லிவிட்டு நீண்ட நேரம் நினைவற்றுக் கிடந்தாளாம். தன் செயல் தன் குடும்பத்தை, தன் தங்கையை இவ்வளவு தூரம் பாதித்ததைக் கண்டு அவளால் பொறுக்க முடியவில்லையாம்.

கங்கா இவள் தங்கை என்று தெரிய வந்த உடனே அனைவரும் ஏகோபித்துச் சம்மதித்தனராம்.

தீர விசாரியாமல் அவசரப்பட்டுக் கடிதம் எழுதியதற்காக ரவியின் அப்பா மிகவும் வருத்தப்பட்டார்.

கல்யாணத்துக்கு நாள் பார்த்துவிட்டதாகவும், நிச்சயதார்த்தத்தை முடித்துவிடலாம் என்றும் அவர் தெரிவித்தபோது சிவராமனுக்குப் பெருமையாக இருந்தது.

மாலதி ஓடிப்போனவள் அல்ல, வாழ்க்கையைத் தேடிப் போனவள் என்பது அந்தக் கணத்தில் அவருக்குப் புரிந்தது.


முல்லா சென்று கொண்டிருந்த பஸ் ஒரு சிறுவன் மீது மோதி விட்டது. ஒருவர் முல்லாவைப் பார்த்துக் கேட்டார்:
"என்ன மேஜர் ஆக்ஸிடெண்டா?"
"சிறுவன் மீதுதான் மோதியது. மைனர் ஆக்ஸிடெண்ட் தான்!" என்றார் முல்லா.
முல்லா ஒரு டிரெய்லர் பஸ்ஸைப் பார்த்து "இது 'காதலர் பஸ்'" என்றார்.
பக்கத்தில் இருந்த நண்பர் "இது எப்படிக் காதலர் பஸ்ஸாகும்?" என்று வினவினார்.
"பாருங்க இரண்டு பஸ்ஸும் கை கோர்த்துச் செல்கிறது!" என்றார் முல்லா.
பஸ் டயர் பஞ்சர் ஆகிவிட்டது. ஒரு பிரயாணி முல்லாவிடம் கேட்டார்: "என்ன சார் இவங்களிடம் ஸ்பேர் டயர் இல்லையா?"
"இல்லை, இவர்களிடம் டன்லப் டயர்தான் உள்ளது" என்றார் முல்லா.
முல்லாவின் விளக்கம்:
ஓட்டுனர்: நம்மை பஸ் ஸ்டாப்பில் இருந்து சிறிது தூரம் ஓட வைப்பவர்.
நடத்துனர்: நம்மை 'முன்னால் போ, முன்னால் போ' என்று சொல்லி நடக்க வைப்பவர்.
முல்லா தம் நண்பரிடம் கேட்டார்: "'இறங்கி வருபவருக்கு வழி விடுங்கள்' என்று பஸ்ஸின் உள்ளே எழுதி வைத்திருக்கிறார்களே? அது ஏறி வருபவருக்கு எப்படித்தெரியும்? பஸ்ஸின் வெளியே எழுதியிருந்தால் தானே தெரியும்?"
— எஸ். சந்திரசேகர்
பஸ்ஸில் முல்லா!

17. "அதிசயம்! அதிசயம்!"

சேகர் அந்தப் புட்டியை வெகு நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். எத்தனையோ கேள்விகள் அவன் மனத்துள் சுழன்று சுழன்று வந்தன. ஒரு நாள் இடைவெளியில் இரண்டு விஷப் புட்டிகள் உடைக்கப் பட்டிருக்கின்றன. யாருக்குக் கொடுக்கப்பட்டன அவை?

டாக்டர் ரமணனுடைய வீட்டில் அவை கண்டெடுக்கப் பட்டதால் அங்கேதான் யாரோ அதைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். அப்படியானால் டாக்டர் ரமணனுடைய வீட்டில் யாராவது இறந்து போயிருக்க வேண்டுமே! யாரும் இறந்ததாகத் தெரியவில்லையே! பின் எங்கே போயிற்று இதிலுள்ள விஷம்? டாக்டர் கார்த்திக்கின் வாயைப் பேச வைத்தால்தான் 'மர்மம்' வெளிப்படும்!

''ரோனி! கவனமாகக் கேள்! இப்போ நாம் கார்த்திக்கைப் பேச வைத்து ஆகணும். அவன் மனம் விட்டுத் தமது வெற்றி தோல்விகளைப் பேசணும்! பேசறதெல்லாம் ரிக்கார்டாகி என் கைக்கு வரணும்... ஒருத்தன் மனம் விட்டுத் தன் 'ஹீரோயிஸ'த்தைப் பேசறதுன்னு, அவன் யாரைப் பெரிய ஹீரோயினாக நினைச்சுண்டிருக்கானோ, அவள்கிட்டே தான் பேசுவான். அப்படிப் பேச அவனை அவள் சிலுப்பி விடணும்... இந்தக் கேஸிலே நிர்மலாதான் ஸ்குரு! அதை நீ உடனே இருகி விடணும்.''

''செய்யறேன், ஸார். என்கிட்டே அவ ளுக்கு ரொம்ப நம்பிக்கை. 'இந்த ஆளை நம்பாதீங்கம்மா'ன்னு சொல்லி இந்தப் புட்டியிலே ஒன்றைக் காட்டிட்டாப் போதும்'' என்றான் ரோனி.

''சரி! இன்றைக்கே அதைச் செய். டாக்டர் ரமணன் இருக்கிற அறை, பக்கத்து ஹால் இரண்டிலேயும் மாதிக் மைக்கைப் பொருத்தச் சொல்லி, கோபால்கிட்டே போன வாரம் கொடுத்து அனுப்பினேனே?''

''அப்பவே பொருத்திட்டேன் ஸார்! இப்ப அந்த இரண்டு அறைகளிலே யார் பேசினாலும் உடனே என் அறையிலே இருக்கிற ரிக்கார்டர்லே பதிவாகிவிடும்.''

''வெல்டன், ரோனி! நீ வெகு சீக்கிரத்தில் இந்த டிபார்ட்மெண்டிலே பெரிய அதிகாரியாய் வருவாய்; நிச்சயம்! நானும் இன்னிக்குச் சென்னைக்குப் போகிறதைக் 'கான்ஸல்' பண்ணி விட்டேன். உங்க நர்ஸிங் எஸ்டேட்டுக்கு எதிரே இருக்கிற மின்சார லைப் ஸ்டேஷன்லே ஒரு போலீஸ் படையுடன் தயாராக இருப்பேன். ஏதாவது தப்புத் தண்டா நடந்தால் உடனே ஃபோன் செய்! அஞ்சாவது நிமிஷம் வந்து விடுவேன்?''

''ஓ. கே. ஸார்!'' என்றான் ரோனி.

அந்தப் பொன் மாலை நேரத்தில் நர்ஸிங் ஹோமை அடுத்த பெரிய கட்டிடத்தின் மூன்றாவது மாடியில் டாக்டர் ரமணன் படுத்திருந்த அறை வாசலில் வெள்ளைக் கோட் அணிந்த ஒரு சிறு கூட்டம் குழுமி நின்று ஆவலுடன் உள்ளே தலையை நீட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

மூன்று நாட்களாகக் கூம்பிய தாமரையாக இருந்த அந்த முகங்கள் இப்போது மலர்ந்து இதழ் விரித்திருந்தன. காரணம், அவர்கள் உள்ளத்தில் வைத்துப் போற்றி வரும் பெரிய டாக்டர் ரமணன் இன்று கண் திறந்து பார்த்துக்கொண்டிருந்ததுதான்.

''டாக்டர்! நீங்கள் அவரைக் காப்பாற்றி விட்டீர்கள். மூன்று நாட்களாக இரவு பகலாகப் போராடி யமனிடமிருந்து மீட்டு விட்டீர்கள்!'' என்று ஆனந்தம் தொண்டையை அடைக்கச் சொன்னார் டாக்டர் பாண்டுரங்கன்.

''பரம பிதா நம் பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டு அற்புதம் புரிந்து விட்டார்! ஆகா! இதே போல் டாக்டருக்குப் பேசும் சக்தியும் திரும்பி விட்டால்—'' என்று உருகினார் டாக்டர் செபஸ்டியன்.

''அவருக்கு நிச்சயமாக வரும். இன்னும் இரண்டு நாட்களில் அவர் பேசுவார்'' என்றான் கார்த்திக். ''ஒரு புது மருந்து அனுப்பச் சொல்லி அமெரிக்காவுக்கு 'கேபிள்' கொடுத்திருக்கிறேன்.. நாளை மறு நாள் வந்துவிடும்.''

''மூன்று மாதமாகி விட்டது — ஒவ்வொரு வாரக் கடைசியிலும் விடை பெற்றுப் போகும்போதும் கனத்த மனத்துடன்தான் போகிறோம்'' என்றார் டாக்டர் குருசாமி.

''இந்த வாரம் நீங்கள் நிம்மதியாக விடுமுறையைக் கழிக்கலாம். இனி டாக்டருக்கு அபாயமில்லை.''

''தாங்க்ஸ், டாக்டர்!'' என்று சொல்லி விட்டு எல்லா டாக்டர்களும் கிளம்பினார்கள்.

ஹாலின் கோடியில் துயரமே வடிவாக உட்கார்ந்து, தன் கைவிரல்களையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் நிர்மலாவைக் கண்டதும் டாக்டர் பாண்டுரங்கன் அவசரமாக அவளிடம் போனார். ''மேடம்! இன்னும் என்ன துக்கம்? நம்ப டாக்டர் பிழைத்துக்கொண்டு விட்டார்! கண் திறந்து பார்க்கிறார்!'' என்று உற்சாகமாகக் கூறினார்.

''நிஜமாகவா?'' என்று பரபரப்புடன் எழுந்தாள் நிர்மலா.

''எஸ், மேடம்! போய்ப் பாருங்கள்!'' என்று சொல்லிவிட்டு மற்ற டாக்டர்களுடன் வெளியேறினார் பாண்டுரங்கன்.

சுவரில்

ஸ்ரீஜா சந்திரநாத்

நிர்மலா திரும்பினுள். ரமணனுடைய அறை வாசலில் டாக்டர் கார்த்திக் கையில் ஸிரஞ்சுடன் நிற்பது தெரிந்தது. 'உட்கார், அங்கேயே' என்பது போல் அவன் இடக்கை அசைந்தது. பார்வை மிகக் கடுமையாக இருந்தது. அந்தப் பார்வையின் தீட்சண்யத்தைத் தாங்க முடியாமல் நிர்மலா நிலைகுலைந்து, 'தொப்'பென்று உட்கார்ந்தாள்.

டாக்டர் கார்த்திக்கின் முகபாவம் அடுத்த கணம் மாறியது. புன்முறுவல் உதடுகளில் அரும்பியது. ''நிர்மல்! நீ இன்னும் சில நிமிஷ நேரம் காத்திருக்க வேண்டும்!'' என்று சொல்லிவிட்டு அறைக்குள் திரும்பிச் சென்ருன். நிர்மலா சிலையாக உட்கார்ந்திருந்தாள்.

நியூ காலனியில், டாக்டர் கார்த்திக்கின் வீட்டில் ரஹீம்சாகிப் டெலிபோன் டயலை அவசரமாகச் சுழற்றினுர். மணியடித்தது. யாரோ எடுத்தார்கள்.

'' டாக்டர் கார்த்திக் வேண்டும். நான் அவர் சமையற்காரன் பேசுகிறேன்!''

''சொல்லு, ரஹீம் சட்டென்று! நேரத்தை வீணுக்காதே!'' என்றது கார்த்திக்கின் குரல்.


''ஒன்றுமில்லே, ஸார்! பக்கத்து வீட்டு டிரைவர் நாயுடு 'பாஸ்' கொண்டு வந்திருக்கிறுன்.....''

''ஸினிமாவுக்கா? போய் வா! ஜாக்கிரதையாயிரு. நான்கூட ராத்திரிக்கு வர மாட்டேன்.''

'டக்'கென்று ரிஸீவரை வைத்தார்கள். அடுத்த நிமிடம் ரஹீம் சட்டைப் பையிலிருந்து ஒரு பெரிய சாவிக் கொத்தை எடுத்தான். அடுத்த பதினைந்து நிமிஷத்தில் அந்த வீட்டிலிருந்த அலமாரிகள், டிரங்க், டிராயர்கள், கப்போர்டுகள் – ஒன்று பாக்கியில்லாமல் சடசடவென்று திறந்து கொண்டன.

ஆனல் அவன் தேடிய பண்டம் கடைசியில் தான் கிடைத்தது. அது ஒரு சிறு கடிதம்.





விஜயவாடாவில் உள்ள பால் ப்ராஜெக்ட்டுக்குப் போக பஸ் ஸ்டாப்பில் கால் கடுக்க வெகு நேரம் நின்றிருந்தோம். சுமார் ஒரு மணி நேரம் கழித்து பஸ் வந்தது. ஏறினோம்.

கண்டக்டர் டிக்கட் கொடுக்க வந்தார். ''தயிர் ப்ராஜக்ட்டுக்கு ஒரு டிக்கட்'' என்றார் பக்கத்தில் இருந்தவர்.

'' என்ன விளையாடுகிறீர்களா? பால் ப்ராஜெக்ட் தானே?'' என்றார் கண்டக்டர்.

''இத்தனை நேரத்துக்குப் பிறகும் பால் பாலாக இருக்குமா? அது தயிராகத் தோய்ந்து போயிருக்குமே!'' என்றாரே பார்க்கலாம், பிரயாணி. கண்டக்டரையும் சேர்த்து பஸ்ஸில் இருந்த எல்லோரும் சிரித்துவிட்டார்கள். -சு.ரா.

அதைப் படித்ததும் அவன் முகம் மலர்ந்தது' ''ஆண்டவன் கருணையே கருணை'' என்று வாய்விட்டுக் கூவினான்.

அடுத்த கணம், அதை ஜிப்பாப் பையில் போட்டுக் கொண்டு அலைத்துப் போட்ட எல்லாவற்றையும் சீர்ப்படுத்தத் தொடங்கினான்.

எல்லாவற்றையும் 'சீர்ப்படுத்தி விட்டு அவன் நிமிர்ந்தபோது 'கர்ர்ர்' என்று பஸ்ஸர் ஒலித்தது. நெஞ்சு படக்கப் படக்கப் போய்க் கதவைத் திறந்தான். அடுத்த கணம் திடுக்கிட்டான். அங்கே மாலதி நின்று கொண்டிருந்தாள்.

''பாய்! இந்த வீட்டில் ரமேஷ் என்று ஒருவர் இருக்கிறாரா ?'' என்று கேட்டாள் மாலதி.

''நம்பள் தமிழ் மாலும் நை !'' என்று சொல்லிவிட்டு எங்கோ பார்த்தான் ரமேஷ்.

''நான் அவரை அரெஸ்ட் செய்து கொண்டு போக வந்திருக்கிறேன்'' என்றாள் மாலதி.

''அரெஸ்ட் செய்ய?'' என்று திடுக்கிட்டுக் கேட்டான் ரமேஷ். ''என்ன குற்றம் செஞ்சான்?''

'' அவன் இப்போதெல்லாம் ரொம்ப ரொம்பப் பொய் சொல்றான். 'தமிழ் மாலும் நை' என்கிறான். ஆனால் தமிழ் பேசுகிறான் !''

''லட்கி ! நம்பள்கி தமிழ் நாடுதான் ; நம்பள் தமிழ் முஸ்லிம்.''

''ஐய்ய — தமிழ் முஸ்லிம்கூட இப்படி இந்தியைக் கொலை செய்யமாட்டான். அது இருக்கட்டும். இந்தத் தாடி தமிழ்த் தாடியா, முஸ்லிம் தாடியா ?'' — மாலதி சட்டென்று பாய்ந்து ரமேஷின் தாடியைப் பற்றி இழுத்தாள். அடுத்த விநாடி அது அவள் கையோடு வந்துவிட்டது.

'' ஐயோ, என் தாடி, என் தாடி'' என்று கதறினார் சாயபு. பிறகு சட்டென்று மாலதியின் கையிலிருந்து பொய்த்தாடியைப் பிடுங்கி அணிந்து கொண்டே, ''என்ன காரியம் செஞ்சே, மாலு. நான் இப்போது மாறு வேஷத்தில் இருக்கிறேன் — ஒரு முக்கியமான காரியமாக '' என்றான்.

''எல்லாம் எனக்குத் தெரியும் ! இந்த மாலதியை ஏமாற்றவா ? இல்லை, ரோஸி என்கிற புதுக் காதலியை ஏமாற்றவா ? எதற்காக இந்த வேஷம் ?'' என்றாள் மாலதி.

'' ஐயோ, சத்தியமாகச் சொல்கிறேன். ரோஸிக்கும் எனக்கும் 'ஒரு மண்ணாங்கட்டியும்' கிடையாது. உள்ளே வாயேன்—எல்லாம் விவரமாகச் சொல்கிறேன்'' என்று ரமேஷ் அவளைப் பலவந்தமாக இழுத்துக் கொண்டு உள்ளே வந்து கதவைச் சாத்தினான். அடுத்த கணம் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு, ''நான் இப்போதும் நிரபராதி தான் மாலு ! நான் தனத்தைக் கொலை செய்யவும் இல்லை; இந்த ரோஸியைக் காதலிக்கவும் இல்லை. தனத்தைக் கொன்றவனைக் கார்த்திக்கிடமும் ரோஸியைக் காதலிப்பவனாக உன் அண்ணாவுக்காகவும் நடித்துக் கொண்டிருக்கிறேன். என்னை நம்பு, மாலு!'' என்று கதறினான்.

'' எப்படி நம்புவது ? நான் இனி நம்பவே மாட்டேன். டிடெக்டிவ் அருள்தாஸ் வந்து என்னிடம் எல்லாம் விவரமாகச் சொல்லி விட்டார். ரோஸியை நீங்கள் சந்திப்பதே இல்லையா ?''

'' சந்திக்கத்தான் செய்கிறேன், மாலு! ஆனால் அவள் யார் என்று தெரிந்தால் இப்படிக் கேட்கமாட்டாய். அவள் துப்பறியும் பிரிவைச் சேர்ந்த ஒரு டிடெக்டிவ். நானும் அவளும் இங்கே ஒரு முக்கியமான துப்பைத் தேடி வந்திருக்கிறோம்.''

''நல்ல கதை '' என்று சிரித்தாள் மாலதி. ''கொலை நடந்த இடத்தில் அல்லவா துப்பு கிடைக்கும். இந்த ஊர் தியேட்டர்களில்கூட 'இங்கே துப்பு' என்ற பெட்டிகள் இல்லையே!'' என்றாள்.

'' ஆனால் இந்த ஊரில்தான் கொலையாளி இருக்கிறான், மாலு. தாரிணியைக் கொன்ற கொலைகாரன்; டாக்டர் பணிக்கரைக் கொன்ற கொலைகாரன்.''

''பெங்களூர் தனத்தைக் கொன்ற கொலைகாரன் ?'' என்று எகத்தாளமாகக் கேட்டாள் மாலதி.

'' அவளை யாரும் கொலை செய்யவே இல்லை; அவள் உயிரோடுதான் இருக்கிறாள். அவளை யாரோ கொன்றுவிட்டதாகப் பெங்களூர் போலீஸாரைவிட்டுச் செய்தி போடச் செய்து நான் கொலை செய்தேன் என்ற செய்தியை ஜெயராம் மூலம் கோவிந்துவின் காது வரை செய்தியை விஸ்தரித்து, அதற்குத் தோதாக என்னை அரெஸ்ட் செய்ததாக நடித்ததும் உன் அண்ணாதான்.''


''ஜெயிலிலிருந்து நீங்கள் தப்பி ஓடினதும் இங்கே மாறு வேஷத்தில் மறைந்திருப்பதும் கூட என் அண்ணாவினால்தானோ ?'' என்று பரிகாசக் குரலில் கேட்டாள் மாலதி.

''ஷ்யூர், ஷ்யூர், ஷ்யூர்'' என்றான் ரமேஷ். ''சேகர்தான் என்னைத் தப்பவிட்டான். சேகர்தான் இந்த முஸ்லிம் உடைகளைத் தந்தான். சேகர்தான் என்னை இங்கே கார்த்திக்கிடம் அனுப்பியும் வைத்தான்.''

'' எதற்காக ?''

''கார்த்திக்கின் கூடவே இருந்து விமலாவைக் கடத்திச் சென்ற விஜயனின் இருப்பிடத்தை அறிவதற்காக என்னையும், டாக்டர் ரமணனின் வீட்டில் கார்த்திக்கின் நடவடிக்கைகளை 'வாச்' பண்ண ரோஸியையும்

20 லட்சம் பேர் கண்டுகொண்ட அனுபவம் : நம்பிக்கைக்கு மறு பெயர் க்ளியர்டோன்.



கறாரான தரக் கட்டுப்பாட்டின் பலனைப் பாரீர்: இந்தியாவிலேயே உச்ச விற்பனை க்ளியர்டோன் மின்சார இஸ்திரிப் பெட்டிகளுக்கே.

மாறாத தரத்தை 20 லட்சம் இதயங்களிலே பதித்துவிட்ட க்ளியர்டோன் சாதனங்களின் தகுதிக்குக் காரணம்: உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும், உற்பத்திக்கு முன்னும் பின்னும் உள்ள தரக் கட்டுப்பாடுகளே. அதன் விளைவே, க்ளியர்டோன் இஸ்திரி பெட்டிகளுக்கு உள்ள உச்ச விற்பனை. க்ளியர்டோன் ஒன்றுதான் இவற்றைத் தரும்:

உன்னத நம்பிக்கை, மேம்பட்ட பாதுகாப்பு.

உழைப்புறுதிக்கும், உயர் உஷ்ண, ஓவர்லோடு நிலைகளில் இயங்கும் திறனுக்குமான பல பரிட்சைகளில் தேறியவை க்ளியர்டோன் இஸ்திரிப் பெட்டிகள், ஷாக் அடிக்காத பாதுகாப்புக்கும், கரண்டு கசியாமைக்கும் பரிசோதனை பெற்றவை.

ரகங்கள் பலப் பலவிதம்.

ஆட்டோமேட்டிக், நான்—ஆட்டோமேட்டிக் மின்சார இஸ்திரிப் பெட்டிகளை எட்டு மாடல்களில் தருகிறது க்ளியர்டோன்.

கிட்டத்திலுள்ள விற்பனைக் கடையிலே பார்வையிடுங்கள் பல தரப்பட்ட க்ளியர்டோன் வீட்டுபயோக சாதனங்களை.

Kleertone

க்ளியர்டோன்- வீட்டுபயோக சாதனங்களின் படைப்பகம்

தி நேஷனல் ரேடியோ & எலக்ட்ரானிக்ஸ் கோ லிட்.
பம்பாய் • டெல்லி • கல்கத்தா
சென்னை • இந்தோர் • சிகந்தராபாத்
பெங்களூர் • கான்பூர்



உங்கள் பணத்திற்குப் பொறுப்பு - எங்கள் பெயரின் மதிப்பு !

Creative Unit-A 2011-Tam

அனுப்பியிருக்கிறான். நான் போலீசுக்குப் பயந்து ஒளிந்து வருகிறவன் என்றும், எங்காவது வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கும்படியும் கெஞ்சிக் கூத்தாடி, கார்த்திக்கிடம் ஒட்டிக் கொண்டிருக்கிறேன்.''

''இதையெல்லாம் நீங்கள் ஏன் முன்பே என்னிடம் சொல்லவில்லை?''

'' அப்போது உன் அண்ணனுக்குக் கட்டுப்பட்டிருந்தேன்.''

''இப்போது ?''

'' இப்போது எனக்கு உன்னைத் தவிர வேறு எதுவுமே பெரிதில்லை. உன் அன்பும் நம்பிக்கையும்தான் எனக்கு இப்போது பெரிது. எந்த நாய் யாரைக் கொலை செய்தாலும், தப்பித்துக் கொண்டு ஓடினாலும் எனக்கு இனி அக்கறை இல்லை. எனக்கு இனி இந்த உத்தியோகமும் வேண்டாம்; இந்த வேஷமும் வேண்டாம்'' என்று சொல்லிக் கொண்டே சேகர் தாடி மீசைகளைப் பிடுங்கி எறிந்தான். மாலதியின் கைகளைப் பற்றிக் கொண்டே, ''வா, மாலு, போலீஸ்காரர்களும், கொலைகாரர்களும் — மனுஷ சாதியே இல்லாத ஏதாவது ஒரு மூலைக்குப் போய்விடுவோம், வா'' என்று வாசலை நோக்கி நடந்தான்.

தாளை நீக்கிக் கதவைத் திறந்ததும் மீண்டும் தூக்கிவாரிப் போட்டது. அங்கே தாடியும் மீசையுமாக ரோஸியின் தந்தை நின்றார். ''அண்ணா ! நீங்களா ?'' என்றாள் மாலதி.

'' என்னம்மா ! நான் என்ன சொல்லி உன்னை அழைத்து வந்தேன் ? இந்தக் கேஸ் முடியும்வரை நீயாகப் போய் ரமேஷைச் சந்திக்கவோ பேசவோ கூடாது என்று நிபந்தனையின் பேரில்தானே அழைத்து வந்தேன் ? இப்படிச் செய்யலாமா ?'' என்று கேட்டான் கிழ வேடத்திலிருந்த சேகர்.

''என்னை மன்னிச்சுடுங்க, அண்ணா. என்னால் அவரைப் பார்க்காமலோ, பேசாமலோ இருக்கவே முடியவில்லை, அண்ணா ! அதனால் தான் நீ ரோஸியை மீட் பண்ணப் போயிருந்த போது ஹோட்டல் அறையைப் பூட்டிக் கொண்டு வந்துவிட்டேன்....'' என்று கண் கலங்கக் கூறினாள் மாலதி.

''என்னப்பா, சேகர் ! இந்தக் கேஸ் முடிகிற வரையில் ரஹீம் வேஷத்தைக் கலைக்கக் கூடாது என்றும் மாலதி எதிர்ப்பட்டால்கூட இனம் காட்டிக் கொள்ளக் கூடாது என்றும் சொல்லியிருந்தேனே இல்லையா?''

'' ரஹீம் வேடத்துக்கான அவசியம் தீர்ந்துவிட்டது, சேகர்! விமலா இருக்குமிடம் தெரிந்துவிட்டது. இதைப் பார், கார்த்திக்குக்கு விஜயன் எழுதிய கடிதம்.''

ரமேஷ் கொடுத்த கடிதத்தைப் பிரித்தான் சேகர். அதில், 'நீ அனுப்பின பெண் மகா முரடாக இருக்கிறாள். நேற்று வேண்டும் என்றே மாடிப் படிகளில் விழுந்து மண்டையை உடைத்துக் கொண்டுவிட்டாள். 'நர்ஸிங்' நடக்கிறது. தலைக்காயம் ஆறியதும் குவையத்துக்கு அனுப்பிவிடப் போகிறேன்' என்று எழுதியிருந்தது. மேலே விஜயனின் விலாசமும் இருந்தது.

கடிதத்தை மடித்துச் சாவதானமாகத் திருப்பிக் கொடுத்தான் சேகர். ''ஓகோ ! மாலுவை அழைத்துக் கொண்டு கோவாவுக்குத்தான் கிளம்பினாயா?... அவசியமில்லை. விமலா இப்போது கோவாவில் இல்லை. அவள் வேறு இடத்துக்குப் போய்விட்டாள்.''

'' உனக்கு எப்படித் தெரியும் ?''

'' சற்றுமுன்தான் அவள் எழுதின கடிதம் ஒன்று எனக்குக் கிடைத்தது.''

''என்ன ! என்ன! விமலா எழுதிய கடிதமா ? எங்கே ?'' — ஏககாலத்தில் ரமேஷும் மாலதியும் கேட்டனர்.

'' அதை அப்புறம் பார்க்கலாம். அவசரம் ஒன்றுமில்லை. இப்போது அதைவிட முக்கியமான விஷயத்தை நாம் கவனிக்கவேண்டியிருக்கிறது.... உன் போனை நான் பயன்படுத்தலாமா ரமேஷ் ?''

''ஓ, பேஷாக !''

எண்கள் 'ர்ர்ர்' என்று சுழன்றன. அடுத்த நிமிஷமே தொடர்பு கிடைத்தது. ''கோபால் ஹியர்'' என்றது குரல்.

'' சேகர் ஸ்பீக்கிங்.... கோபால், ரோஸியிடமிருந்து ஏதாவது தகவல் உண்டா?''

''ஒரு விஷயம் இருக்கு ஸார், இரண்டு நிமிஷத்துக்கு முன்னால்தான் பேசினாள்.... டாக்டர் ரமணன் கண் திறந்து பார்க்க ஆரம்பித்து விட்டாராம்..... இனி பிழைத்துக் கொண்டு விடுவாராம்.''

'' இதென்ன அதிசயமாய் இருக்கே ! கொலையாளி மனத்தை மாற்றிக் கொண்டு விட்டானா ? டாக்டர் ரமணனைக் கொல்ல அவன் விரும்பவில்லையா ? இந்த நாடகத்தில் இந்தக் காட்சிக்கு என்ன அர்த்தம் ?''

''எல்லா டாக்டர்களும் வந்து பார்த்து விட்டு, டாக்டர் கார்த்திக்கை 'கங்ராட்' செய்து விட்டுப் போனார்களாம்.''


''கோபால்! இதன் பின்னால் ஏதோ இருக்கிறது. நீ என்ன சொல்கிறாய்?''

''யு ஆர் ரைட் ஸார் !''

'' தாரிணி, பணிக்கர் விஷயத்தில் ஏமாந்தது மாதிரி இதிலேயும் ஏமாந்துடக் கூடாது. கூட இருக்கிற டாக்டர்களை ஏமாற்றித் திசை திருப்பிவிடத்தான் டாக்டர் ரமணனுக்குத் தாற்காலிகமாக அரை உயிர் கொடுத்திருக்காங்க..... அதனால் டாக்டருங்க போனப் புறம் ஏதாவது நடந்தே ஆகணும். தயாரா இரு கோபால்.... நான் பத்து நிமிஷத்துலே அங்கே வர்றேன்..... இரண்டு இன்ஸ்பெக்டர்கள், ஒரு ஸ்குவாட், இரண்டு ஜீப் எல்லாம் தயாராகட்டும். ஓ.கே.?''

''ஓ.கே., சார் !''

(அடுத்த இதழில் முடியும்)



ஆசிரியர்: அடிக்கடி பின்பக்கம் திரும்பித் திரும்பிப் பார்க்கிறாயே, என்ன காப்பி அடிக்கிறாயா?

மாணவன்: ஐயய்யோ! கேள்வித் தாளில் 'பின் பக்கம் பார்க்க'ன்னு போட்டிருக்கவே பார்த்தேன். வேறு ஒன்றுமில்லீங்க சார்!

- பண்ணை வேந்தன்



எஸ். பாலசந்தரின் பொம்மையில் தொடங்கி கே. பாலசந்தரின் அபூர்வ ராகங்கள் வரை....

சுமார் 500 திரைப்படங்களுக்கு 1000க்கு மேற்பட்ட பாடல்களைப் பின்னணி இசையாக வழங்கியுள்ள பத்மஸ்ரீ ஜேசுதாஸ் தமது ஐந்தாவது வயதிலேயே முறையாகக் கர்நாடக இசை பயிலத் தொடங்கினார். அவரது முதல் குரு குஞ்ஞன்வேலு ஆசான். 1940ம் ஆண்டு கொச்சியில் பிறந்த திரு ஜேசுதாஸின் தகப்பனார் காலஞ்சென்ற அகஸ்டின் ஜோசப் கேரளத்தின் முன்னணி நாடகக் கலைஞர்களுள் ஒருவராகத் திகழ்ந்தவர். கொச்சியில் அர்ச். செபாஸ்டியன் உயர்நிலைப் பள்ளியில் எஸ். எஸ். எல். சி. தேர்வு பெற்ற ஜேசுதாஸ், திருப்புணித் துறை மியூசிக் அகாதமியில் சேர்ந்து கர்நாடக இசை பயின்றார். நாலாண்டு இசைக் கல்வியை மூன்றே ஆண்டுகளில் முடித்து, முதல் ராங்க் பெற்றுத் தேறி 'கான பூஷணம்' டிப்ளோமா பெற்றார்.

''அதன் பின்னர் திருவனந்தபுரம் இசைக் கல்லூரியில் சேர்ந்து ஓராண்டு காலம் பயின்றேன். அப்போது செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாசய்யர் அங்கு பிரின்ஸிபாலாக இருந்தார். அந்த ஓராண்டுப் பயிற்சியும் எனக்கு வெகுவாகப் பயன்பட்டது. ஆனால் குடும்பப் பிரச்னை காரணமாக என் இசைப் பயிற்சியை அங்கு தொடர முடியவில்லை'' என்கிறார் ஜேசுதாஸ்.

மெல்லிசையால் மெய் மறக்கச் செய்பவர்!



ஜேசுதாஸ் தம்பதியுடன் சேர்ந்து படம் எடுத்துக் கொண்ட இரும்பி விதயா

''நீங்கள் பாடிய முதல் திரைப்படம் எது?''

''கால்பாடுகள். 1961ல் பரணி ஸ்டுடியோவில் அதற்கு இரு பாடல்கள் பதிவாயின.''

''நீங்கள் எந்தத் தமிழ்ப் படத்துக்கு முதன் முதலாக இசை வழங்கினீர்கள்?''

''எஸ். பாலசந்தரின் 'பொம்மை'. 'நீயும் பொம்மை, நானும் பொம்மை' என்றபாடல். ஆர்க்கெஸ்ட்ரா அதிகமில்லாத இசையமைப்பு அது. அதற்குப் பிறகு ஸ்ரீமதி பி. லீலா என்னை திரு எம். எஸ். விசுவநாதனுக்கு அறிமுகம் செய்வித்தார். 'காதலிக்க நேரமில்லை' என்ற படத்தில் 'என்ன பார்வை', 'நெஞ்சத்தை அள்ளிக் கொஞ்சம் தா' என்ற இரு பாடல்கள் பாடினேன். நாளடைவில் தெலுங்கு, கன்னடப் படங்களுக்கும் பாடத் தொடங்கினேன். இரு இந்திப் படங்களுக்கும் இப்போது பாடியுள்ளேன்.''

''மலையாளப் படங்களில்தான் மிகுதியாகப் பாடியிருக்கிறீர்கள் இல்லையா?''

''ஆமாம்; பிரேம்நஸீர் நடித்த சுமார் 300 படங்களில் அவருக்குப் பின்னணிப்

பாடல்கள் வழங்கியிருக்கிறேன். கேரள அரசு நாலு ஆண்டுகள் எனக்கு விருது வழங்கியுள்ளது. கேரளத் திரைப்பட ரசிகர்கள் சங்கம் 1966 முதல் 75 வரை என்னைக் கௌரவித்துப் பாராட்டியுள்ளது. ஜனாதிபதியின் 'சிறந்த பாடகர்' பரிசு 1972–73 இரு ஆண்டுகளுக்கும் எனக்கு வழங்கப்பெற்றது.''

''உங்களுக்கும் செம்பை திரு வைத்திய நாத பாகவதருக்கும் எப்போது தொடர்பு ஏற்பட்டது?''

''ஏழாண்டுகளுக்கு முன்பு பம்பாயில் ஷண்முகானந்தா சபையில் முதன் முதலாக நான் கர்நாடக சங்கீதக் கச்சேரி செய்தேன். சபா நிர்வாகிகள் செம்பை அவர்களைத் தலைமை தாங்க அழைத்திருந்தார்கள். அன்று என்னைப் பாராட்டிய திரு செம்பை அவர்கள் தமக்குக் காஞ்சி ஆசாரிய சுவாமிகள் வழங்கியிருந்த பொன்னாடையை எனக்குப் போர்த்தி 'சங்கீத ராஜா' என்ற பட்டத்தையும் வழங்கி ஆசி கூறினார்கள். அது என் வாழ்நாளில் மறக்க இயலாத நிகழ்ச்சி. அதன் பின்னர் அடிக்கடி அவரது வீட்டுக்குச் சென்று பேசிக் கொண்டிருப்பேன். என்னைத் தம்முடன் சேர்ந்து பாட அவரே அழைத்ததைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். அவருடன் சேர்ந்து சுமார் பத்துக் கச்சேரிகள் செய்திருப்பேன். குருவாயூரப்பனிடம் அவருக்குப் பக்தி அதிகம் என்பது பிரசித்தம். ஏகாதசி அன்று அவர் குருவாயூரப்பன் சந்நிதியில் கோவிலுக்குள் பாடுவதாக இருந்தார். என்னைக் கோயிலுக்குள்ளே அனுமதிக்க மாட்டார்கள் என்பதால் கோயிலுக்கு வெளியே பாட இசைந்தார். கோயிலை யொட்டி வீதியில் பெரிய பந்தல் போட்டுக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்தார்கள். திரு கோபாலகிருஷ்ணன், திரு அனந்தராமன் பக்கவாத்தியத்துடன் நான் செம்பை அவர்களுடன் சேர்ந்து இரவு 7 மணி முதல் 10 மணி வரை கச்சேரி செய்தேன். ஒவ்வொரு கச்சேரியிலும் மாற்றி மாற்றி ஸ்வரம் பாட எனக்குச் சந்தர்ப்பம் அளிப்பார். 75 வயதான அவர் எங்கே, 30 வயதுள்ள நான் எங்கே! இருந்தாலும் என்னைச் சமமாகப் பாவித்து தமது அருகில் அமர்ந்து பாடச் சொல்வார். இளம் வித்வான்களை ஊக்குவிப்பதில் அவருக்கு இயல்பாகவே ஓர் அலாதி மகிழ்ச்சி. அவருடைய பெருந்தன்மையை எவ்விதம் பாராட்டுவது?'' என்று ஜேசுதாஸ் கூறும் போ[து] அவரது மெய் சிலிர்த்து, குர[ல்] கம்மி விடுகிறது.

'ரிக்கார்டிங்' இல்லாத நா[ட்]களில் வீட்டில் சாதகம் செ[ய்]வார் ஜேசுதாஸ். காலையிலோ மாலையிலோ நேரம் கிடைத்தால் டென்னிஸ் விளையாடுவார். அரங்குகளில் இவர் மெல்லிசைக்கச்சேரி நிகழ்த்தும்போது ரசிகர்கள் உ[த்]சாகத்துடன் தாங்க[ள்] விரும்பும் பாடல்களை பாடச் சொல்லி உரக்க[க்] கேட்கிறார்கள். சில பாட[ல்]களை அவர் பாடும்போது ரசிகர்களும் கூடவே பாடியும் கைதட்டியும் ஆரவாரத்துடன் ரசிக்கிறார்கள். 'குட்டநாடன் புஞ்சா' என்ற படகு ஓட்டும் பாடலை இவர் பாடும்பொழுது சௌக்க காலத்தில் பாடுகிற மாதிரியே அதி துரித கதியிலும் சொற்கள் வெகுசுத்தமாக ஒலிப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. 1974ல் இவருக்கு 'பத்மஸ்ரீ' விருது வழங்கப்பெற்றது.


தமது குரலைப் பாதுகாப்பதில் மிகக் கவனமாக இருக்கிறார், ஜேசுதாஸ். 'மோர், தயிர் நான் சாப்பிடுவதே யில்லை. சிகரெட் வெற்றிலை, மது ஆகிய பழக்கங்கள் எதுவும் எனக்குக் கிடையா. காப்பி, தேநீர் அருந்துவதைக் கூட நான்கு மாதங்களாக அறவே நிறுத்தி விட்டேன். தினம் இருவேளை பால் மட்டும் தான் சாப்பிடுகிறேன். மனம் உறுதியாக இருந்தால் எதையும் சாதிக்க முடியும். மேடையில் நான் ஏறிவிட்டேனானால் எனது சொந்தப் பிரச்னைகள், கவலைகள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். மனம் இசையில் பூரணமாக லயித்துவிடும்'' என்று கூறும் இவருக்கு மேல்நாட்டு இசையும் ஓரளவுக்குத் தெரியும்.

'விழியே கதை எழுது', 'தெய்வம் தந்த வீடு', 'அதிசய ராகம்' முதலிய ஜேசுதாஸின் குரலால் பிரபலமான பாடல்களைப் பாடி அல்லது முணுமுணுத்து மகிழாத மெல்லிசைப் பிரியரும் உண்டா? திரைப் படம் பார்க்கப் பிடிக்காதவர்களும் பாடிப் பார்ப்பார்களே!


மேலட்டை வண்ணப்படம், புகைப்படங்கள்: உத்ரா; பேட்டி: 'பாணன்'



பள்ளிப் பாடல் போட்டியில் சிறுமி சுஜாதாவுக்கு முதல் பரிசு வழங்கிய நீதிபதி ஜேசுதாஸ் தொடர்ந்து அவளுக்குத் தம்முடன் மேடையில் பாட வாய்ப்பளித்து வருகிறார்.


ராஜேஷ்
கன்னா

நாள் தோறும் கண்கவர் புதிய தோற்றம்
மக்கள் போற்றும் உயர்தர மாற்றம்





வாரத்திற்கு வாரம் புத்தம் புதிய டிசைன், புதிய பாணி, கலைத்திறன் கொண்ட துணிமணிகள் வழங்குவதோ பாம்பே டையிங். செயற்கையிழை ஷர்ட்டிங்குகளின் ஒப்பற்ற உயர் தரம் 50/50, 67/33, 80/20 மற்றும் நூற்றுக்கு நூறு பாலியெஸ்டர் பிரிண்டுகள், பாலியெஸ்டர் டெனிம்கள் மற்றும் டெக்ஸ்சரைஸ்ட் ஸூட்டிங்குகள்.

கபித்தான் பாலியெஸ்டர் ஷர்ட்டிங்குகள்

வாட்ரீன் பாலியெஸ்டர் ஸூட்டிங்குகள்

ஆயிரமாயிரம் வகைகள்—
அன்றாடம் புதுப்புது டிஸைன்கள்!

பாம்பே டையிங்

BDM-27A tam

ஒரு விளக்கு அணைந்தது

மழை தூறிக் கொண்டிருக்கிறது. அவசரமாய் வீடு திரும்புகிறேன். வீட்டின் மயான அமைதியே என்னைப் பயமுறுத்துகிறது..... குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறுக்கத்தானே செய்யும்? பூனைபோல் உள்ளே நுழைகிறேன். இலேசாக நனைந்த உடையைப் பிழிந்து உலர்த்திக் கொண்டு திரும்புகிறேன்.

மூலையில் எந்த நேரமும் சண்டை பிடித்துக் கொண்டு நிற்கும் வேணுவும் கோபுவும்கூட அன்று என்னை விசித்திரமாகப் பார்க்கிறார்கள். ஜன்னல் பக்கமாக நின்று கொண்டிருக்கும் புவனாகூட என்னை ஓர் அற்பப் பொருளைப் பார்ப்பது போல் பார்க்கிறாள். அப்பா என்னைப் பார்த்தவுடன் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு 'விருட்' என்று வெளியேறுகிறார். நான் அப்படி என்ன செய்து விட்டேன்?

அடுக்களைக்குள் நுழைகிறேன். காப்பிக்காகத் தயங்கி நிற்கிறேன்.

''நீ கெட்ட கேட்டுக்குக் காப்பி ஒரு கேடா?'' அம்மாதான் இப்படிச் சீறுகிறாள்.

''அம்மா......'' நான் இணறுகிறேன்.

''சீ..... என்னை இனிமேல் அம்மான்னு கூப்பிடாதே. இப்பவே போய் வாயைக் கழுவிக் கொண்டு வா...''

''போதும் நிறுத்து....ஏன் இப்படி 'காச் மூச்' என்று கத்தறே? அப்படி இங்கே என்ன நடந்து விட்டது?''

''ஒன்றும் தெரியாத பாப்பா உள்ளே போடுவாளாம் தாழ்ப்பாள்!''

''பண்றதையும் பண்ணிண்டு பத்தினி வேஷம் போடறியா?''

அம்மா அழுது கொண்டே புலம்புகிறாள். மாலையில் குலசேகரன் அத்தான் வந்து போனது துல்லியமாகத் தெரிகிறது. என்னை விசாரித்திருப்பாரே! ஏதாவது வாங்கி வந்திருப்பாரே!

''ஏனம்மா, அத்தான் வந்தாரா? என்னைப் பற்றிக் கேட்டாரா?''

''ஆமாண்டி.... கேட்டாலும் கேட்டான் சரியானபடி கேட்டாண்டி.... ஆமாம். பாவி, இன்னிக்கு நீ கல்லூரிக்குப் போகலியா?'' எனக்குத் திக்கென்றது. என் தலை தானாகவே குனிகிறது.

''அரை நிர்வாணத்தில் ஹோட்டலில் சுத்தினையா?''

எனக்கு முகம் சிவக்கிறது.

''போதும், நிறுத்தும்மா... நான் காலேஜுக்குப் போகலே. அது உண்மைதான். ஏழு முழம் புடவையைச் சுத்திக் கொள்ளவில்லே. ஆனால் நீ சொன்ன மாதிரி அரை நிர்வாணமாய் அலையவில்லே. ஹோட்டலுக்குப் போனேன். எவனையும் இழுத்துக்கொண்டு போகவில்லே. என் தோழிகளோடுதான் போனேன். அங்கே நான் கிளப் டான்ஸ் பார்க்கவில்லே போதுமா?'' எனக்கு மூச்சு வாங்கியது.

''சேற்றிலே நாம் தவறி விழறதுக்கும், நாமாகவே விழறதுக்கும் வித்தியாசம் இருக்குடீ.....'' முகத்தைப் புதைத்துக் கொண்டு கட்டிலில் போய் விழுகிறேன்.

நான் என்ன அப்படிப் பெரிய தப்பு பண்ணி விட்டேன்? ஒரு சாதாரணக் கல்லூரிப் பெண்ணுக்கு ஏற்படக்கூடிய ஆசைதானே எனக்கு ஏற்பட்டது? அதற்காக நான் சொந்தமாகப் பணத்தைச் செலவழித்தேனா? இல்லையே! எல்லாமே என் தோழியர் உதவி செய்தது தானே!

கல்லூரியில் எனக்குச் சக மாணவியர் வைத்த பெயர் 'துணி மூட்டை'. ஆம்! ஒவ்வொருத்தியும் அங்கங்களெல்லாம் பளிச் சென்று தெரிய டிரான்ஸ்பரண்ட் புடவையும், மினி ஸ்கர்ட்டும், பெல்ஸ-மாய்த் திரியும் போது, பதினாறுமுழப் புடவையால் உடம்பை இம்மியேனும் வெளியே தெரிந்திராதபடி போர்த்திக் கொண்டு நிற்கும் எனக்குத் 'துணி மூட்டை' என்று பெயரிடாமல் 'எலிஸபெத் டெய்லர்' என்றா கூப்பிடுவார்கள்?

கீற்றுக் கதவை அடைப்பாகக் கொண்ட இந்த ஒண்டுக் குடித்தனக் குளியல் அறைக்கும், உமாவின் வீட்டு ஷவர் குளியலறைக்கும் தான் எத்தனை வேறுபாடு?

நெடுநாட்களாக நான் ஏங்கித் தவித்ததை இன்று ஒரு நாளில் எனக்கு உமா நிறைவேற்றி வைத்து, அதை நான் அனுபவித்ததில் என்ன தப்பு? காலை நடந்தது என் மனக் கண் முன் தெரிகிறது.

''டீ..... பிரமீளா.... இன்று ஒரு நாளைக்குக் காலேஜ் மட்டம் போடு. ஜாலியாகக் கொஞ்ச நேரம் சுத்திவிட்டு வரலாம்.'' உமாதான் என்னை 'லஞ்ச்' நேரத்தில் கூப்பிட்டாள்.

நீறுபூத்த நெருப்பாய் உள்ளத்தில் ஏற்பட்ட ஆசை மெதுவாகப் புகைய ஆரம்பித்தது. அவளது மினி ஸ்கர்ட்டை வைத்த கண் வாங்காமல் பார்த்தேன்.

''வேண்டாம் உமா, பரீட்சை நெருங்குகிறது...'' உள்ளுக்குள் ஆசை இருந்தாலும் வெளியே நாசூக்காய்த் தலை அசைக்கிறேன்.

''இன்றைக்கு மம்மியும் டாடியும் வீட்டில் இல்லை. அதனால்தான் கூப்பிடுகிறேன்.'' நான் பதில் பேசாமல் உமாவுடன் காரில் ஏறி அமர்ந்து கொள்கிறேன்.

ஏறக்குறைய அறுபது பேருக்கு மத்தியில் முண்டியடித்துக் கொண்டு டவுன் பஸ்ஸில் பயணம் செய்வதை விட்டுவிட்டு, படகு போன்ற காரில் சவாரி செய்வது எனக்குப் புதிய அனுபவமாகவே இருந்தது.

உமாவின் வீடா.....? குட்டிப் பங்களாவே தான். பளபளவென்று பளிங்குத் தரை.



விட்டது!

எஸ். நாகேஸ்வரி



டிரஸ்ஸிங் டேபிளும், மேக்கப் செட்டும், இன்று விட்டால் நான் இனி எப்போது அனுப விக்கப் போகிறேன்?

உமா எனக்கு அலங்காரம் செய்துவிடு கிறுள். தழையத் தழையப் பின்னிய கூந்தலைப் பிரித்து, பிரஷ்ஷால் வாரி.... அப்பப்பா ! டியாரா ஷாம்பூ எப்படி மணக்கிறது?.... புடவையை அவிழ்த்துவிட்டு, அவள்கொடுத்த மினி ஸ்கர்ட்டை உடுத்திக் கொள்ளும்போது என் எண்சாண் உடம்பும் கூனிக் குறுகுகிறது.

'' ஏண்டி பிரமீளா.... இப்படிக் கூச்சப் படறே ? மாடர்ன் டிரஸ் போட்டுப் பார்க்க ணும்னு எத்தனை நாட்களாய்த் தவித்தாய்? இன்னிக்குத்தான் நேரம் வாய்த்தது.''

காரைப் போர்ட்டிகோவை விட்டு வெளியே கொண்டு வருகிறுள். நான் சற்றே கூச்சத்துடன் நடக்கிறேன்.

''ஓ.... பிரமி.... ஜீனத் அமன்கூட உன் னிடத்தில் பிச்சை வாங்க வேண்டும்.'' என் உடற்கட்டைப் பற்றிய விமரிசனத்தில் நான் சொக்கிப் போய் நிற்கிறேன்.

''வாட்..... இப்படியே ஹோட்டலுக்குப் போய் லேட்டாகக் கொஞ்சம் டிபன்.....'' என்னைக் காருக்குள் இழுத்து அணைத்துக் கொள்கிறுள். ஓ ! உண்மையான நட்பில் தான் எத்தனை இன்பம் !

வத்றல் குழம்பையும் வடகத்தையும் நினைத் துப் பார்க்கிறேன். வழவழவென்ற மேஜை யின் மீது எத்தனை கலர் கலராய் உணவுப் பண்டங்கள்? ஸ்பூன்...ஃபோர்க்ஸ்...

சுரேஷ்.... குமார்.... சேகர்.... என்று யாரையெல்லாமோ அறிமுகப்படுத்துகிறுள்.. அவனவன் என் தோளிலும் இடுப்பிலுமாய் 'லவ்லி....' 'ஸ்வீட்டி.....' 'இன்டரஸ்டிங் பெர்ஸனுலிட்டி' என்று தட்டுகிறுன்.

ஓ.... நான் அத்தனை கவர்ச்சியாக இருக் கிறேனு? பூரிப்பால் நெஞ்சு விம்முகிறது. தைரியத்துடன் தலைநிமிர்ந்து நானும் 'ஹாய்' என்றேன். 'ஃப்ளையிங் கிஸ்' கொடுக் கிறேன். மாடர்னுக டிரஸ் பண்ணிண்டு கட்டுப்பெட்டியாட்டம் குனிஞ்சுண்டு நின்னுல் எப்படி ? டிரிம்மாக ஆடையலங்காரம் பண் ணிக் கொண்டு இப்படிச் செல்வச் செழிப் புள்ள சூழ்நிலையில் நாலு பேரோடு பேசிப் பொழுதைக் கழிக்க வேண்டும் ஒரு நாளாவது — என்ற என் நெடுநாளைய கனவு, நனவா கும்போது எனக்குக் குதூகலமா யிருக்கிறது.

உமாவிடம் ஸ்கர்ட்டைக் கழற்றிக் கொடுத்துவிட்டுப் பழைய புடவையுடன் வீடு திரும்பும்போது என் மனம் கனக்கிறது. இனி இது மாதிரி என்று ஆசை தீர அனுபவிக் கப் போகிறேன்? நிச்சயமில்லை.

அன்றைய வகுப்பை வேறு வீணுக்கிவிட் டோமே என்று எனக்கு ஆதங்கம். அப்படி என்ன நடந்திருக்கும் ? ஷேக்ஸ்பியரின்

அறுவை ஜோக்குகளையும் மில்டனின் ஒப்பாரி களையும் மறந்து ஒரு நாள் ஃப்ரீயாக..... அப்பாடா !.... சமாதானக் கொடியை..... உயர்த்துகிறேன்.

''அக்கா.....'' என் உடல் ஒரு கணம் குலுங்குகிறது.

ஓ!.... நான் வீட்டுக்கு வந்துவிட்டேனு ? கண்களைக் கசக்கிக் கொள்கிறேன். அம்மா கூட என்னிடத்தில் கச்சை கட்டிக் கொண்டு வந்தாளே..... ச்சொ !.... நான் தூங்கிப் போய் விட்டேனு ?

''அக்கா......'' நான் பதறி எழுகிறேன். சின்னத் தம்பி வேணுவின் கையில் ஏதோ காகிதம்.

'' என்னடா ......?''

''இன்றைக்குக் குலசேகரன் அத்தான் வந் தார்..... உன்னிடம் இந்தக் கடிதாசைக் கொடுக்கச் சொன்னுர்......''

கடிதத்தைப் படிக்கிறேன்.

''பிரமீளா......

நானும் நீயும் ஒருவரையொருவர் காதலித் தது என்னவோ உண்மைதான். பம்பாயி லிருந்து ஆபீஸ் விஷயமாய்ச் சென்னை வர நேர்ந்தபோது உன்னைக் கண்டு பேசத் துடித்தேன். ஆனுல்...குனிந்த தலை நிமிராமல் அடக்கமாய்ச் செல்லும் என் பிரமீளாவை நான் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. நீ சக தோழி ஒருத்தியுடன் ஒரு ஹோட்டலுக் குள் நுழையும் போது பார்த்தேன். முதலில் நீயா என்று சந்தேகம் வந்தது. ஆனுல் கண்டவர்களுடன் கை குலுக்கும்போதும், உரசிச் சிரித்தபடி நீ நின்றபோதும், உன்னை அந்த ஹிப்பிக் கூட்டத்துக்குள் ஊடுருவி நன் ருகப் பார்த்தேன். ஓ !..... நீ அத்தனை தூரத்துக்கு மாறி விட்டாயா பிரமி?.....''

''...... பிரமி..... பம்பாயில் நான் பார்க் காத அழகிகளே இல்லை. அந்த மின்சார விளக்குகளைப் பார்த்துப் பரவசமாகலாமே தவிர, குத்துவிளக்கைப் போல் கைகூப்பி வணங்க முடியாது. பிரமீளா....நீ ஒரு குத்துவிளக்காய்த்தான் இருந்தாய். ஆனுல் இன்று நான் கண்டது..... பிரமி. என்னை மன்னித்துவிடு. நான் தேடிய மனைவி நீயில்லை.

இப்படிக்கு,
குலசேகரன்

பின் குறிப்பு: ''ஆனுல் என் உள்ளத்திலிருந்து பழைய பிரமீளாவை நான் தூக்கி எறிய விரும்ப வில்லை.''

கண்ணீரால் கடிதம் நனைகிறது. அம்மா புறக்கடையிலிருந்து வருகிருள். கடிதத் துடன் நிற்கும் என்னைப் பார்த்து வினவுகிருள்.

''அம்மா....! ஒரு விளக்கு அணைந்து விட்டது !'' — நான் விம்முகிறேன்.

ஊரே சிரிக்கிறது!



நடிகை (டைரக்டரிடம்) : ஜிலிக்கிப் புத்தூர்க்காரி என்பதனுலே 'கில்லி' கேரக்ட ரையே எனக்குக் கொடுக்க வேண்டுமா டைரக்டர் சார் ?



அவள் : உங்க ளுடைய புதிய பேராசிரியர் ஒரே அறுப்புன்னு கேள் விப்பட்டேனே!

இவள் : அருப் புக் கோட்டையிலே இருந்து வந்திருக் கார் ! அவருக்குச் சொந்த ஊர்மேலே ரொம்பவும் பாசம்!

ஒட்டலில் சாப்பிடுபவர் : ஏங்க சர்வர் சார், நெய்வேலின்னு சாம்பாருக்கு நெய் விடப்படாதுங்களா ?

சர்வர் : இண்டுக்கல்லுங்கிறதுக்காகச் சோற்றிலே கல்லேயே கலந்து போடுவாங் களா சார் ?



நிருபர் (பாம்பாட்டியிடம்) : ஏம்பா, இந்தத் தொழிலே எங்கே கத்துகிட்டே ?

பாம்பாட்டி : சாமி ! பொறந்தது நாகப் பட்டினத்திலுங்க ! இந்தத் தொழிலே நாகர் கோவிலிலே கத்துகிட்டேனுங்க !! என் பெயர் நாகப்பனுங்க !!!





நான் வணங்கும் மனிததெய்வம் - 16.

சாதிகள் இல்லையடி பாப்பா...

உலகமெல்லாம் வியந்து போற்றும் இந்து மதத்தின் அடிப்படை தர்மங்களுக்கு விரோதமான முறையில் தீண்டாமை என்னும் கொடிய பழக்கம் இந்துக்களிடையே எப்படியோ வேரூன்றிவிட்டிருந்தது. நாடு எங்கிலும் பத்து கோடி மக்கள் (நாடு விடுதலை பெறுமுன் உள்ள கணக்கு) ஒதுக்கி வைக்கப் பட்டிருந்தனர்.

இம்மாபெரும் பிரச்னைக்குத் தீர்வு காண்பேன் எனப் போர்க் கோலம் பூண்டு எழுந்தவர் டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் எம்.ஏ.; பார் அட் லா அவர்கள்.

"இந்து சமுதாயம் தன் போக்கை மாற்றிக் கொள்ளாவிட்டால், பத்து கோடி தாழ்த்தப்பட்ட மக்களும், இஸ்லாம் மதத்தைத் தழுவ நேரிடும்" என எச்சரிக்கை விடுத்தார். "இந்திய பெரு நிலத்தில், எங்கோ ஒரு மூலையிலாவது தாழ்த்தப்பட்ட மக்களின் தனிக் கொடியைப் பறக்கவிடுவேன்" எனப் புரட்சிக் குரல் எழுப்பினார்.

இந்து சமுதாயம் சலசலத்தது ; மாற்றம் வேண்டும்; வேண்டுமென வாதாடினர் நாட்டின் நல் வாழ்வில் அக்கறை கொண்ட நல்லவர்கள் எல்லோரும்.

இந்து சமுதாயம் வளைந்து வருவது கண்டு மேலும் போராட்டத்தை இறுக்கினார் டாக்டர். டாக்டர் அம்பேத்கார் அவர்களின் போராட்டத்துக்குச் செவிமடுத்த வெள்ளையாட்சி, தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனித் தொகுதி தேவைதானா எனப் பரிசீலிக்க வட்டமேஜை மகாநாட்டைக் கூட்டிற்று. "தாழ்த்தப்பட்ட மக்கள் இந்து மதத்தின் கண்கள். அவர்களுக்குத் தனித் தொகுதி தருவது இந்து மதத்தையே எள்ளி நகையாடுவதாகும். வெள்ளையாட்சியும் டாக்டரும் தனித் தொகுதி கருத்தை மாற்றிக் கொள்ளாதவரை சாகும் வரை உண்ணாவிரதமிருப்பேன்" என எச்சரிக்கை விடுத்தார் மகாத்மா காந்தியடிகள்.

புனா ஒப்பந்தத்தின் மூலம் தாழ்த்தப்பட்டோரின் தனித் தொகுதி தவிர்க்கப்பட்டது.

டாக்டர் அம்பேத்கார் தாழ்ந்து போன குடும்பத்திலேயே பிறந்தார். பரோடா மன்னர் அளித்த பொருளாதார ஆதரவைப் பயன்படுத்திக் கொண்டு பாரிஸ்டர் பட்டம் பெற்றார்.

டாக்டர் அவர்கள் நீதிபதியாக நியமிக்கப்பட்டபோது "யுவர் ஆனர்" எனக் கூற ஜாதி இந்து வக்கீல்கள் முகம் சுளித்தனர். "உங்களையெல்லாம் 'மி, லார்ட்' எனக் கூற வைக்கிறேன்" எனச் சபதமிட்டுச் செயல்படுத்தியும் காட்டினார்.

டாக்டர் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப் பெருந் தலைவர் மட்டும் அல்ல, பேரறிஞர். சுதந்திர பாரதத்தின் அரசியல் சாஸனத்தை உருவாக்கியவருள் ஒருவர்.

அரசியல் சாஸனத்தின் மூலம் எல்லாத் துறைகளிலும் பத்தாண்டு காலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனிச் சலுகை தரப்பட வேண்டும் என்ற உரிமையினைப் பெற்றார். பாரதத்தின் சட்ட அமைச்சரானபின், தாழ்த்தப்பட்ட மக்கள் சகல துறைகளிலும் சமன் பெற பத்தாண்டுகள் மட்டும் போதாது. கடைசி தாழ்த்தப்பட்டவனும் சமுதாயத்தில் சமன் பெறும் வரை கால வரையறையின்றித் தனிச் சலுகை தரப்பட வேண்டும் எனப் போராடி, அதை நிரந்தர அரசியல் சட்டமுமாக்கினார். பாரதத்தில் எவன் ஒருவன் தீண்டாமையை வற்புறுத்துகிறானோ அவன் சட்டப்படி குற்றவாளியாவான் ; சிறை வாழ்வும் அபராதமும் விதிக்கப்படும் எனச் சட்டமியற்றித்தாழ்த்தப்பட்ட மக்களின் வருங் கால வாழ்வுக்கு வழி கோலினார். இதனாலெல்லாம்தான் இன்று தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்தவனும் சகல துறைகளிலும் சம வாய்ப்புடன் போட்டியிட முடிகிறது. 'நானும் பாரதத் தாயின் புதல்வன்; எனக்கும் வாழ — வாழ வைக்கத் தகுதியுண்டு — உரிமையுண்டு' எனத் தலை நிமிர்ந்து கூற முடிகிறது. —ச. இராசரத்தினம்

வரசித்தி விநாயகர் ஆலயத்தில்

நவக்கிரகப் பிரதிஷ்டை

சென்னையை அடுத்த அனகாபுத்தூரில் காஞ்சி காமகோடி பீடம் சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களின் அருளாசியுடன் புதிதாகக் கட்டும் வரசித்தி விநாயகர் ஆலயத்தில், நவக்கிரகப் பிரதிஷ்டையும், ஆஞ்சநேய விக்கிரகப் பிரதிஷ்டையும் செய்யத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. இதற்கு ஆகும் மொத்தச் செலவுத் தொகை ரூ. 25,000 என்று உத்தேச மாகத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

ஆஸ்திகப் பெருமக்கள் மனமுவந்து இந்தத் திவ்விய கைங்கர்யத்துக்குத் தங்களால் இயன்ற பொருளுதவியைச் செய்து இந்தப்பணி சிறக்க உதவி புரிந்து வரசித்தி விநாயகப்பெருமான் அரு ளுக்குப் பாத்திரராகுமாறு வேண்டு கிறோம்.

நிதி அனுப்ப வேண்டிய முகவரி :

Board of Trustees

Sri Varasidhi Vinayakar Temple Trust

Balaji Nagar, Anakaputhur

Madras - 70

1898

முதல் பிரசித்தி பெற்றது

பண்டிட் D. கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்

ஆரோக்கியத்திற்கும்


பலத்திற்கும்

ஆயுர்வேதாஸ்ரமம்

பிரைவேட் லிமிடெட் — சென்னை-17.

குடும்பத்தினர் அனைவரும் ஆரோக்கியத்துடன் திகழ 2 ஃபாஸ்ஃபோமின் டானிக்







ஃபாஸ்ஃபோமின் அயன்

பெண்களுக்கான அயன் டானிக்

ஃபாஸ்ஃபோமின் அயன் சத்துமிக்கச் சிவப்பு இரத்தம் உருவாகக் காரணமாயிருந்து உதவுவதுடன் உடலில் அயன் சத்தைச் சமநிலையில் பெற்றிருக்கவும் உதவுகிறது. இதில் பி காம்ப்ளெக்ஸ் விடமின்களும் பல்வேறு கிளிஸரோபாஸ்பேட்டுகளும் கூட அடங்கியுள்ளது. சக்தியும் ஆரோக்கியமும் பெற்றுத் திகழ உதவுவதுடன் களைப்பையும் விரட்டுகிறது. பெண்களுக்கென்று விசேஷ முறையில் உருவாக்கப்பட்டுள்ள முதல் டானிக்—ஃபாஸ்ஃபோமின் அயன்.

ஃபாஸ்ஃபோமின் விடமின்

குடும்பத்திற்கான விடமின் டானிக்.

பழரச மணம் கமழும் சிறந்த டானிக். ஆரோக்கிய முழுமையோடு உணவு நிறைவைக் கூட்டுகிறது. உங்கள் குடும்பத்தினர் யாவரும் ஆரோக்கியத்துடன் சுறுசுறுப்பாய்த் திகழச் செய்ய, மிக அவசியமான பி காம்ப்ளெக்ஸ் விடமின்கள் மற்றும் பல்வேறு கிளிஸரோபாஸ்பேட்டுகள் அடங்கியது. குடும்பம் முழுவதும் அருந்தி ஆரோக்கியத்துடன் மகிழ—ஃபாஸ்ஃபோமின் விடமின்.



ஃபாஸ்ஃபோமின் டானிக்குகள்—பசியைத் தூண்டி, வலிவு, நோயெதிர்ப்புச் சக்தி கூட்டுவன!

TTT® ஸ்க்விப்® SARABHAI C MICALS LTD.

மெத்தனமில்லா மெத்தை வியாபாரம்!

நரஜா

"என்ன ராஜமாணிக்கம்! சௌக்கியமாக இருக்கிறீர்களா?" என்று விசாரித்தார் தரகர் குப்புசாமி.

"ஏதோ இருக்கேங்க....."

"ஏன் சுரத்தில்லாமல் பதில் சொல்கிறீர்கள்? உடம்பு—கிடம்பு சரியில்லையா என்ன?"

"உடம்பு நல்லாத்தான் இருக்குது..... வியாபாரம்தான் 'டல்' அடிக்குது... எந்த வேளையிலே இந்தப் படுக்கை — தலைகாணி வியாபாரத்துக்குப் பூஜை போட்டேனோ — வியாபாரமே படுத்துடுச்சு...."

"முன்னெல்லாம் நன்றாக வியாபாரம் ஆகுமே!"

"அதெல்லாம் பழங் கதை.... இப்படியே இன்னும் ஒரு மாசம் போனால், நான் கடையை இழுத்து மூடிட்டு, காவித் துணியும் கமண்டலமுமாகக் கிளம்ப வேண்டும்தான்."

"கவலைப்படாதீங்க.......நான் ஒரு வழி பண்ணறேன்....."

"நீங்களா?"

"என் வார்த்தையிலே உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? பாருங்க, இன்னும் ஒரே மாசத்திலே உங்க கடையிலே இந்த ஊர்ப் பெரிய மனுஷங்க அத்தனை பேரும் வந்து நிக்கப் போறாங்க!...."

"பார்ப்போமே அதையும்தான்!"

ஒரு மாதம்கூட ராஜமாணிக்கம் காத்திருக்கத் தேவையில்லாமல் போயிற்று. குப்புசாமி நிலவரம் விசாரித்துவிட்டுச் சென்ற பத்தாவது நாளே ராஜமாணிக்கத்தின் கடையில் டெலிபோன் ஒலித்தது.

"காமாட்சி மில் மானேஜிங் டைரக்டர் வீட்டிலிருந்து பேசறோம்..... நம்ம பங்களாவுக்குப் பத்து செட் மெத்தையும், பதினெட்டு தலைகாணிகளும் வேணும்..... உடனே அனுப்பி வைக்கிறீங்களா?...."

"இதோ அனுப்பறேனுங்க...."

இதற்கு இரண்டாவது நாள் பாங்கர் சோமசுந்தரத்தின் வீட்டிலிருந்து பேசினார்கள்: "நல்ல மெத்தை — தலைகாணிகளாக ஆறு செட் தேவைப்படுகிறது..... கார் வருகிறது அங்கே..... அதிலே போட்டு அனுப்புங்கள்!"

இதைத் தொடர்ந்து ஒரு நாள் பெரிய படகுக் கார் ஒன்று ராஜமாணிக்கத்தின் கடை முன் வந்து நின்றது. ராஜமாணிக்கம் பிரமிப்புடன் அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே பிரபல நடிகர் தங்கராஜ் காரிலிருந்து இறங்கிக் கடைக்குள் நுழைந்து அரை டஜன் மெத்தைகளும் முக்கால் டஜன் தலைகாணிகளும் வாங்கிக் கொண்டு, அலட்சியமாகப் பர்ஸைத் திறந்து நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து வீசி, மீதி சில்லறைகூட வாங்கிக் கொள்ளாமல் வெளியேறினார்.

ராஜமாணிக்கம் திறந்த வாயை மூடவே இல்லை. ஏனெனில், சினிமா நடிகர் தங்கராஜ் மட்டுமல்ல; 'கவர்ச்சிக் கன்னி' நடிகை ஒருத்தி, வெற்றிப்பட டைரக்டர் ஒருவர், வெள்ளிவிழாப் படங்கள் தயாரிப்பாளர் இருவர் — என்று தினசரி ஒவ்வொருவராக விஜயம் செய்து, படுக்கைகளையும், தலைகாணிகளையும் அள்ளிக் கொண்டு போனார்கள்.

திரையுலகில் பெரும் புள்ளிகள் மட்டுமின்றி, தொழில்துறைப் பிரமுகர்களும் படையெடுத்தார்கள். பலன்: வெகு விரைவிலேயே ராஜமாணிக்கம் 'ஸ்டாக் இல்லை' என்று போர்டு தொங்கவிட வேண்டியதாயிற்று.

"என்ன முதலாளி, எப்படி இருக்கிறீர் இப்போ?"

ஹோட்டலிலிருந்து கடைப் பையன் வாங்கி வந்த பாதாம் ஹல்வாப் பொட்டலத்தைப் பிரித்துக் கொண்டிருந்த ராஜமாணிக்கம், அதை அப்படியே வைத்துவிட்டு, "வாரும் ஐயா, குப்புசாமி!" என்று வாய் நிறைய வரவேற்றார்.

"வியாபாரம் எல்லாம் எப்படி நடக்கிறது?" — கண்ணைச் சிமிட்டியபடி கேட்டார் குப்புசாமி.

"அதோ பாரும் போர்டு! நிலைமை புரியுதா இல்லையா?"

"'ஸ்டாக் இல்லையா'....? ரொம்ப சந்தோஷம். உம்ம கடையிலே அத்தனை பெரிய மனுஷங்களும் வந்து நிக்கும்படி பண்றேன்னு முன்னே சொன்னேனே — ஞாபகம் இருக்குதா? உம்ம வியாபாரம் இப்படி அமர்க்களமா நடந்ததுக்கு அடியேன்தானய்யா காரணம்."

"நீரா? எப்படி? எப்படி?"

"நம்ம ஊரிலே பெரிய மனுஷங்க நிறையப் பேர் வீட்டிலே கறுப்புப் பணம் இருக்குதுன்னு வருமான வரி இலாகா அதிகாரிகளுக்கு மொட்டைக் கடிதாசுகள் எழுதிப் போட்டேன்....."

"அதுக்கும் நம்ம வியாபாரத்துக்கும் என்ன சம்பந்தம்?"

"நிறைய இருக்கு.... அவங்க வீட்டிலே படுக்கை தலைகாணிகளுக்கு உள்ளேதான் இந்தக் கள்ளப் பணத்தை ஒளிச்சு வைச்சிருக்காங்கன்னு சும்மாவானும் எழுதி வைச்சேன். வருமான வரிக்காரங்க சும்மா விடுவாங்களா?.... படுக்கை, தலைகாணி எல்லாத்தையும் கிழிச்சு, குதறி எறிஞ்சுடமாட்டாங்களா?.... அப்படி அவங்க செய்த தனாலேதான் உம்மகிட்டே எல்லாரும் வியாபாரத்துக்கு வந்தாங்க...! தெரிஞ்சுக்குங்க!"

பாதாம் ஹல்வாப் பொட்டலத்தை எடுத்து மகிழ்ச்சியுடன் குப்புசாமியிடம் நீட்டினார் ராஜமாணிக்கம்.



கடைசிப்பக்கம் கண்ணதாசன்



இந்திய மருத்துவம்

இந்தியாவில் மருத்துவம் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறது என்பதை, மலேஷியாவிலும், இந்தோனேஷியாவிலும் என்னால் காண முடிந்தது.

உலகெங்கும் இந்திய மருத்துவர்களுக்குக் 'கிராக்கி' இருப்பதன் நியாயமும் புரிந்தது.

மருத்துவத் துறையில் இந்தியா பூர்வீகப் பெருமை பெற்ற நாடு.

'அலோபதி' மருத்துவம் இந்தியாவுக்குள் வருவதற்குமுன் ஆயுர்வேதமும், சித்த வைத்தியமும் நமது மூதாதையர்களை ஆரோக்கியமாக வாழ வைத்துக் கொண்டிருந்தன.

ஆபரேஷன் செய்யும்போது கத்தியை வேக வைக்க வேண்டும் என்ற முறைகூட ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நம்முடைய நாட்டில் பழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது.

முன்னேறியுள்ள அலோபதியில் செய்யப்படுகின்ற பெரிய ஆபரேஷன்கள் அப்போது இல்லை என்றாலும், 'பிளவை'யைக் கிழித்துவிடுகிற ஆபரேஷனாவது அப்போது இருந்தது.

'போகர்' போன்ற மிகப் பெரிய மருத்துவ முன்னோடிகள் நம் நாட்டில் விளங்கியிருக்கிறார்கள். சித்தர்கள் ஜகஜ்ஜால வித்தை புரிந்திருக்கிறார்கள்.

எந்த மூலிகை, எந்த வியாதியைத் தீர்க்கும் என்று கண்டுபிடிப்பதே, ஒரு விஞ்ஞானத் திறமைதானே !

இந்தத் திறமை இரண்டாயிரம் ஆண்டு காலமாக இந்தியர்களுக்கும், சீனர்களுக்கும் மட்டுமே இருந்து வந்திருக்கிறது.

இரண்டு நாட்டு மருத்துவத்துக்கும் போகர் தான் தலைவர் என்பதைக் கேள்விப்பட்டால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.

அண்மையில் கோலாலம்பூரில் ஒரு சீனர் நடத்திய விருந்தில் நான் கலந்து கொண்டேன்; அவரும் இதைத்தான் சொன்னார்.

இந்திய மருத்துவத்துக்கு ஒரு பலமான அஸ்திவாரம் இருந்ததால், அதோடு அலோபதிமருத்துவமும் சேர்ந்து இந்திய மருத்துவர்களை உலகத்திலேயே சிறந்த மருத்துவர்களாக ஆக்கியிருக்கிறது.

மனிதன் தானே வரவழைத்துக் கொள்ளும் நோய்களுக்கு இந்தியர்கள் எப்பொழுதோ மருந்து கண்டுபிடித்து விட்டார்கள்.

இயற்கையாக வருவது, தீர்க்க முடியாதது என்று கருதப்பட்ட புற்றுநோய் முதலியவற்றைக் 'கரும நோய்' என்று கூறிவிட்டார்கள்.

அத்தகைய நோய்களைத் தீர்ப்பதில் அலோபதிதான் முன்னேறியிருக்கிறது.

அலோபதியில் பட்டம் பெற்ற ஒரு டாக்டர் இந்தியராக இருந்தால் அவருக்குத் தாய் வழியில் ஆயுர்வேதமும், சித்தமும் துணையாக வந்திருக்கின்றன.

அதனால் மற்ற நாட்டு மருத்துவர்களுக்கு இல்லாத ஒரு தனித் திறமை இந்தியர்களுக்கு இருக்கிறது.

விசித்திரமான புதிய நோய்களைத் தவிர மற்ற எந்த நோய்களையும் தீர்க்கக் கூடிய சக்தி, இந்திய டாக்டர்களுக்குக் கைவந்த கலையாகிவிட்டது.

நான் போன சில நாடுகளில் நல்ல மருத்துவர்களே கிடைக்கவில்லை. அங்கெல்லாம் எனக்கு இந்தியாவின் ஞாபகமே வந்துகொண்டிருந்தது.

மருத்துவத் துறைக்குத் தேவையான புதிய கருவிகளை நாம் அதிகம் தயாரிக்காதது நமக்குள்ள பெரிய குறை.

ஆகவே அத்தகைய கருவிகளை வரவழைப்பதில் டாக்டர்களுக்கு அந்நிய நாணயச் செலாவணி அதிகம் வழங்கப்பட வேண்டும். ,

ஜெனரல் ஆஸ்பத்திரிகளில் ஏழைகளுக்கு மட்டுமே மருத்துவம் பார்க்க வேண்டும்.

தனியார் ஆஸ்பத்திரிகளுக்கு அரசாங்கம் நிறையப் பொருளுதவி செய்து புதிய புதிய நர்சிங்ஹோம்களை உருவாக்குவதற்கு வழி செய்ய வேண்டும்.

மத்தியதர வர்க்கமும், பணக்காரர்களும் அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

வெளிநாட்டுக்காரர்கள் மருத்துவத்துக்கென்றே இந்தியாவுக்கு வருகின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

இந்திய மருத்துவப் படிப்பில் ஆயுர்வேதம், சித்தம், யுனானி மூன்றும் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். எம். பி. பி. எஸ். பட்டத்தோடு, அதற்கென்று ஒரு தனி 'டிப்ளமா'வும் வழங்கப்பட வேண்டும்.

அரேபியாவிலும், ஐரோப்பாவிலும் இந்திய மருத்துவர்களுக்கு நிறையக் கிராக்கி இருக்கிறது.

அவர்கள் அலோபதியோடு ஆயுர்வேதத்தையும், சித்த வைத்தியத்தையும் கற்றுக் கொண்டு போனால், அங்கிருக்கும் டாக்டர்களைத் திகைக்க வைக்க முடியும்.

மருத்துவக் கருவிகள் சுலபமாகக் கிடைக்க அரசாங்கம் துரிதமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

மருத்துவத் துறையில் ஒரு பெரிய சக்தி நம்மிடம் இருக்கிறது; அது சரியாக ஒழுங்குபடுத்தப்பட்டுப் பயன்படுத்தப்படவில்லை.

ஒரே மாதிரியான பாடத் திட்டத்திலிருந்து மருத்துவக்கல்லூரிகள் மாற்றப்படவேண்டும்.

ஆயுர்வேத, சித்த மருந்துகளை அலோபதியில் செய்து ஏற்றுமதிக்கு ஊக்கமளிக்க வேண்டும்.


'சரியான மருந்து' என்று மருத்துவக் கௌன்சில் ஒப்புக் கொள்கிற மருந்தை வெளிநாடுகளில் விளம்பரம் செய்யும் பொறுப்பையும், செலவையும் மத்திய அரசே மேற்கொள்ள வேண்டும்.

மலையைத் தாங்க மனிதர்கள் இருக்கிறார்கள் ; அதைத் தூக்கித் தலையில் வைக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் என்ன ?

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

எல்லா விதத்திலும் சிறந்த பல்புகள்

பிலிப்ஸ்



பிலிப்ஸ் பல்புகள்

பிலிப்ஸ்—லாம்ப் மற்றும் ஒளித்துறையில் முன்னோடிகள்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)